கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



YACM

KALKI ● 13.12.2009 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்

மெட்டமைப்பில்...
ஏராளமான
இசையுலக ஸ்டார்ஸ்
மினுக்கும்
சிறப்பிதழ்



சீஸன் ஸ்பெஷல்!





ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் அவர்களின்

16ஆவது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம்

"அபார கருணா ஸிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம்
ஸ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்"

நடமாடும் தெய்வமென்றும் ஜீவன்முக்தர் என்றும் கற்றோரும் மற்றோரும் போற்ற வாழ்ந்தவரும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 68ஆவது பீடாதிபதியாக 87 ஆண்டுகள் அருளாட்சி செய்து உலகெங்கும் ஞானமணம் பரவத் திகழ்ந்த ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் அவர்களின் 16ஆவது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம் நிகழும் விரோதி வருஷம் கார்த்திகை மாதம் 28ஆம் தேதி (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை (மார்க்கசிர க்ருஷ்ண பக்ஷ த்வாதசி) அன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜெயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் காஞ்சீபுரம் ஸ்ரீ மடம் அதிஷ்டான வளாகத்தில் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் நவாவதாரமாகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீமஹாஸ்வாமிகள் ஸநாதன தர்மத்திற்குப் புத்துயிர் கொடுத்தவர். இதன் பெருமையைத் தன் வாழ்வாலும் வாக்காலும் உலகறியச்செய்தவர். பாரத சமூகம் ஸநாதன தர்மத்தின் மூலவேராக இருக்கும் வேத நெறியிலிருந்து வழுவாத வண்ணம் காப்பாற்றியவர். ஆன்மிக உலகின் அருட்சுடராக 100 ஆண்டுகள் ஞான ஒளி பரப்பிவந்த இம்மஹானின் அணுகுமுறை தனித்தன்மை வாய்ந்தது. அண்டியவர் அனைவரும் தங்கள் குடும்பத்தில் ஒருவராக இவரைக் கண்டனர். ஆத்ம தர்சனம் பெற்றனர். எல்லா மதத்தலைவர்களாலும் போற்றப்பட்ட மஹாமுனிவராகத் திகழ்ந்தார். கடந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த தத்துவஞானியாகப் பிரகாசித்த இவர் இன்றும் அமூர்த்தமாக அதிஷ்டானத்தில் குடி கொண்டு வேண்டுவார் வேண்டுவன வேண்டும் வண்ணம் அருள்புரிந்து வருகிறார்.

விரோதி வருஷம் கார்த்திகை மாதம் 26ம் தேதி வெள்ளி மதல் 28ம் தேதி ஞாயிறு முடிய (11.12.2009 - 13.12.2009) மூன்று தினங்கள் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆராதனை மஹோத்ஸவம் நடைபெற இருக்கிறது. உற்சவ தினங்களில் வேத பாராயணம், வேத வித்வத்ஸதஸ், உபன்யாசங்கள், பஜனை, ஸங்கீதாஞ்சலி முதலியன நடைபெறும்.

என்றும் ஸ்ரீ மடத்தின் பணியில்

செல்லா வேங்கடேஸ்வர சர்மா
ஸ்ரீகார்யம் & ஏஜெண்ட்

ஸ்ரீ சாங்கர ஸம்வத்ஸரம் 2519
பாத்ரபத சுக்ல பஞ்சமி

ஸ்ரீ மாதா டிரஸ்ட்

ஜாதி மத இன சார்பு அற்ற ஏழை புற்று நோயாளிகளுக்கு புகலிடம் தரும் தொண்டு நிறுவனம்

ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற இந்த தொண்டு நிறுவனம், ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன் திருமலை "பாலாஜி" தெய்வ சன்னிதானத்தில் ஜகத்குருவின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான பக்தர் IOC Krishnamoorthy அவர்களை ஸ்தாபகராக நியமனம் செய்து ஆரம்பிக்கப்பட்டது.

அதிக துன்பத்திற்கு ஆளாகும் "புற்று நோயாளிகளில்" மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு பாடுபட்டு வரும் அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட், ராஜஸ்தானி அசோசியேஷன் (தமிழ்நாடு)ன் பண உதவியால் இந்த நோயாளிகளுக்கான காப்பகத்தை கட்டி பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்கள்.

இந்த ஸ்தாபனம் ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி, "ஸ்ரீ மாதா டிரஸ்ட்" இந்த தர்மசாலாவை பராமரிக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஆகஸ்டு மாதம் 2000ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அன்றிலிருந்து இன்று வரை எந்தவித தொய்வும் இன்றி, பொதுமக்கள் - நல்ல உள்ளங்கள் அளித்து வரும் நன்கொடைகளின் உதவியின் பலனாக, பல மாகாணங்களிலிருந்து சென்னை அடையாறு புற்று நோய் மருத்துவமனைக்கு புறநோயாளிகளாக வரும் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கும் உடன் வரும் அவர்களது ஒரு உதவியாளருக்கும் இலவசமாக உணவும், இருக்க இடமும் கொடுத்து காப்பாற்றி வருகிறது இந்த ஸ்ரீ மாதா டிரஸ்ட்.

நீங்கள் எங்கள் தர்மசாலாவிற்கு விஜயம் செய்து நேரில் பார்த்த பிறகு உங்கள் உதவிகளை இப்படி அளிக்கலாமே ...

- ஒரு நாளைக்கு ஒரு நோயாளியின் உணவுக்காக ரூ.80 அளிக்கலாம்.
- ஒவ்வொரு மாதமும் ஒரு நோயாளி என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதற்கும் ரூ.1000 அளிக்கலாம்.
- இந்த தர்மசாலாவில் தங்கும் 250 முதல் 300 வரை உள்ள நோயாளிகளுக்கு ஒரு நாள் சாப்பாடு செலவான ரூ.8000 அளிக்கலாம்.
- ஏழை நோயாளிகளுக்கு மதிய உணவு அல்லது இரவு உணவு அளிக்க ரூ.3000 வழங்கலாம்.
- காலை சிற்றுண்டி மட்டும் கொடுக்க ரூ.2000 வழங்கலாம்.
- காலை முதல் இரவு வரை முழு நாள் உணவை ஆண்டுக்கு ஒரு முறை உங்கள் சார்பாக வழங்க ரூ.75000 கொடுத்து நீங்கள் ஒரு "வள்ளல்" ஆகலாம். நீங்கள் கொடுக்கும் இந்த தொகை டிரஸ்டின் காப்பு நிதியில் சேர்க்கப்பட்டு, அதன் வட்டியிலிருந்து இந்த தர்மம் செய்யப்படும்.
- பெரிய மனதுடன் ரூ.100000 கொடுத்து, நீங்கள் இந்த புனித சேவையின் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம்.

நீங்கள் அளிக்கும் நன்கொடையை, "SRI MATHA TRUST" என்ற பெயரில் காசோலையாக அனுப்பி வைக்கலாம். நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு **80(G)** பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு

வி.கிருஷ்ணமூர்த்தி

நிர்வாக அலுவலகம்: ஸ்ரீ மாதா டிரஸ்ட்,
"குரு கிருபா", 3, சாஸ்தா அவென்யூ,
திருமழிசை தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.



நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர், கைபேசி: 94440 01065

ஸ்ரீ மாதா டிரஸ்ட், ராஜஸ்தானி தர்மசாலா,
பழைய கேன்சர் இன்ஸ்டிட்யூட் வளாகம்,
ஈஸ்ட் கனால் பேங்க் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Phone: 2442 0727 / 2440 4950

உங்கள் சேவை தொடர, தொடர்புகொள்ளுங்கள் : திரு.காமாட்சிமணி - 93848 33325
அரிமா.என்.சங்கரம் - 93848 20727 திருமதி எஸ்.ரமா - 93810 20727 | திரு.ஏ.அமெரிக்கன் - 9003247857

Sponsored Advt.

''ஹலோ... எத்திராஜ் (YACM செயலாளர்), நான் கல்கி ஆசிரியர் பேசறேன். இந்த வருஷம் கல்கி சீஸன் ஸ்பெஷல் இதழைத் தயாரிக்கிற பொறுப்பை YACM குழுவுக்குத் தரலாம்னு ஒரு எண்ணம் இருக்கு. நீங்க ரெடியா...?''

''நிஜமாதான் கேட்கறீங்களா...?''

''சும்மா விளையாட்டுக்குப் பேச டைம் இல்லைப்பா... சீஸன் நம்மளை ஓவர்டேக் பண்ணிப் போயிடும்... நீங்க ரெடியா... இல்லையா?''

''டபுள் ஓ.கே. டு கல்கி! இது எங்களுக்குக் கிடைச்சுருக்கற க்ரேட் ஆப்பர்ச்சூனிட்டி. நாங்க எப்போ கல்கி ஆஃபிஸுக்கு வரணும்... என்னென்ன பண்ணணும்?''

- இப்படித்தான் இந்த இதழைத் தயாரிக்கும் பணிக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. ஆசிரியர் குழுவோடு சந்திப்பு, விவாதம், திட்டமிடல்... அது தொடர்பான வேலைகள் என ஓடிய சுமார் மூன்று வாரங்கள் நினைவில் தித்திப்பானவை. கர்நாடக சங்கீதத்துக்கு சீரியஸ் கவரேஜ் தர்ற கல்கி பேர்ல மியூசிக் உலகத்துக்குத் தனி மரியாதை. சீஸனுக்கு நாங்கள் தயாராகிக் கொண்டே கல்கி மியூசிக் ஸ்பெஷலையும் தயாரிக்க உதவினோம்.

டிசம்பர் சீஸனில் எல்லா பத்திரிகைகளும் மியூஸிக் ஸ்பெஷல் வெளியிட்டாலும் கல்கியோ - சீஸன் ஸ்பெஷல் இதழின் மீதுதான் ஒவ்வொரு கலைஞனின், ரசிகனின், விமர்சகனின் கவனமும் இருக்கும். காரணம், அட்டைப் படம் முதல் இதழினுள் அலங்கரிக்கும் துணுக்குகள் வரை எல்லாம் ஒரு காரண காரியத்தோடே அச்சாகியிருக்கும். கல்கியில் ஒரு கர்நாடக சங்கீதக் கலைஞனைப்

* எத்திராஜன் * அனிருத் ஆத்ரேயா * சந்திரசேகர ஷர்மா * சித்விக் * தாரிணி * ரம்யா கண்ணன்



தோளில் தூக்கும் தோழன்!

YACM நிர்வாகக் குழு - படம் : ஸ்ரீஹரி

பற்றி செய்தி வந்தால், சாதாரணமாக எல்லாரும் சொல்வதுபோல மோதிரக் கையால் குட்டுப் பெற்ற ராசிதான். காரணம், 'கல்கி'யின் பின்னணியில் இருக்கும் இசைப் பாரம்பரியம்தான். 'அந்த மோதிரக் கையைப் பற்றி நடக்க, ஓர் இதழைத் தயாரிக்க ஒய்.ஏ.சி.எம். அழைக்கப்பட்டது ஏன்?'னு யோசிச்சுப் பார்க்கறோம். இளைஞர்களுக்கான கர்நாடக சங்கீத அமைப்பாக 1985, ஆகஸ்ட் 5ல் ஆரம்பிக்கப்பட்டது YACM (Youth Association for Classical Music). இன்னைக்கு கர்நாடிக் மியூசிக் உலகத்துல இத்தனை இளைஞர்கள் தன்னம்பிக்கையோட பிரகாசிக்கறாங்கன்னா அதுக்கு ஒய்.ஏ.சி.எம். வகுத்த பாதை ஒரு முக்கிய காரணம். இது வெள்ளி விழா ஆண்டு. இந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தில், பல முக்கியமான சந்தர்ப்பங்களில் எங்களைத் தோளில் தூக்கி வைத்து வெளிச்சப்படுத்தி இருக்கிறது கல்கி. எங்கள் அமைப்பின் வளர்ச்சியைக் கவனித்துத் தோழமையுடன் வாழ்த்தியிருக்கிறது; அவசியப்பட்டபோது விமர்சித்து எச்சரித்தும் இருக்கிறது!

ஆகஸ்டு மாதம் YACM சில்வர் ஜூபிலியை எட்டு நாட்கள் விமரிசையா கொண்டாடப் போறோம். இப்பவே அதுக்குத் தோரணம் கட்டின மாதிரி கல்கி சீஸன் இதழைத் தயாரிக்கிற வாய்ப்பு!

YACMலேருந்து 'த்வனி'ங்கிற இசை மாத இதழை நாங்கள் கொண்டு வந்தாலும், எங்களுக்கு கல்கியின் சீஸன் ஸ்பெஷல் தயாரிப்புப் பணி மாறுபட்ட, சவாலான அனுபவமாகவே இருந்தது!

நாங்கள் திட்டமிட்டவை பல. அதில் செயல்படுத்த முடிந்தவை சில.

எங்களின் ஐடியாக்கள் கர்நாடக சங்கீத ரசிகனின், கலைஞனின், ரசனையைக் கொஞ்சம் அசைத்தால் அல்லது விவாதத்தைக் கிளப்பினால், அதை எங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறோம்.

இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்த கல்கி ஆசிரியர் குழுவுக்கு நன்றிகள். எங்களுக்கு இசையைப் பயிற்றுவிக்கிற எங்கள் குருக்களுக்கு நமஸ்காரங்கள்!

அன்புடன்
YACM

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

காலேஜ் விசிட்!

கோவையின் இயல்பான குளிர்ச்சியோடு இசையின் கலவையும் சேர்ந்து காற்றைத் தித்திப்பாக்கிக் கொண்டிருந்தது - கோவை அரசு இசைக் கல்லூரி வளாகம். நவரசங்களையும் உருவாக்கி, கடவுளையே கட்டியிழுத்துக் கண்முன்னே நிறுத்தும் இசைக் கலைஞர்களைச் செதுக்கும் இவ்விடம், சராசரி காலேஜ்களைவிட கொஞ்சம் உசத்திதான்! மியூஸிக் ஸ்பெஷலுக்காக (செமஸ்டர் புயல் சின்னம் உருவாகியுள்ள நிலையில்) ஒரு விஸிட் செய்ய நினைத்து உள் நுழைந்த போது...

கட்டுக்கோப்பான இசைக்கல்லூரியில் காமெடிக்கும் கலாட்டாவுக்கும் கடும் பஞ்சம் நிலவும்னு பயந்து கொண்டு போனால்... கச்சேரியில் கைத்தட்டுறா மாதிரி ஸ்டுடன்ட்ஸ் சடசடன்னு அவிழ்த்து விட்டாங்க பாருங்க... ''எங்க காலேஜ் ஸ்டுடன்ட் ஒவ்வொருத்தருக்கும் ஒரு நிக் நேம் உண்டு'' என்றார் இந்து. ''அதைச் சொல்லிக் கூப்பிட்டாலும், கோவிச்சுக்காம ரசிச்சுக்கிட்டே தான் இருப்போம். மணிமேகலை கொஞ்சம் செஞ்சு வெச்சாப்போல தாட்டியா உருண்டு உருண்டு வர்றதால, அவளுக்கு 'செஞ்சுருட்டி'ன்னு ராகத்தோட பேரைத்தான்



* ஸ்ருதி லீலா



* கண்ணாடி ஜோனி



நாமகரணமாக்கியிருக்கிறோம். குந்தின இடத்திலே தன்னோட எல்லா வேலையையும் சூப்பரா முடிக்கிற துர்க்கை அருளனுக்கு 'குந்தலவராளி'! பேக்கு மாதிரி திருதிருன்னு முழிக்கிற ஜானகிக்கு 'பேகடா'; தொணதொணன்னு கிளாஸ்ல பேசுற கிரிதரன் 'தர்பார்'; எதையாவது மென்னு மென்னு வாய் அசைந்தபடியிருக்கும் ஸ்ருதி லீலாவுக்கு சுருதிப் பெட்டி... இப்படி ஒவ்வொருத்தரோட குணத்துக்கும் மனத்துக்கும் ஏத்த மாதிரி சங்கீதப் புனைபெயரா சூட்டுவோம். அவங்களும் அந்தக் கௌரவப் பட்டத்தை டாக்டர் பட்டம் மாதிரி சங்கடப்படாம வாங்கிப்பாங்க'' என்றார்.


''இங்க ராகிங் கிடையாது. ஆனா புதுசா


✱ கிரிதரன்


✱ துர்க்கை அருளன்

கத்துக்க வர்ற சிஷ்யப் புள்ளைகள வர்ற வழியிலேயே கோழிக்குஞ்சை அமுக்குறா மாதிரி அமுக்கிடுவோம். அவங்க வெட வெடத்து நிக்கும்போது 'செல்லங்களே உங்க தேன்பூசிய மேக்னட் குரலில் ஒரு பாட்டுப் பாடுங்க அதுபோதும்'னு சொல்வோம். பாடி ஓய்ந்ததும் 'ஸ்ருதி எங்கே போச்சு? ராகம் ஏன் நொண்டிச்சு? தாளம் ஏன் தயங்கித் தயங்கி ஒளியுது?'ன்னு நக்கீரன் கணக்கா கேப்போம். அப்போ தானே மூத்த கலைஞர்கள்கிட்ட மதிப்பு வரும்?'' என்று நம்மிடமே கேட்டார்கள் சீனியர்ஸ்.

நான் செஞ்சுருட்டினா... நீ பேகடா!



''இங்க பட்டிமன்றம் நடந்தாக் கூட அது பாட்டு மன்றமாத்தான் இருக்கும். வாதம் விவாதம்னா கூட ஆனந்த பைரவி Vs பந்துவராளியாகத்தான் இருக்கும். அப்படித்தான் தலைப்பு கொடுப்போம். எல்லாம் ராகமயம்தான்''

✱ மணிமேகலை



✱ இந்து



"'கல்யாணி'யைத் தெரியாதவர்கள் யாருமில்லை..."

என்றார் இசை இலக்கண விரிவுரையாளர் ஜெயந்தி.

மற்ற கல்லூரிக்கும் இசைக் கல்லூரிக்கும் நிறைய வித்தியாசங்க... உணர்வும் அறிவும் ஒன்னு சேரணும். பழமையில் கொஞ்சம் ஊறித் திளைக்கணும். எல்லாம் சரி... இசை படிச்சா புவ்வாவுக்கு வழி உண்டா? முக்கியமான கேள்வியை முதல்வரிடமே கேட்கலாம்னு போனோம்...

''இங்கு படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்புபெற்றவர்கள் நூறு சதவிகிதம். குறைந்த செலவில் உதவித் தொகையோடு இங்கு இசை கற்பிக்கப்படுகிறது'' எங்கிறார் கல்லூரி முதல்வர் டாக்டர் பாலப்பட்டு இராஜேந்திரன். ''எவ்வளவோ ராகங்கள் கர்நாடக இசையுலகிலிருந்து தமிழ்த் திரைக்குப் போயிருக்கின்றன. குறிப்பா, 'மன்னவன் வந்தானடி...' 'சிந்தனை செய் மனமே...' என்ற அக்காலப் பாடல்களும் இளையராஜாவின் 'அம்மா என்றழைக்காத உயிரில்லையே' என்ற பாடலும் கல்யாணி ராகத்தில் காந்தமாய் என்னை ஈர்த்தவை. முதலாளியிலிருந்து தொழிலாளி வரை கல்யாணியைத் தெரியாதவர்கள் யாருமில்லை'' என்று நினைவுகளை அசைபோடுகிறார். அட! கல்யாணி ராகம் நமக்கும் அத்துப்படிதான் என்றே தோன்றியது அந்த நேரத்தில்.



* டாக்டர் பாலப்பட்டு இராஜேந்திரன்



* ஜெயந்தி

செய்தி : **ஆர். பாலா**

படங்கள்: **சின்னராஜ்**

* சீனிவாசன்



"**உ**ன்னால் மூக்கால் புல்லாங்குழல் வாசிக்க முடியுமா?" நண்பன் சரவணன் கேட்ட கேள்வி சீனிவாசனை உறங்க விடவில்லை. ஒரு நாள் முயன்று பார்த்திருக்கிறார். ஆரம்பத்தில் காற்றாக வெளிப்பட்ட ஓசை, ஒலியாக உருப்பெற்று இன்று சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பாடல்களை மூக்கு வழியாக புல்லாங்குழல் வைத்து வாசிக்கிறார்! கல்லூரியில் பயின்ற காலத்தில், இசைப் போட்டியில் இசைக் கல்லூரி மாணவர்களுடன் போட்டியிட்டு, இசையே படித்திராத சீனிவாசன் மூன்றாம் பரிசைத் தட்டியிருக்கிறார். அரசு ஆசிரியர் பயிற்றுனராக உதகையில் வேலை பார்க்கும் இவர், ''தேவாரம், திருக்குறளை மூக்கில் புல்லாங்குழல் பொருத்திப் பாடுவது இலட்சியம்'' என்கிறார்

செய்திச் சித்திரம் : **சின்னராஜ்**



A. சுகுமாரன்

"Congrats Mr. Nagarajan"

"தேங்க்ஸ் சோமு."

"இப்ப என்ன டெஸிக்னேஷன் சார்."

"நௌ ஐயாம் சூப்பரின்டென்டிங் என்ஜினியர். அப்புறம் சோமு! ஹௌ ஈஸ் லைஃப்?"

"ஃபைன் சார். உங்க இரண்டாவது பையன் என்ன செய்யறார்? டிகிரி முடிச்சுட்டாரா?"

"முடிச்சுட்டான். வெளிநாட்டில போய்ப் படிக்கணும்கிறான். ஆஸ்ட்ரேலியாவில் இந்தியன் ஸ்டூடண்ட்ஸை அடிக்கிறான், ஸ்க்ரு டிரைவர்ல குத்துறான்னு பேப்பர்ல படிச்சதுலேருந்து ஒரே குழப்பம்."

"ஏன் சார் என்ன குழப்பம்? ஆஸ்ட்ரேலியா இல்லைனா மேற்படிப்பு படிக்க முடியாதா? என் பையன் சிங்கப்பூர்லேயே ஆஸ்ட்ரேலியன் MBA முடிச்சுட்டு 4 வருஷமா வேலை பார்க்குறான்."

"அப்படியா, சோமு?"

"ஆஸ்ட்ரேலியன், U.K. டிகிரி, மாஸ்ட்டர்ஸ் எல்லாம் சிங்கப்பூர்லியே படிக்கலாம். செலவும் கம்மி, அவசரத்துக்கு நம்ம கூட சட்டுன்னு போய்ட்டு வந்துக்கலாம்."

"உங்க பையன் எந்த MBA படிச்சான்?"

"அவன் U.K. வில் இருக்குற University of Wales உடைய MBA வை 1 வருஷத்தில சிங்கப்பூர்ல படிச்சான். UK உடைய Bradford University, Coventry University, Northumbria University, ஆஸ்ட்ரேலியாவுடைய University of Southern Queensland, Victoria University, University of Southern Cross, R.M.I.T. University, Edith Cowan University ம்ம்... அப்புறம் ஜேம்ஸ் குக் யுனிவர்சிடி, Curtin University இன்னும் சில.... எல்லா டிகிரி, மாஸ்டர்ஸ் கோர்ஸும் சிங்கப்பூர்லியே படிக்கலாம்."

"ஓ...! ஓ.கே. உன் பையன் job சம்பளம் எல்லாம் எப்படி?"

"சார், சொன்னா ஆச்சர்யப்படுவிங்க. நான் இப்ப ஒரு த்ரீ பெட்ரூம் flat வாங்கினேன் இல்லே? நீங்ககூட பால் காய்ச்சறதுக்கு வந்தீங்களே?"

"ஆமாம்?"

"அந்த Flat வாங்கறதுக்கு Full Initial Amount-ம் என் பையன் ICICI மூலமா சிங்கப்பூர்லிருந்து அனுப்பியதுதான். ஒன்றை லட்சம் ரூபாய் (நம்ம காசுல) மாதச் சம்பளம் வாங்குறான். கல்யாணம் ஆகாத இந்த பீரியடுல அவன் செலவு 20,000/- ரூபாய்தான். மிச்சமெல்லாம் சேவிங்ஸ் பண்ணி அனுப்பிச்சான் சார். ஐயாம் ரியலி ஹாப்பி"

"வெரிகுட்! ஆமாம்... அவனே அப்ளை பண்ணி போனானா, சோமு?"

"இல்லே சார்! நான் சொன்னேனில்லே, என் பொண்ணுக்கு ஸ்வர்ணாலயா ஜூவல்லரிங்கற ராசியான கடையிலே நகை செஞ்சேன்னு. அவளோட மகனுக்கு பேர் வைக்கிற function கூட வருது. அந்தக் கடை M.D., Mr. சுகுமாரன் ஒரு எக்ஸ்-புரொபசர். அவர் **"Foreign Studies Bureau"** ங்கற Consultation Business- ஐ FREE யா பண்றாரு. அவர்தான் என் பையன் ராகுல் கூட உட்கார்ந்து, எல்லா Forms ம் Fill பண்ணி, விசா வாங்கிக் கொடுத்து, அனுப்பிச்சாரு. 5 வருஷம் ஆச்சு."

"அப்பிடியா?"

"ஆமா சார், நான் கூட்டிட்டுப் போறேன், பையனையும் அழைச்சுட்டுப் போலாம். வருஷத்துக்கு 3, 4 intake இருக்கு. NUS, NTU ங்கற கவர்ன்மெண்ட் யுனிவர்சிடியிலே இடம் கிடைக்கலே. இந்த ப்ரைவேட் யுனிவர்சிடிகள், காலேஜ்கள் வருஷத்துக்கு 3 அல்லது 4 அட்மிஷன் பண்றாங்க."

"வெரிகுட் சோமு! தெரியாம போச்சே! சரி அவங்க நம்பர் கொடு... ஆபீஸ் எங்கே?"

"எழுதிக்கங்க சார்! 93810 20107, இன்னொரு நம்பர் 42125353 ஈ-மெயில்: foreignstudies@gmail.com அவங்க website: www.foreignstudies.in கடைக்கு உள்ளேயேதான் counselling பண்றார். நம்பர் 5, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர் சுகுமார் சார் பையனே சிங்கப்பூர்ல போய்ப் படிச்சுட்டு அங்கேயே செட்டில் ஆயிட்டான். என் son க்கும் best friend, நல்ல family சார், நம்பி அனுப்பலாம்."

"தேங்கஸ் சோமு! ஸோ நைஸ் ஆஃப் யூ! நானும் இப்பவே பேசிடுறேன். அப்பாய்ண்ட்மெண்ட் fix பண்ணிட்டு நாம போலாம்."

"OK சார். Bye சார். அதோடே, Promotion க்கு ஒரு ட்ரீட்! மறந்துடாதீங்க."



தமிழ்நாட்டில் இடைத் தேர்தல் மீண்டும் களைகட்டி விட்டது. அ.தி.மு.க.வும் களத்தில் நிற்க, தே.மு.தி.க.வின் வாக்குவங்கி அடிவாங்குமா? அவர்களின் திட்டம்தான் என்ன? இது போன்ற கேள்விகளோடு அவைத் தலைவர் பண்ருட்டி ராமசந்திரனைச் சந்தித்தோம்...



தி.மு.க. அரசை எதிர்த்து எதுபோன்ற பிரச்னைகளை மக்கள் முன் வைப்பீர்கள்?

''விலைவாசி, நிர்வாகத்தில் ஊழல், சட்டம் - ஒழுங்கு, ஈழத் தமிழர் பிரச்னை, தேர்தல்களில் அதிகார துஷ்பிரயோகம், பணவிநியோகம், முல்லைப் பெரியாறு, எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதன்மூலம் ஜனநாயகத்தைச் சீர்குலைக்கச் செய்வது... என்று கருணாநிதி அரசை எதிர்த்து மக்கள் முன்பு வைக்க நிறையவே பிரச்னைகள் இருக்கின்றன.''

எதிர்க்கட்சிகளை ஒடுக்குகிறார்களா?

''ஆமாம். தமிழ்நாட்டில் கணிசமான வாக்குவங்கியை வைத்திருக்கும் முக்கிய எதிர்க்கட்சி நாங்கள். ஆனால், நாங்கள் அறிக்கை கொடுத்தால், அச்சு ஊடகங்களில் ஏதோ பெயருக்குப் போடுகிறார்களே தவிர, முக்கியமான - ஆளும் கட்சிக்கு எதிரான - விஷயங்களை நீக்கி விடுகிறார்கள். ஜனநாயகத்தில் இரு தரப்பு கருத்துகளும் மக்களிடம் செல்ல வேண்டியது அவசியமல்லவா! ஒரு கொலை விவகாரத்தில் சட்டப்படியும், நியாயப்படியும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேப்டன் விஜயகாந்த் அறிக்கை விட்டால், போலீஸார் மூலம் விசாரணை என்று மிரட்டுகிறார்கள். ஆக்டோபஸ் போல அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்திருக்கும் கருணாநிதி குடும்பத்தால், தமிழ்நாட்டில் ஜனநாயகத்துக்குப் பேராபத்து. கூட்டணிக் கட்சி என்பதால் கண்ணைக் கட்டிக்கொண்டு நிற்கிறது மத்திய அரசு.''

இந்த இடைத்தேர்தல்களில் அ.தி.மு.க.வும் களத்தில் இருப்பதால் உங்கள் வாக்குகள் குறையுமே?

''கருணாநிதி, ஜெயலலிதா என்று இருவரையும் பிடிக்காதவர்கள்தான் எங்களை ஆதரிக்கிறார்கள். குறிப்பாக இளைய தலைமுறை, தமிழ்நாட்டில் நல்ல அரசியல் சூழல் வர வேண்டுமென்று விரும்புகிறது. ஆகவே, அவர்கள் எங்களை ஆதரிக்கிறார்கள். பிறகு எப்படி வாக்குகள் குறையும்?''

எம்.ஜி.ஆர் வாக்குவங்கி யாருக்கு?

''ஜெயலலிதாவின் செயல்பாடுகளைப் பார்த்து வெறுத்துப்போன

தோல்வியடையவே

எம்.ஜி.ஆர். தொண்டர்கள், எங்களை ஆதரிக்கிறார்கள். ஆனால், எம்.ஜி.ஆர். வாக்கு வங்கியை மட்டும்



நம்பி நாங்கள் தேர்தலில் நிற்கவில்லை. தமிழ்நாட்டில் புதிய அரசியல் மலர வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் எங்களை ஆதரிக்கிறார்கள். எத்தகைய கூட்டணி அமைந்தாலும், எத்தனை பணம் கொடுத்தாலும் எங்கள் வாக்குவங்கியை உடைக்க முடியாது.''

இடைக்கால ஏற்பாடாக தே.மு.தி.க ஒரு கூட்டணி அமைப்பதென்றால், உங்களின் இயல்பான, இயற்கையான தோழமைக் கட்சி எது?

''ஊழல் மற்றும் வறுமை ஒழிப்புதான் எங்கள் நோக்கம். அந்த அடிப்படையில் கருணாநிதியோடும், ஜெயலலிதாவோடும் நாங்கள் கூட்டணி வைத்துக் கொள்ள முடியாது. தமிழக அரசியலில் புதிய மாற்றம் ஏற்பட வேண்டுமென்று கருதுபவர்களோடு கூட்டணி பற்றிப் பரிசீலிக்கலாம். ஆட்சி மாற்றத்துக்கான தேர்தல் வரும்போது இது குறித்துச் சிந்திப்போம்.''

ஒவ்வொரு தேர்தலிலும் தோல்வியடையும்போது, 'போட்டியிடுவதே தோல்வியடையத்தானே' என்று உங்கள் தொண்டர்களுக்குச் சலிப்பு வராதா?

''தே.மு.தி.க தொண்டர்கள் கட்சி. துவங்கி நான்கே ஆண்டுகள்தான் ஆகின்றன. தமிழ்நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருந்தும் மக்கள் எங்களுக்கென்று ஓர் இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆதரவுத் தளம் உயர்ந்து கொண்டே போகும். அப்படி ஒரு நம்பிக்கை எங்கள் நெஞ்சத்தில் நிறைந்திருக்க நாங்கள் ஏன் உற்சாகத்தை இழக்க வேண்டும்?''

- ப்ரியன்



போட்டியா?

கலைஞர் உலகம்

கச்சேரி எலெக்ஷனில் இரண்டு கட்சிகள்!



அம்ருதா முரளி

''இன்றைக்கு சேஷகோபாலன், நாளைக்கு மாண்டலின், அதுக்கடுத்த நாள் கலாக்ஷேத்ரா...'' என்று ரசிகர்கள் சீசன் டைரியைப் பிரித்து வைத்துக் கொண்டு ப்ளான் போடுவது உண்டு. (எந்த கேன்டீனில் என்ன சாப்பிடணும்; என்றைக்கு எந்தப் புடைவை என்கிற கூடுதல் ப்ளானிங்கும் இருக்கும்!) வேறு பல ரசிகர்கள் திட்டமிடலைத் துறந்து, மூடுக்கு ஏற்ற வாறு மாறி மாறி நிகழ்ச்சிகளை நாடுவதும் உண்டு.

கலைஞர்களும் அதே மாதிரிதான். சிலர் ப்ளானிங் கமிஷன் சேர்மன் போல தங்கள் நிகழ்ச்சியைத் திட்டமிட்டுக் கொள்வார்கள்! வேறு சிலர், 'அந்த மாதிரி சிறைக்குள்ளேயெல்லாம் சிக்கிக் கொள்ள மாட்டேன்' என்று துடைத்து வைத்த 'ப்ளாக் போர்ட்' மாதிரி மைக் முன்னால் போய் உட்கார்ந்து விடுவார்கள்!

இதிலே வேடிக்கை என்னவென்றால், கச்சேரி எலெக்ஷனில் இந்த இரண்டு கட்சிகளுமே அமோகமாக ஜெயிக்கும்!

இன்றைய ரசிகர்கள், இன்டர்நெட் என்கிற ராக்ஷஸ வஸ்துவின் துணையுடன் புதிதுபுதிதான சங்கீத விஷயங்களையும் சத்தான கீர்த்தனைகளையும் தெரிந்து வைத்துக்கொண்டு, கச்சேரிக்கு வருகிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகள், சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் வேறுபட்டதாகவும் மேலதிகமாவும் இருக்கின்றன!

இந்த எதிர்பார்ப்புகளை இன்றைய கலைஞர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள்? தாங்கள் போட்டுள்ள திட்டங்களை ரசிகர்களுக்காகத் தளர்த்திக் கொள்வார்களா? 'நேயர் விருப்பம்' நிறைவேற்றுவதற்காகத் தங்களுக்குச் சௌகரியமான ஒரு பிரதேசத்தை விட்டு வெளியேறி வர அவர்கள் தயாரா? சில இளம் கலைஞர்களிடம் கேட்டோம்.

''எல்லோருமே அரியக்குடி அமைத்த கச்சேரி பந்ததி



யைத்தானே கடைப்பிடிக்கிறோம். வர்ணம், ஒரு சுறுசுறுப்பான கீர்த்தனை, அதுக்கு அப்புறம் சற்று மனோதர்மத்துடன் கூடிய ஒரு பெரிய பாட்டு. அதற்குப் பிறகு மெயின் ராகம்... இது தான் பாரம்பரியமான முறை...'' என்கிறார் நிஷா ராஜகோபால்.

பிரசன்னா வெங்கட்ராமன் இந்தக் கருத்தை ஆமோதிக்கிறார்: ''ஆமாம்...ஏற்கெனவே ஓர் அழகான, முழுமையான கச்சேரி அமைப்பு புழக்கத்தில் இருக்கு. பல விஷயங்களை யோசிச்சுத்தான் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கு. 'டெம்ப்போ' மட்டுமில்லை; ராகங்களோட தேர்வு, பிரதி மத்யம ராகம் வருகிறதா, இரண்டு காந்தாரங்களோட வேறு பாடு மூலமா mood change கொண்டு வரணும்... ஒரே தாளத்தில் எல்லா ஐட்டமும் அமைந்துவிடக்கூடாது. காலப் பிரமாணத்துலயும் அழகா மாறுதல் காண்பிக்கணும்... இப்படி அத்தனை விஷயங்களையும் யோசித்துத்தான் கச்சேரி பந்ததி அமைக்கப்பட்டிருக்கு...''


● நிஷா ராஜகோபால்

வித்யா கல்யாணராமன் கொஞ்சம் துணிச்சல்காரர். ''சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்ப இந்தப் பந்ததியை மாற்றிக்கறது தப்பில்லை'' என்கிறார். ''ரசிகர்களுக்காகத்தானே பாடறோம்... அவர்கள் ஆசையாகக் கேட்கும் ஒரு விருப்பத்துக்காக நிகழ்ச்சியமைப்பை மாற்றிக்கத் தயாரா இருக்கணும்'' என்கிறார்.

''சில சமயம் கச்சேரி ஹாலுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு சபா செயலாளர் நேயர் விருப்பம் கேட்கிறதுண்டு'' என்கிறார் மற்றொரு இளம் கலைஞரான அம்ருதா முரளி. ''ஏற்கெனவே நாம் போட்டிருக்கிற ப்ளானோட ரொம்ப மோதாமல் இருந்தால்தான் எந்த விருப்பத்தையும் பூர்த்தி செய்ய முடியும்'' என்கிறார்.

''தீமாடிக் (ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழான நிகழ்ச்சி) கச்சேரிகளின்போது நேயர் விருப்பங்களைப் பாடறது கொஞ்சம் கஷ்டம். ஏற்கெனவே ஒரு வரம்புக்குள்ளேதான் திட்டமிட்டிருப்போம்; அதை டிஸ்டர்ப் பண்ணாம இருந்தால்தான் நல்லது'' என்று நிஷா சுட்டிக்காட்ட, அம்ருதா வேறொரு விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறார்: ''சில சமயம் கச்சேரி முடிகிற தருணத்தில் ரொம்ப கனமான ஒரு கீர்த்தனைக்கு ரசிகர் விருப்பம் தெரிவித்துச் சீட்டு அனுப்புவார். அந்த மாதிரி சமயங்களில் அதைப் பாடுவது அந்தக் கீர்த்தனைக்கும் நியாயம் செய்வதாகாது; கச்சேரியின்

சங்கீதா வாசுதேவன்

மட்டுமின்றி அதற்கு முந்தையதையும் மாற்றிக் கொள்ள வேண்டியதா யிற்று. சவாலாகத்தான் இருந்தது. ஆனால், மகிழ்ச்சியோடு மாற்றிக் கொண்டேன்.'' - இது நிஷாவின் அனுபவம்.



* பிரசன்னா வெங்கட்ராமன்



* வித்யா கல்யாணராமன்

''கச்சேரி தினத்தில் நம் மனத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ராகத்தையே மேடையில் பாடுவது சௌகரியமாயிருக்கும். ஆனால், ரசிகர் விருப்பத்துக்கு இடங்கொடுத்து அதை மாற்றுகிறபோது நாம் வளர்கிறோம்; முதிர்ச்சியும் அடைகிறோம்...'' என்பது பிரசன்னா வெங்கட்ராமனின் கருத்து.

நமது சங்கீதம் சுகமானது மட்டுமில்லை; சவால்கள் நிறைந்தது - வருடிக் கொடுக்கவும் செய்யும்; அதிசயத்திலும் நம்மை ஆழ்த்தும்... ராகங்களும் தாளங்களும் இணைந்து சிருஷ்டிக்கும் ஓர் அற்புத உலகம் கலைஞருடையது. அதை எளிதில் யாரும் புரிந்துகொண்டுவிட முடியாது. அழகு மிக்க இந்த உலகில் ரசிகரும் சேரும்போது, இடமளிக்கவும் வேண்டும்; கலைஞன் தன் இடத்தை இழக்காமலும் இருக்க வேண்டும்! ○

தரத்தையும் பாதிக்கும். அதனால் ரசிகர்களிடம் ஸாரி கேட்டு விடுவது நல்லது.''

''ஒரு சமயம், நான் மெயினாகப் பாடத் திட்டமிட்டிருந்த 'மோகன ராமா' கீர்த்தனையையே எனக்கு முன் பாடிய கலைஞர் பாடிவிட்டார்! அப்புறம் எப்படி மாற்றாமல் இருப்பது!? அந்தப் பாட்டை

www.thedecemberseason.com.

சென்னையில் டிசம்பர் மாதம் கொண்டாடப்படும் இசை விழாக்கள் குறித்து அறிந்து கொள்ள உதவும் இணையதளம். நிகழ்ச்சி நிரல் குறித்த பட்டியலை வெளியிடுவது மட்டுமல்லாமல் உணவகம் மற்றும் தங்குமிடங்கள் குறித்த தகவல்களையும் சிபாரிசு செய்கிறது. நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்குச் செல்ல வழி விவரமும், ஆட்டோ, டாக்ஸி, பேருந்துக் கட்டணமும் கூடக் குறிப்பிடப்பட்டுள்ளன. இணையதளத்தின் மூலம் கச்சேரி, நாள், தேதி, இசைக் கலைஞர்கள், சபாக்கள் என எந்த அடிப்படையில் தேடினாலும் விவரங்கள் கிடைக்கும்.


மொத்தத்தில் இந்த இணையதளம், டிசம்பர் இசைத் திருவிழாக் காலத்தில் இசைப் பிரியர்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை விரல் நுனியில் பெற உதவுகிறது!







கல்கி



2009 டிசம்பர் 13
விரோதி கார்த்திகை 27
மலர் : 68
இதழ் : 20

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


இலங்கையில் சர்வாதிகார அபாயம்!


இலங்கையில் அதிபர் தேர்தலை முன்கூட்டியே நடத்த முடிவெத்துவிட்டார் ராஜபக்ஷய! முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவருமே ஜனவரி இறுதிக்குள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்ப ஆவன செய்யப்படும் என்றும் உறுதியளித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களின் நிலைமை இன்று முழுதும் சீரடைந்துவிட்டது என்று கூற முடியாது. இதற்கு முன் அவர்கள் நியாயமாக நடத்தப்பட்டார்கள்; அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டன என்றும் சொல்ல முடியாது. ஆனால், தமிழர்களின் உரிமைக்கு அரசியல் அங்கீகாரம் கிடைக்காதவாறு முட்டுக்கட்டையாக விடுதலைப்புலிகள் இருந்தனர் என்பதை ஏற்கத்தான் வேண்டும். அந்த வன்முறை - சர்வாதிகார இயக்கம் ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் இனியும் மறுக்கப்படுவதற்குக் காரணமே இல்லை. வட மாநிலத் தமிழர்கள் தங்கள் வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்கு ஏதுவாகத்தான் தேர்தலையே முன்கூட்டி நடத்துவதாக ராஜபக்ஷய சொல்கிறார்.

இந்தத் தருணத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு, ராஜபக்ஷயவை நம்புவதற்குத் தயக்கமாக இருப்பது இயல்பே. ஆனால், எக்காரணம் கொண்டும் வரவிருக்கும் தேர்தலில் அவர்கள் வாக்களிக்காமல் இருந்துவிடக் கூடாது.

ராஜபக்ஷயவுக்கு எதிராகப் புறப்பட்டிருக்கும் முன்னாள் ராணுவத் தலைவர் ஃபொன்ஸேகா, இலங்கை எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன்





அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பது தெளிவாகிவிட்டது. உலகெங்கிலுமே, இராணுவத் தலைவர்கள் ஜனநாயக முறையிலான அரசியலமைப்பில் பங்கேற்பது மரபுக்கு விரோதமாகக் கருதப்படுகிறது. இராணுவ அதிபர்கள் நாடாள வருகிறபோது, மோசமான சர்வாதிகாரிகளாக மாறுவார்கள் என்பதே வரலாறாகவும் இருந்து வருகிறது. ஃபொன்ஸேகா எவ்வளவுதான் வாக்குறுதிகளை அளித்தாலும், அவரை அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுப்பதன்மூலம் இலங்கை மக்கள் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்தவர்களாகி விடுவார்கள். தற்போதைய சூழலில், இலங்கைத் தமிழர்களின் ஆதரவு பெற்ற மூன்றாவது வேட்பாளரை நிறுத்தினால், வாக்குகள் பிளவுபடும். ஃபொன்ஸேகா வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். இராணுவத்தைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தி, யுத்தத்தை வென்ற ஃபொன்ஸேகா, சிறுபான்மைத் தமிழர்களின் நேசர் அல்ல என்பது பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருக்கிறது. "இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது," என்றும் "இங்கே சிறுபான்மையினர் வசிக்கலாம்; ஆனால் சிறுபான்மையினர் என்பதாலேயே அவர்களுக்கு அசாதாரண உரிமைகள் தருவதற்கில்லை" என்றும் வெளிப்படையாக அவர் பேசியதுண்டு. தமிழக அரசியல் தலைவர்களை 'கோமாளிகள்' என்று இவர் குறிப்பிட்டு, இலங்கை அரசை சங்கடப்படுத்தியதும் உண்டு.

இத்தகைய ஒருவர் இலங்கை அதிபராக அமராமல் இருப்பதுதான் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பு தரும். ஆகவே வரவிருக்கும் அதிபர் தேர்தலில் தமிழர்கள் விழிப்போடு வாக்களிக்க வேண்டும். உலகெங்கிலும் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புகள் விரைவில் யாழ்ப்பாணத்தில் கூடி, தேர்தலை எதிர்கொள்வது குறித்து முடிவுகள் எடுக்கும் என்று தெரிகிறது. அந்த முடிவு, தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவாக நிச்சயம் இருந்துவிடக் கூடாது! தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் நல்முடிவாக இருக்க வேண்டும். ○


* வித்யா கல்யாணராமன்

பக்கவாத்திய மேஜிக்!

அது இசை விழா சமயம். அன்று காலை பாட்டு வகுப்பில் என் அன்றைய குரு பத்மா சாண்டில்யன், எனக்கு சாவேரி ராக வர்ணம் கற்றுத் தந்தார். பின், அன்று மாலை, தலைசிறந்த வித்வான் ஒருவரின் கச்சேரி கேட்க அழைத்துச் சென்றார். முதலில் வித்வான் பாடியது, சாவேரி வர்ணம்! அவர் பாடிய விதமும், அதற்கு பக்கவாத்தியக் கலைஞர்கள் வாசித்த அழகும் என்னைப் பிரமிக்க வைத்தன. ''இந்த வர்ணத்தை, இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எத்தனை முறை சாதகம் செய்திருப்பார்கள்?''- குருவிடம் கேட்டேன். ''வயலின் வாசிக்கும் விதுஷி எனது நெருங்கிய தோழி. அவர் பல வருடங்கள் வெளிநாட்டில் இருந்த பின், இன்றுதான் இந்தியா வந்துள்ளார்; இன்றுதான் முதன் முதலாக இந்த வித்வானுக்கு அவர் வயலின் வாசிக்கிறார்.'' -இந்தப் பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''பல ஆண்டுகள் ஒன்றிணைந்து சாதகம் செய்தது போல அவ்வளவு 'understanding' எப்படி சாத்தியம்?''- குருவிடம்தான் கேட்டேன். ''அது நம் கர்நாடக சங்கீதத்தின் பெருமை. உனக்குப் போகப் போகப் புரியும்'' என்று சொன்னார். அந்த உண்மையை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்திருக்கிறேன்.


மேடையில் வாய்ப்பாட்டுக் கலைஞர், வயலின் கலைஞர், மிருதங்கக் கலைஞர், உப பக்கவாத்தியக் கலைஞர்... என்று எல்லா வித்வான்களும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்வது மிக மிக அவசியம். அநேகமாக கச்சேரியின் முதல் பாடலிலேயே அந்த 'மேடை ஒத்திசைவு' அமைந்துவிடும்.

வாய்ப்பாட்டுக் கலைஞர், பக்கவாத்தியத்தைப் புரிந்துகொண்டு, அது எப்படி கச்சேரியை உயர்த்திச் செல்கிறது என்பதை ரசிப்பதும், அதேபோல் பக்கவாத்தியக் கலைஞர்கள் பாடகர் பாடுவதைப் புரிந்துகொண்டு வாசிப்பதும், புதிய கீர்த்தனைகள் பாடும்போது அதற்கு ஏற்றாற்போல் வாசிப்பதும் நம் கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கே உரிய அழகு அம்சங்கள். இப்படி ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு, அனுசரணையாக இருந்து, கூட்டு முயற்சியில் வெற்றி பெறுவதுதான் நல்ல கச்சேரி.

- வித்யா கல்யாணராமன்


* எத்திராஜன்

''மெயின் ஆர்டிஸ்ட் என்ன பாடினாலும் ஈடுகொடுத்து வாசிக்க, பாடுகிறவருடைய மனசு எப்படிப் பயணம் செய்கிறதுன்னு புரிஞ்சுக்கற அனுபவமும், அவரோட கற்பனை எப்படியெல்லாம் திசை மாறும்னு எதிர்பார்த்துச் செயல்படும் கவனக் கூர்மையும் வேணும். வாத்தியம்தானே வாசிக்கிறோம்னு கீர்த்தனைகளைப் பாடம் பண்ணாமல் இருந்துட முடியாது. கச்சேரிகளில் புழக்கத்தில் இருக்கிற ஒவ்வொரு கீர்த்தனையும் பல்வேறு பாணிகளில் எப்படிப் பாடப்படுகிறதுன்ற அவுட்லைன் அறிவு இருக்கணும்... மேதைகள் எப்படி வாசிச்சாங்கன்னு ஒலிப்பதிவுகளைக் கேட்கணும்'' என்கிறார் இளம் மிருதங்கக் கலைஞர் எத்திராஜன்.



The Generation Of the Fashion World
NARAYANA PEARLS
NARAYANA PEARLS GEMS & JEWELS
Offer 10%
ORIGINAL
NARAYANA PEARLS®
GEMS & JEWELS
Main Showroom : "Sudhas Paradise" No.62, Pondy Bazaar, Opp. To Hotel Saravana Bhavan, T.Nagar, Chennai - 17 Ph: 2432 2644, 2433 1060, 4207 1131
Branches : BIG Showroom: No.75, Pondy Bazaar, Next to Univercell, T.Nagar, Chennai - 17. Ph: 4212 3226, 4260 6880
"SHREE SAKTHI PLAZA" Basement, 70, Pondy Bazaar, T.Nagar, Chennai - 17 Ph: 4207 1161, 2815 0144.
Anna Nagar : Anna Nagar Plaza, Shop No.1, Ground Floor, C-47, IInd Avenue, Anna Nagar, Chennai - 40. Ph: 4207 1121, 4269 3132
Adayar : No.120, L.B. Road, Opp. Pizza Corner, Adayar, Chennai - 20. Ph: 4211 6068, 2445 3002.
Thanjavur : No. 2851 / 13A1, First Floor, 'Philomina Shopping Mall' 1, Arulanandha Nagar, Trichy Main Rd, Thanjavur - 613 007. Ph: 0436-2315656, 6223477, 94421 55105
E-mail: narayana_thenarayanapearls@yahoo.co.in
Website: www.thenarayanapearls.com



இளம் பாடகர்களுக்கு இணையாக பக்கவாத்தியக் கலைஞர்கள் படை ஒன்றும் புறப்பட்டிருக்கிறது. சுமார் 100 - 120 பேர் உள்ளதால் அவர்களுள் ஒரு சிலரை YACM குழுவும் கல்கி ஆசிரியர் குழுவும் இணைந்து குலுக்கல் மூலம் தேர்ந்தெடுத்தனர். பலே, பலே, சபாஷ் என மாறி மாறி அப்ளாஸ்களை அள்ளும் இந்த இளைய தலைமுறை பக்கவாத்தியக் கலைஞர்கள் பற்றிய துக்கடா தகவல்கள்...




ஆர்.ராகுல் (வயலின்):

தமது ஆறாவது வயதிலேயே வயலினின் பிடிக்குள் வந்த இவரது முதல் குரு, கொல்கத்தா வசந்தா கண்ணன். பி.கோவிந்தராஜனிடம் சில காலம் வயலின் பயிற்சியைத் தொடர்ந்து விட்டு கடந்த ஏழு வருடங்களாக சங்கீத கலாநிதி எம்.சந்திரசேகரனிடம் கற்று வருகிறார். இவருடைய குருக்கள் இவருக்கு வயலினோடு சேர்த்து வாய்ப்பாட்டையும் சொல்லிக் கொடுத்ததால், இரண்டிலுமே வெளுத்து வாங்குகிறார் இந்த 22 வயது இளைஞர்.

சுவாமிநாதன் (கஞ்சிரா):

'நாளந்தா வே' என்ற அமைப்பு சமீபத்தில் நடத்திய 'ஆர்ட் அரட்டை ஆர்ப்பாட்டம்' நிகழ்ச்சியில், ட்ரம்ஸ் சிவமணியுடன் இணைந்து கஞ்சிரா இசையை வழங்கிக் கலக்கினார் ஓர் இளம் கலைஞர். அவர் கஞ்சிரா இசைக் கலைஞர் வி.செல்வகணேஷின் புதல்வர் சுவாமிநாதன். தந்தையின் இசைத் திறமையால் ஈர்க்கப்பட்டு பன்னிரண்டாவது வயதில் தமது இசைப் பயணத்தைத் தொடங்கியுள்ளார். ஜெயகணேஷ் தாள வாத்ய வித்யாலயாவில் பயிற்சி பெற்றுள்ள இவர், இசை நுணுக்கங்களில் தந்தையைப் பின்பற்றித் தடம் பதிக்கிறார். தந்தையுடன் இணைந்து டூயட் கச்சேரி செய்யும் இவர், டாக்டர் எம்.பாலமுரளிகிருஷ்ணா, மாண்டலின் ஸ்ரீனிவாஸ் போன்ற இசை மேதைகளுடனும் பங்களித்துள்ளார்.



ஆவர்த்தன அரசர்கள்!



சாய் சுப்ரமணியம் (மோர்சிங்):

கலைமாமணி ஏ.எஸ்.கிருஷ்ணனின் சிஷ்யரான இவர் ப்ளஸ் டூ படிக்கும் மாணவர். கடந்த ஆறு வருடங்களாக மோர்சிங் பயின்று வருகிறார். இதுவரை 300 கச்சேரிகளில் மோர்சிங் வாசித்த இவருக்கு சி.ஏ. முடிக்க ஆசை! கணக்கில் கெட்டியென்பதால் கனவு கைகூடும்!




பிரவீன்குமார் (மிருதங்கம்):

தாம் மூன்று வயது சிறுவனாக இருக்கும்போதே பார்க்கும் இடத்திலெல்லாம் தாளம் போடுவாராம். சிறுவனுக்குத் தாளத்தின் மீது இருந்த ஈர்ப்பு பெற்றோரின் கவனத்தை ஈர்க்க, இதோ ஒன்பது வருடங்களாக மிருதங்கம் பயின்று இதுவரை 400 கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்துள்ள ப்ளஸ் டூ மாணவர்.

கே.பி.நந்தினி (வயலின்):

இரண்டாம் ஆண்டு பி.எஸ்ஸி (சைக்காலஜி) படிக்கும் இந்தக் கல்லூரி மாணவி, தமது ஒன்பதாவது வயது முதலே வயலினும் கையுமாக வலம் வந்து கொண்டிருக்கிறார். மாயவரம் சகோதரிகளான தம் அம்மா, பெரியம்மாவைப் பார்த்து இவருக்கு இசை மீது தனி ஆர்வம் ஏற்பட்டதாம். அபஸ்வரம் ராம்ஜியின் இசை மழலைக் குழுவில் தேர்வாகி, ஏழாம் வகுப்பு படிக்கும்போதே சிங்கப்பூர், மலேசியா... சென்று வந்திருக்கிறார்.





எஸ்.கிருஷ்ணா (கடம்):

தடம் மாறாமல் கடம் வாசிக்கும் கிருஷ்ணா, பயில்வது விக்கு விநாயக்ராமின் புதல்வர் உமாஷங்கரிடம். தன் அம்மா பாடுவதைக் கேட்டே வளர்ந்ததால், பானைபிடிக்க வந்திருக்கிறார். கடந்த பத்து வருடங்களாக வாசித்து வரும் இவரது பளிச் டிரேட்மார்க், தாளத்துக்குக் கூட அசையாத சத்தான கட்டுக் குடுமி; பக்தியைப் பறைசாற்றும் திருமண்... பிளஸ் ஒன் ஸ்டூடன்ட்டான இவருக்குப் பளிச் எதிர்காலம் என்பதை வாசிப்பே சொல்லுகிறது!

என்.சி.பரத்வாஜ் (மிருதங்கம்):

கடந்த பன்னிரண்டு வருடங்களாக கச்சேரிகளில் அமர்க்களப்படுத்தி வரும் என்.சி.பரத்வாஜ் ப்ளஸ் டு படிக்கிறார். சிறு வயதில் அவரது அப்பா பல சங்கீதக் கச்சேரிகளுக்கு அழைத்துப் போவாராம். மகன் எல்லா கச்சேரிகளிலும் தாளம் போட்டு ரசிப்பதைப் பார்த்துவிட்டு அவரை மிருதங்க வகுப்பில் சேர்த்து விட்டதைப் பெருமிதத்துடன் நினைவு கூர்கிறார் அப்பா.

- நளினி சம்பத்குமார்





Experience
the current classics
with Prashanti
SILK COTTON
PRASHANTI
House of Silk Cottons
*Conditions Apply
Visit Prashanti and be the Winner!!
Lucky Draw Contest: Last Date.. Jan 31st, 2010*
• Sarees • Salwars / Kurthis
• Materials / Readymades
Chennai:16, 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai - 4.
Ph: 2499 1850 / 2499 7636 (Open on All days) email: prashantisarees@gmail.com
Bangalore: Malleswaram - Ph: 2334 1632 Jayanagar - Ph: 22449595 www.prashanti.co.in
பட்டின் பொலிவு, பருத்தியின் மென்மை, பிரசாந்தியின் சில்க் காட்டன்



SSHW 1965
ஸ்ரீ சரஸ்வதி மியூசிகல்ஸ்
SRI SARASWATHY MUSICALS
Musical
Instruments
Sales & Service
Exports
Music Books
& Cd's
MUSICAL INSTRUMENTS
SALES & SERVICE
VADAPALANI, #125, Arcot Road, (Opp. Vadapalani Murugan Temple) Chennai - 600 026
Ph: 6537 7770, Telefax: 2472 7778 Cell : 98400 88111
T.NAGAR, # 41, South Usman Road (Near T.Nagar Bus Depo) Chennai - 600 017
Ph: 2436 3691, Telefax: 2433 3691 Cell: 98408 33399
e-mail: sshw1965@yahoo.co.in | www.saraswathymusicals.com

● கே.சண்முகம், ஆதமங்கலம்புதூர்

நடிகர் திலகத்தை 'ஓவர் ஆக்டிங்' என்று சிலர் விமர்சிக்கிறார்களே...?

விமர்சகர்களிடம் சொல்லுங்கள் அவருக்குப் பின் 'ஆக்டிங் ஓவர்' என்று!

● ஆர்.செண்பகவல்லி, விருதுநகர்

யாரை முழுமையாக நம்பலாம்?

பாதியை முழுமையாக நம்பலாம். அந்தப் பாதி நமது Better Half!

● சு.ஸ்ரீகாந்த், நெய்வேலி

மாக்கோலம், அலங்கோலம் எல்லாம் சரி... அதென்ன சார் கந்தர்கோலம்?

பரமசிவன் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீக்கோளம் ஆறு புள்ளிகளாக





சரவணப் பொய்கையில் விழுந்தது. அந்த ஆறு புள்ளிகளும் ஆறு குழந்தைகளாக மாறின. இந்த ஆறு புள்ளி அரன்-கோலம் தான் கந்தர்-கோலம். அந்த ஆறையும் அன்னை பராசக்தி Maa-க் கோலமாக, ஒன்று சேர்த்து ஆரத் தழுவிக் கட்டி அணைக்க ஒருருவானான் கந்தன்... 'கந்தனானான் கசக்கிக் கட்ட''...!

● **பா.அசோக், ஸ்ரீவில்லிப்புத்தூர்**

நட்புக்கும், காதலுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

இரண்டும் தோள் கொடுக்கும். நட்பு தூக்கி விட; காதல் சாய்ந்து கொள்ள. காதலுக்குக் கண் கிடையாது; நட்புக்குக் காது கிடையாது. நண்பனைப் பற்றி யார் என்ன தவறாகச் சொன்னாலும் நட்பு காதில் போட்டுக் கொள்ளாது!

● **சீனுவாசன், நெல்லை**

பால் தாக்ரே, சச்சின் டெண்டுல்கர் ஒப்பிடுக?

மகாராஷ்டிரத்துக்கு மட்டும் பால் தாக்கரே. அகில உலகத்துக்கும் சச்சின் கிரிக்கெட் Ball-தாக்கறே!

● **மு.மதிவாணன், அரூர்**

அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருக்கும் என்கிறார்களே... அப்படியானால் அழகான பெண்கள் எல்லோரும் ஆபத்தானவர்களா...?

அப்படி இல்ல சார்... அந்த அழகுக்கு ஆபத்து அருகிலேயே இருக்கும். 'நகுக வருங்கால் இடுக்கண் போலே'!

● **ரா.பிரசன்னா, மதுரை**

கவிதை அரங்கேறும் நேரம் எது...?

ஒழுங்கான அரங்கேற்றத்துக்கு ஒத்திகை அவசியம். கவிதைக்கு ஒத்திகை காதலிக்கும் அந்த 'ஒத்தி'கை... அந்த ஒத்தி நம்பாளாக இருந்தால் காதல் அரங்கேறும்; அம்பாளாக இருந்தால் கருணை அரங்கேறும்!

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

குளிரை எப்படி சமாளிப்பீர்கள்?

தமிழ்நாட்டுவாசிகளான நாமெல்லாம் குளிர்விட்டுப் போனவர்கள். வருடத்தில் ஒரே ஒரு மாதம்தான் மார்கழி. மற்ற மாதங்களெல்லாம் வேர்வை கொட்டும் 'வேர்கழி'. அமெரிக்கா போனபோது நடுங்கும் குளிரில், நான் மட்டும் வெகுளியாக வேர்த்தேன்!

● **வி.ஆனந்த் கிருஷ்ணன், சென்னை**

ஞானத்தை அடைய பெண்கள் ஆண்களுடன் போட்டியிடலாமா?

ஞானம் அடைந்தவர்களை 'ஞானன்' என்று சொல்வதில்லை. 'ஞானி' என்று தான் சொல்கிறோம்!

அவசியமா?

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை**

உங்களுக்கு மாஸ்டர் பீஸ் எது?

எனது மாஸ்டர் ரமண மஹரிஷியின் peace!



கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையுள்ள கோயில்களைப் பற்றிய நூல்கள்!

இவற்றின் புகழைச் சொல்லிடில் எல்லை இல்லை!

பல ஆண்டுகளுக்கு முன் 'கல்கி'யில் தொடராக வந்தவை இவை



வேங்கடம் முதல் குமரி வரை

(5 பாகங்கள்)

6. வேங்கடத்துக்கு அப்பால்

இவற்றின் ஆசிரியர் : தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A., I.A.S. (Retd.)

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வடார்காடு மாவட்டக் கலெக்டராகப் பணிபுரிந்தவர்

அற்புதங்களை யாவரே வியவாதார்?

அடடா! இவை முன்னரே கிடைத்திருந்தால் இன்னும் எத்தனையோ கோயில்களைப் பார்த்திருக்கலாமே! என வியவாதார் இல்லை!

இந்நூல்களின் சிறப்புக் குறித்து இவற்றின் முகவுரையில் பல்வேறு அறிஞர்கள் கூறியவற்றை இங்குத் தொகுத்துத் தந்துள்ளோம். இவற்றின் பெருமைக்கு இதைவிட வேறு சான்றும் உண்டோ?

1. "சென்ற சில மாதங்களாக நண்பர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் திருக்கோயில்களைப் பற்றிக் 'கல்கி'யில் எழுதிவரும் கட்டுரைகள் தமிழ்நாட்டை ஒரு கலக்குக் கலக்கி இருக்கின்றன. ஏதோ சினிமா பத்திரிகைகளைப் படிக்க மக்கள் அடிபிடி போட்டுக்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் கல்கியில் கோயில்களைப் பற்றி வரும் கட்டுரைகளைப் படிப்பதில் நான் முந்தி நீ முந்தி என்று கணவர்களும், மனைவியரும், கிழவர்களும், மற்றவரும் போட்டி போடுவதைப் பார்க்கும்போது அதிசயப்பட வேண்டியிருக்கிறது" என நீதிஅரசர் திரு.எஸ். **மகராஜன்** அவர்கள் **பாலாற்றின் மருங்கிலே** என்னும் முதல் பாகத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

2. "தொண்டைமான் படைக்கும் 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற கட்டுரைத் தொடர் கலை, இலக்கியம், வரலாறு, பக்தி என்ற எல்லாம் விளங்கும் சுவை விருந்து. இந்த விருந்தே, நமது உள்ளக் குறைகளைப் போக்கும் அருமருந்தாகவும் அமைகிறது. இதனால்தான், தமிழகம் திரண்டு, இதை வரவேற்று மகிழ்கிறது. தமிழனுக்குத் தெரியாதா –ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, சிறந்த பண்பாட்டோடும் பக்தியோடும் வாழ்ந்து வந்திருக்கும் அவனுக்குத் தெரியாதா, எதை எப்படிப் பாராட்ட வேண்டும் என்று" எனத் திரு. **அ. சீநிவாசராகவன்** அவர்கள் **பொன்னியின் மடியிலே** என்னும் இரண்டாம் பாகத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

3. "சில காலமாகக் 'கல்கி' பத்திரிகையில் வாரந்தோறும் திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் எழுதிவரும் 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தொடர் கட்டுரைகளைப் படித்து வருகிறவர்களில் பலர் கோயிலுக்குப் போனால் தீபாராதனை கண்டு கன்னத்தில் போட்டுக் கொள்வதோடு நிற்பதில்லை. அந்தக் கோயிலில் என்ன என்ன விக்கிரகங்கள் இருக்கின்றன, என்ன என்ன சிற்பங்கள் இருக்கின்றன என்று சிறிது ஆராயத் தொடங்கியிருக்கிறார்கள். பிறகு மறுபடியும் வந்து, **இதுவரையில் இவற்றைத் தெரிந்து கொள்ளாமல் இருந்தது பிசகு என்று கன்னத்திலும் போட்டுக் கொள்கிறார்கள்.**

இவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய இயலும்? மனமார நாவார சபாஷ் என்று ஒரு வார்த்தையைச் சொல்வதன்றி வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை" எனத் திரு. **கி.வா. ஜகந்நாதன்** அவர்கள் **காவிரிக் கரையிலே** என்னும் மூன்றாம் பாகத்தின் முகவுரையில் பாராட்டியுள்ளார்.

இதோ, இதோ உங்கள் நூலகத்திற்குப் பொலிவு தர அணிவகுத்து வருகின்றன ஏராளமான படங்களுடன் ஆறு நூல்கள்!

கோயில்கள், கோயில்கள், கோயில்கள்; முக்திக்கு வழிகாட்டும் உன்னதமான அமைப்புகள் இக்கோயில்கள்; சுற்றுலாப் பயணிகளின் சுவர்க்கலோகம் இக்கோயில்கள்; தல யாத்திரையின் கையேடுகள் இக்கோயில்கள்.



4. "திரு.பாஸ்கரன் அவர்கள் நண்பர்களையெல்லாம் கையைப் பிடித்து இட்டுச் செல்வார். சில முரண்டுகளைக் காதைப் பிடித்து இழுத்தும் செல்வார். கலைச் செல்வங்களின் முன்னே கொண்டு நிறுத்தி எல்லோரையும் துய்க்கும்படியும் செய்து விடுவார்! தாமின்புறுவதைக் கண்டு உலகின்புறச் செய்யும் வித்தையிலும் கைதேர்ந்தவர் சகோதரர் பாஸ்கரன் அவர்கள். எண்ணற்றவர்களின் வாழ்க்கையில், கலைப்பணியால் கடவுள் நம்பிக்கையையும் தெய்வ பக்தியையும் வித்திட்டு விளையச் செய்த புண்ணியனாகவும் அல்லவா விளங்குகிறார். அவர்களையெல்லாம் தல யாத்திரை செய்ய வேண்டும் என்ற வேட்கை கொள்ளவும் செய்துவிட்ட அருமையைப் பாராட்டாமல் இருக்க முடியுமா என்ன?" எனக் கம்பன் அடிப்பொடித் திரு.சா. **கணேசன்** அவர்கள் **பொருநைத்துறையிலே** என்னும் நான்காம் பாகத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆறு நூல்களின்
மொத்த விலை ரூ. 1160
தள்ளுபடி ரூ. 260
சலுகை விலை ரூ. 900
வி.பி.பி. செலவையும் நாங்களே ஏற்றுக்கொள்கிறோம்

5. "அவருடைய கட்டுரைகள் வெறும் தலபுராணம் அல்ல. அவை ஒவ்வொன்றும் தமிழ் இலக்கியச் சுவை மிகுந்தவை. **பாடல் பெற்ற தலங்கள் என்று சொல்வதைப்போல, திரு. தொண்டைமான் அவர்களால் எழுதப்பட்ட தலங்கள் என்றும் கூறலாம். இவற்றைப் படித்த பலருக்கு அக்கோயில்களை நேரில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் தோன்றும்.** இதில் கேரள கோயில்கள் சில இடம் பெற்றுள்ளன. நவதாண்டவம் என்ற கட்டுரையில் தாண்டவங்களின் வகைகள், அவை காணப்படும் ஊர்கள் பற்றிய விவரங்கள் படித்து இன்புறத்தக்கவை" எனப் பாராட்டுகிறது ஐந்தாம் பாக முன்னுரை.

6. "இந்தியா என்பது நகரங்களும் நதிகளும், மலையும் மடுவும், காடும் மேடும் மாத்திரம் அல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கல் வடிவில் காட்சி தரும் பேசும் விக்கிரகங்களே என்று நமக்கு உணர்த்தியவர், பெருந்தகை திரு.தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள். அவருடன் கண்ணுற்ற அதிசய ஆலயங்களில் **இராஜஸ்தானிலுள்ள தில்வாரா ஆலயங்களும், மத்தியப் பிரதேசத்திலுள்ள கஜுராஹோ சிற்பங்களும், ஒரிசாவிலுள்ள சூரியனார் ஆலயமும் என்றும் அழியாத உயிர்ச் சித்திரங்களாக என் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளன.** இவற்றையும் இவைபோன்ற ஆலயங்களையும் நான் ஒருபோதும் பார்க்க வாய்ப்பே இருந்ததில்லை. அம் மாமனிதரால் இவற்றைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன். தமிழ் இனம் இருக்கும் வரை பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுடைய பெயரும் இருக்கும்" எனப் பாராட்டியுள்ளார் திரு.**ந. கிரிதாரி பிரசாத்** அவர்கள் **வேங்கடத்துக்கு அப்பால்** என்னும் ஆறாம் நூலில்.

கடிதம் மூலமோ, தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :



தமிழ் நிலையம்

40, சரோஜினி தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.
E-mail : tamilnilayam@hotmail.com

✆ : 2436 4174
94452 65042
98427 85256

அரங்கேறும் கவிதை

* பருவம் தவறாமல்
டிசம்பர் தோறும்
இசை மழை!

* ரசிக விருந்தில்
சபாக்கள் நிரம்பும்

* நாளைய விருதுகளுக்கு
இன்று வரவேற்பு!

* நவீன அரங்குகள்
நாத நீர்த்தேக்கம்!

* இறைவா! இதனால்
சபைகளைக் கூட்டு;
சங்கீதம் தளிர்க்க!

- ரம்யா கண்ணன்
YACM



நமது கர்நாடக இசை ஏழு நட்சத்திர ஹோட்டலைப் போன்றது. உள்ளே நுழைந்துவிட்டால் தூய்மை, அனைத்து வசதிகள், கம்பீரமான அமைப்பு, சூழ்நிலை அனைத்தும் உண்டு...

இக்கலையை அனைத்து மக்களும் ரசிக்க வேண்டும் என்பதற்காகப் பட்டிதொட்டிகளில் பரப்புவோம் என்று ஆரம்பித்தால் அச்செயல் வெற்றி பெறாது!

கர்நாடக சங்கீதம் வெறும் பொழுது போக்குக்காகவோ அல்லது வேடிக்கையாகக் கையாள்வதற்காகவோ ஏற்பட்டது அல்ல. ஆதாரத் தூண்களாக விளங்கிய வாக்யேயக்காரர்கள், தங்களது படைப்பில் கடவுளிடம் ஈடுபாடு, கவிதை நயம், இசை நுணுக்கங்கள். இவற்றை பக்தி சிரத்தையோடு நமக்கு அளித்துள்ளார்கள். ஆகை

தனி முருகன்

யால் இந்த இசை நம் ஆத்மாவை உயரச் செய்யவும் மன அமைதி பெறவும் மட்டுமே ஏற்பட்டது என்பதை உணர வேண்டும்.

ஓரளவு ஞானம் - அதாவது இந்த இசையைப் பற்றிய கொஞ்சம் பின்னணி அறிவு, கேட்டுப் பழகி நுணுக்கங்களை உணர்ந்து புரிந்துகொள்ளும் ஆற்றல்... இவை அவசியம் தேவை. முன் பின் கர்நாடக சங்கீதமே கேட்டிராதவர்களால், 'தினமணி வம்ச' கீர்த்தனையையோ 'சுதீரஸாகரா'வையோ எவ்வாறு உடனே ரசிக்க முடியும்!

தரிசனம்!


குரு காரைக்குடி மணி

பொது ஜனங்கள், அரசியல், தொலைக் காட்சி, கோயில்கள் இன்னும் பலப்பல இடங்கள் சினிமா ஆதிக்கம் வெகுவாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ள நிலையில் நாம் இவை எல்லாவற்றையும் மீறி போராடியே இந்த உன்னத கலையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு கலைஞனுக்கு ரசிகர்களும், மற்றும் ஏனைய அமைப்புகளும் மரியாதை கொடுக்கிறார்கள் என்றால், அவருடைய பெயருக்காக அல்ல என்பதை உணர வேண்டும். அவரிடம் பொதிந்துகிடக்கும் கலைக்காகத்தான். அப்படிப்பட்ட இக் கலைக்கு நாம் என்ன மரியாதை செய்ய வேண்டும்? சதா சர்வகாலமும் அதனுடனேயே உறவாடிக் கொண்டிருக்க வேண்டும்; ஒரு பரிசுத்தமான யோகியைப் போல.

நாம் எதையும் புதிதாகக் கண்டுபிடித்துவிடவில்லை. ஏற்கெனவே இருக்கும் பொக்கிஷத்தைத்தான் தேடிக் கண்டுபிடித்து அதை வெளிக் கொண்டு வருகிறோம் என்கிற தன்னடக்கம் வேண்டும். இசையின் உன்னதத்தை வெளிக்கொண்டு வருவோர் இசை உலகில் தனி இடத்தைப் பிடிக்கிறார்கள்.

லயத்தின் முக்கியத்துவத்தை உணரவும் ரசிக்கவும் கூடுதல் பயிற்சி வேண்டும். இசை சமுத்திரத்தில் சுருதி என்பது படகு; லயம் (தாளம்)தான் துடுப்பு. துடுப்பு சீராக இயங்கினால்தான் படகு நகரும்! 'தனியாக தாள வாத்திய கச்சேரிகள் எதற்கு?' என்று கேட்போர் இருக்கிறார்கள்... பாட்டோடு தாள வாத்தியத்தையும் சேர்த்து ரசிப்பது வள்ளி - தேவானையோடு இணைந்த முருகனை தரிசிப்பது மாதிரி. தாளக் கச்சேரி - தனி முருகன் தரிசனம்! ○






ஆறு மணி நேரத்தில் நடக்கும் சம்பவங்கள்தான் கதையாம். பத்து நண்பர்கள் மொத்தமாக இறந்து போகிறார்கள். பின்னர் மொத்தமாகவே உயிர்த்தெழுகிறார்கள். என்ன த்ரில்லர் படமா என்கிறீர்களா..? ஆமாம்... இறந்ததற்கும் உயிர்த்ததற்கும் இடையில் நகருமாம் திரைக்கதை. லைட்ஸ் அண்ட் ஷேடோஸ், சிவமயில் சினிமாஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் 'ஈசல்' படத்தை விஜய் ஆதித்யா இயக்குகிறார்!

பெண்களைப் பற்றி உயர்வாக சித்திரித்ததற்காக 2007ஆம் ஆண்டு தமிழக அரசு சிறந்த படமாக 'மிருகம்' படத்தைத் தேர்ந்தெடுத்தது. அதைத் தயாரித்த கார்த்திக் ஜெய் மூவியின் அடுத்த படம்தான் நெல்லு. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மண்ணின் விவசாய வாழ்வும், அங்கு வாழும் வீர இளைஞனின் காதலும்தான் கதை. காலத்தின் கையில் விவசாயமும் காதலும் அகப்பட்டுக்கொண்டு கருகுவதும் அதை மீட்கப் போராடுவதும்தான் கதையின் மையம். சுருக்கமாக, ''இது விவசாய மக்களின் வீர வாழ்க்கை சாசனம்'' என்கிறார் இயக்குநர் எம்.சிவசங்கர்.



சுமார் 1000 படங்களுக்கு மேல் நடன இயக்குனராகப் பணிபுரிந்த டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் (பிரபு தேவாவின் அப்பா) கதையின் நாயகனாக நடிக்கும் படம். இதுவரை பின்னணியில் இருந்தவர் இப்போதுதான் முதன்முறையாக முன்னணிக்கு (திரை) வந்திருக்கிறார். தங்கம் ரியல் பிக்சர்ஸ் தயாரிக்க, எம்.ராஜா இயக்குகிறார்.



காதலே பிடிக்காது... காதல்தான் பிடிக்கும்!



“இதுவரை கரண் நடித்த படங்களிலேயே அதிகப் பொருட் செலவோடு பிரமாண்டமாகத் தயாரிக்கப்படும் படம் கனகவேல் காக்க. ஃப்ளாஷ்பேக் காட்சிக்காக நான்கு மாதம் கடுமையான எக்ஸர்சைஸ் செய்து கல்லூரி மாணவன் போல உடம்பைக் குறைத்திருக்கிறாராம் கரண். 'சாமி'யில் 'சவுண்ட் பார்ட்டி' வில்லன் கோட்டா சீனிவாசராவுக்கு இந்தப் படத்தில் லவ்வபிள் வில்லன் கேரக்டராம். "வில்லனைக் கண்டதும் வெறுப்பு வருவதற்குப் பதிலாகச் சிரிப்பு சிரிப்பா வரும்" என்கிறார் இயக்குநர் கவின்பாலா. இவர் சரண் மற்றும் ஹரியிடம் உதவி இயக்குநராகப் பணி புரிந்தவர்.

அமுல்பேபி நகுலன் நாயகனாக, கேரள தேவதை பூர்ணா நாயகியாக நடிக்கும் படம் கந்தக்கோட்டை. நாயகனுக்குக் காதலே பிடிக்காதாம். நாயகிக்குக் காதல் மட்டும்தான் பிடிக்குமாம். அட்ப கதை சூடு பிடிக்கும் என்கிறீர்களா..? உண்மைதான் கதை சூடோ சூடாம்... நகுலன் நடிக்கும் க்ளைமாக்ஸ் சண்டைக் காட்சிக்காக மட்டும் 200 துணை நடிகர்களையும், 50 ஸ்டண்ட் நடிகர்களையும் களத்தில் இறக்கிவிட்டிருக்கிறார்களாம். 'காதல்' என்னாச்சுன்னு கேட்கறீங்களா... படத்தைப் பாருங்க!



இசைப் பேரறிஞர் டாக்டர் எஸ். இராமனாதன் என்னுடைய குரு. தந்தை. முதன்முதலாக அமெரிக்காவுக்குச் சென்ற கர்னாடக இசைக் கலைஞர்கள் அப்பாவும், நாட்டியத்தில் பிரபலமான பாலசரஸ்வதியின் சகோதரர் மிருதங்க வித்வான் டி.ரங்கநாதனும்தான். அப்பா அமெரிக்கா செல்வதற்கு முன்பும் சென்னை மியூஸிக் அகாடமி அவருக்கு 'சங்கீத கலாநிதி' பட்டம் வழங்கியபோதும் அவரைப் பேட்டி எடுத்து எழுதிய முதல் பத்திரிகை கல்கிதான். அவர் அமரர் ஆன பிறகு டி.எஸ்.பார்த்தசாரதி அப்பாவைப் பற்றி மிக அருமையான கட்டுரை ஒன்றையும் கல்கியில் எழுதியிருந்தார். அதில் 'கர்னாடக சங்கீதம் இருக்கும்வரை ராமநாதனின் பேரும் இருக்கும்' என்று சொல்லியிருந்தார்.

எதுவும்' என்று சொல்வார். அத்தோடு, 'சரி... இந்த விமானம் போய்விட்டது என்றால் என்ன? அடுத்த விமானத்தைப் பிடிக்க வேண்டியதுதானே!' என்று அமைதியாகச் சொல்வார். ஆனாலும் ஒருமுறைகூட அவர் ரயில் அல்லது விமானம் அல்லது பஸ்ஸைத் தவறவிட்டது கிடையாது.

அமெரிக்காவுக்கு வந்து எங்கள் வீட்டுக்கு வந்து தங்கிய சமயத்தில் என் கணவரிடம் தினம்

ஆடம்பரம் 'ஆகாது'!

அப்பா அடக்கமானவர். அதுவும் நாவடக்கம் அதிகம். நாங்கள் ஒன்பது பேர் அவருடைய வாரிசுகள். அவர் கூடவே பல வருடங்கள் நெருங்கிப் பழகியிருக்கிறோம். ஆனால், ஒருமுறைகூட அவர் யாரைப் பற்றியும் குறைவாகப் பேசி நாங்கள் கேட்டதேயில்லை. சின்ன வயதில் ஒருமுறை தனியாக வீணைக் கச்சேரி வாசித்த பின் அப்பாவிடம் வெகுளியாக, 'எனக்கு இன்னும் கொஞ்சம் நல்ல மிருதங்கம் போட்டிருக்கலாம், இல்லையா அப்பா?' என்று கேட்டுவிட்டேன். ஒரு நிமிடம் என்னைப் பார்த்தார். திட்டவில்லை. குரலையும் எழுப்பாமல், 'முதலில் உன்னைத் திருத்திக் கொள். அதற்கப்புறம் மற்றவர்களைக் குறை சொல்லலாம்...' என்றார். அன்றிலிருந்து அதையே தாரக மந்திரமாகக் கடைப்பிடிக்க முயல்கிறேன்.

அவர் நிதானம் தவறி நடந்து நாங்கள் பார்த்ததில்லை. விமானத்தைப் பிடித்து அயல்நாடு போக வேண்டுமே என்று அம்மாவும், என் தம்பி ராஜுவும் அவசரப்படுத்தினாலும் நிதானமாக முழுமையான மனத்துடன் வகுப்பை எடுத்துவிட்டுத்தான் கிளம்புவார். 'என் மாணவ மாணவிகள் எத்தனையோ குடும்ப, அலுவலகப் பொறுப்புகளுக்கு நடுவில் என்னிடம் கற்க வருகிறார்கள். அவர்களைக் கவனித்த பின்தான்



• சீதா பென்னெட்



'ஜாஸ்' ரெகார்டுகளைப் போடச் சொல்லி அதற்கு விளக்கம் கேட்பார். 'உன் மூளையில் இருக்கிற ஜாஸ் பற்றிய அத்தனை விஷயங்களையும் எனக்கு அப்படியே கொடுத்து விடேன்' என்று அவரிடம் வேடிக்கையாக ஒருமுறை சொன்னபோது பென்னெட்டும், 'நீங்கள் உங்களிடம் உள்ள கர்னாடக சங்கீத அறிவை எனக்குக் கொடுத்தால் நானும் தயார்' என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னது இன்னும்



* எஸ். இராமனாதன்

நினைவில் இருக்கிறது.

அப்பாவின் பயணம் எப்போதும் பஸ்ஸில்தான். ஆட்டோவிலோ, டாக்ஸியிலோ அழைத்துச் செல்கிறோம் என்று நாங்கள் சொன்னாலும், 'பெட்ரோல் விலை எவ்வளவு ஏறியிருக்கிறது? நம் காசை எதற்காக அராபிய நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்?' என்று சிரித்துக் கொண்டே பஸ்ஸில் ஏறி விடுவார்.

பென்னெட்டுக்கும் எனக்கும் திருமணம் ஆன புதிதில் எங்களுக்கு அவ்வளவாக வருவாய் இல்லை. பென்னெட் அப்போது யேல் (Yale) பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருந்தார். அத்தோடு ட்ரம்ஸ் வாசித்துத்தான் சம்பாதிக்க வேண்டியிருந்தது. அதனால் நான் பெல் கம்பெனியில் முழு நேர வேலை செய்தேன். அதில் வருகிற சம்பாத்தியம் குடும்பம் நடத்தத்தான் சரியாக இருக்கும். இருந்தாலும் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சேமித்து டிசம்பர் இசை விழாவில் வீணை வாசிக்க வந்துவிடுவேன். நல்ல பட்டுச் சேலைகள் வாங்க கையில் பணம் இருக்காது. மற்ற பெண் கலைஞர்கள் கச்சேரிக்கு ஒன்று என்று புதியதாக அம்சமாக அழகாக உடுத்திக்கொண்டு வருவதைப் பார்க்கும்போது கொஞ்சம் ஏக்கம் வந்தது உண்டு. அதற்காகவே இரண்டு வருடங்கள் சேமித்து ரொம்பவே க்ராண்டாக ஒரு காஞ்சி பட்டுப்புடைவை வாங்கி விட்டேன். அதைக் கச்சேரிக்கு உடுத்திக்கொண்டு கிளம்பியபோது அப்பா என்னைக் கவனித்தார். ''இவ்வளவு ஆடம்பரமாக உன்னைப் பார்த்ததில்லையே'' என்றவர் சொன்னார்:

''உன் கச்சேரி கேட்க வந்திருக்கும் சிலர் ஏழையாக இருக்கலாம். பட்டுப் புடைவை வாங்க இயலாதவர்கள் இருப்பார்கள் இல்லையா? நீ மேடையில் இவ்வளவு ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு உட்காருகிறாய். அவர்களுக்கு உன்னிடம் பொறாமை வர வாய்ப்பு இருக்கிறது. அப்படி ஓர் எதிர்மறையான உணர்ச்சிக்கு ஏன் இடம் கொடுக்க வேண்டும்? யோசித்துப் பார்...'' இந்த வார்த்தைகளை ஒவ்வொரு கச்சேரிக்கு மேடை ஏறும்போதும் நினைத்துக் கொள்கிறேன்.

கீதா பென்னெட்

கலகல குரல் வேணுமா..?



ஒவ்வொரு சங்கீத சீஸனின் போதும் கலைஞர்களைப் பெரிதும் வாட்டம் அடையச் செய்பவை, அழையா விருந்தாளியாகத் தொண்டைக்குள் வந்து உட்கார்ந்து விடும் தொண்டைக் கட்டலும், வலியும்தான். பேசவே முடியாத நிலையில், ஏகப்பட்ட கச்சேரிகள் வரிசை கட்டி நிற்க, நாம் எப்படி பாடப் போகிறோம் என பயப்படும் நிலை பல சங்கீதக் கலைஞர்களுக்கு ஏற்படுவது சகஜமான விஷயம்.

இதற்கு ஆயுர்வேதம் சொல்லும் தீர்வு, குரல் சரியான படி இயங்க, அதற்கு ஏற்றபடி உணவை உட்கொள்ள வேண்டும். நம் குரலுக்குத் தகுந்த உணவு, தகாத உணவு என இருவகைகள் இருக்கின்றன. தொண்டைக் கட்டல் ஏற்பட்டு விட்டால் நாம் கட்டாயம் தவிர்க்க வேண்டிய உணவுப் பட்டியல் இதோ:

முதலாவது காபி. இதில் கிட்டத்தட்ட 900 plant alkaloids இருக்கிறதாம். இதைப் பருகுவதால் தொண்டை வலியோ, கட்டலோ மேலும் அதிகரிக்குமே தவிர குறையவே குறையாது.

அடுத்தது சாக்லேட். இதில் உள்ள caffeine தொண்டைக் கரகரப்பை மேலும் அதிகப்படுத்திவிடுமாம்.

வேர்க்கடலை பக்கம் தப்பித்தவறிகூடப் போய் விடாதீர்கள். உங்கள் தொண்டைக் கரகரப்புக்கு மிகப் பெரும் எதிரி என்கிறது ஆயுர்வேதம்.

குரலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க, துளசி, வெந்நீர், தேன், இஞ்சிச் சாறு, மிளகு, லவங்கம் பருகலாம்.

தொண்டைக் கரகரப்பிலிருந்து சீக்கிரத்திலேயே விடுதலை பெற கொதிக்கும் டீயில் இஞ்சியையும், துளசி இலையையும் சேர்த்துப் பருகலாம்.

துளசியின் சாற்றைத் தேனோடு கலந்து சாப்பிட்டு வந்தால் கரகர தொண்டை திரும்பவும் கலகலவென ஆகி குரல் தேனாக இனிக்க ஆரம்பிக்கும் என இனிப்பான டிப்ஸ் சொல்கிறது.

- என்.எஸ்.கே.

அருள்வாக்கு

இசையே ஈஸ்வரானுபவம்!



லோகத்தில் மனசுக்கு ரொம்பவும் ஆனந்தமாகவும் சாந்தமாகவும் இருக்கப்பட்ட பல விஷயங்களுக்கு, அப்பர் ஸ்வாமிகள் ஒரு 'லிஸ்ட்' கொடுக்கிறார். இந்திரியங்களுக்கு அகப்படுகிற சுகங்கள்போல இருந்தாலும், நிரந்தரமான, தெய்வீகமான ஆனந்தத்தைத் தருகிற வஸ்துக்களைச் சொல்கிறார். அந்த வஸ்துக்கள் என்ன? முதலில், துளிக்கூட தோஷமே இல்லாத வீணா கானம்; அப்புறம், பூரண சந்திரனின் பால் போன்ற நிலா; தென்றல் காற்று, வஸந்த காலத்தின் மலர்ச்சி; வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிற தாமரைத் தடாகம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இந்திரியங்களால் பெறுகிற இன்பங்களை ஈஸ்வர சரணா ரவிந்த இன்பத்துக்கு உபமானமாக அடுக்கும்போது 'மாசில் வீணை' என்று சங்கீதத்துக்கே முதலிடம் தருகிறார்.

நல்ல சங்கீதம் - அதுவும் குறிப்பாக நம்முடைய சங்கீதத்துக்கே எடுத்த வீணையோடு கானம் - என்றால் அது ஈஸ்வரனின் பாதத்துக்குக் கொண்டு சேர்ப்பதாகவே இருக்கும். நம் பூர்வீகர்கள் இசையை ஈஸ்வரனின் சரணங்களிலேயே சமர்ப்பணம் பண்ணினார்கள். அந்த இசை அவர்களையும், அதைக் கேட்கிறவர்களையும் சேர்த்து, ஈசவர சரணாரவிந்தங்களில் லயிக்கச் செய்தது. தர்ம சாஸ்திரம் தந்த மகரிஷி யாக்ஞவல்கியரும் 'சுஸ்வரமாக வீணையை மீட்டிக்கொண்டு, சுருதி சுத்தத்தோடு, லயம் தவறாமல் நாதோபாஸனைச் செய்துவிட்டால் போதும் - தியானம் வேண்டாம்; யோகம் வேண்டாம்; தபஸ் வேண்டாம்; பூஜை வேண்டாம்; கஷ்டமான சாதனைகளே வேண்டாம் - இதுவே மோக்ஷத்துக்கு வழிகாட்டிவிடும்'' என்கிறார்.

- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்

இவங்க இப்படித்தாங்க... 9

அழகான வாயாடி!

சபீதா ஜோசப்

ஒரு நடிகை பாலிவுட் கோட்டைக்குள் நுழைவதற்கு கோலிவுட்தான் சிறந்த வாசல். இங்கு ஒருவர் திறமையான முன்னணி நட்சத்திரம் என முன்மொழியப்பட்டால் போதும், அவரை பாலிவுட் வழி மொழிந்து வாரி அணைத்துக் கொள்ளும். (இது நடிகைகளுக்கு மட்டும்தான்.)

இதற்கு நேற்றைய உதாரணம் நம்ம ஸ்ரீதேவி. இன்று அசின். அவரைத் தொடர்ந்து ஜெனிலியா.



சேர நாட்டில் அழகிய வரவுகளில், தமிழ் மகா ஜனங்களில் இதயங்களில் குடியேறிய அசினை, ஹாரிங்டன் ரோட்டில் உள்ள அவரது பிளாட்டில் சந்தித்தோம். நம்மூர் தமிழச்சிகளைவிட அழகாகத் தமிழை உச்சரிக்கிறார். அதுவும் கேள்வி ஞானத்தால் பெற்ற தமிழில்.

சினிமாவில் எப்படியோ அதே சுறுசுறுப்பு; புன்னகை மாறாத முகம்; அழகான வாயாடி... என்ற ஐ.எஸ்.ஐ. முத்திரை பெறும் வேகப் பேச்சு.

மலையாளம், ஆங்கிலம், தமிழ், இந்தி, தெலுங்கு ஐந்து மொழிகளிலும் சரளமாகப் பேசுவார். எந்த மொழியில் நடித்தாலும் இவரே தான் பின்னணி பேசுவார்.

படப்பிடிப்பு இல்லாத நாளில் இண்டர்நெட்டில் தோழிகளுடன் அரட்டை, ஈ.மெயில்களுக்குப் பதில் தருகிறார். அவ்வப்போது அப்பாவின் பிஸினஸ் கணக்குகளைக் கவனிக்கிறார்.

''அதிகப் படங்களில் நடிக்கணும்; நிறைய சம்பாதிக்கணும் என்ற பசியெல்லாம் எனக்கு இல்லவே இல்லை. அம்மா டாக்டர், அப்பா பிஸினஸ்மேன் அவங்களுக்கு நான் ஒரே செல்லப் பெண். அவங்க சம்பாதிக்கிறதே போதும். அப்புறம் எல்லா படத்திலேயும் அசின் இருக்காங்கறதைவிட, நல்ல படத்துல இருக்கானு சொல்லணும். அதுதான் முக்கியம். இந்த வருஷம் இதுவரை நாற்பதுக்கும் மேற்பட்ட கதைகளைக் கேட்டுட்டேன். ஒண்ணு ரெண்டுதான் எனக்குப் பிடிச்சுருந்தது'' என்கிற அசினிடம் ஒரு பழக்கம் எந்த மொழியில் நடிக்கப் போகிறாரோ, அங்கு சொந்த வீடு வாங்கித் தங்குவார். இந்திக்குப் போனார். அங்கும் சொந்த வீடுதான்.

“நாலாவது படிக்கிற காலத்தில் இருந்தே நான் ஸ்கூலில் நடக்கற எல்லாப்



போட்டிகளிலும் கலந்துக்குவேன். என்னோட திறமை எல்லா திசைகளிலும் பளிச்சிட காரணம் என் பெற்றோரின் ஊக்குவிப்பும் பாராட்டும் தான்.

சின்ன வயசுலேர்ந்தே பண்டிகை விசேஷம் என்றாலே மனசுல பட்டாம்பூச்சி பறக்கும். ஓணம் சமயத்துல கேரளா போயிடுவேன். அங்கே ஃப்ரெண்ட்ஸ், என் பேரன்ஸோட ஜாலியா கொண்டாடுவேன். அதேபோல தமிழ்நாட்டில் தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ் போன்ற விசேஷங்களில் என்னை ஈடுபடுத்திக் கொள் வேன். என்னோட ஒரு பெரிய ஆசை ஏதாவது ஒரே பண்டிகையை என் ரசிகர்களோட கொண்டா டணும்'' என்கிறார்.

"தமிழில், நான் எழுத்துக் கூட்டிப் படித்த முதல் வார்த்தை 'பிரியாணி'!"

''எல்.கே.ஜி.யிலேருந்து என்னோட நட்பு வட்டத் துக்குள் இருக்கற மூணு பேர் ப்ரியா, நிஷா, ரீனா... நான் எப்ப ஊருக்கு போனா லும் முதல்ல அவங்களைப் பார்த்துட்டுத்தான் வீட்டுக்கே திரும்புவேன்.

'அசின்'ங்கற பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தீங்க...? நிறைய பேர் எங்கிட்ட கேட்கறாங்க. காரணம் பேரு ரொம்ப வித்தியாச மாயிருக்கு. அசின்னா ஆணா? பெண்ணான்னு

புரியாது. சிலர் பெயர்களைப் பார்த்து அவங்க எந்த மதம், எந்த ஜாதியைச் சேர்ந் தவங்கன்னு தெரிஞ்சிடும். 'அசின்' என் பதற்கு 'கலப்பில்லாத தூய்மை'னு அர்த் தம்.

என் பாட்டியோட பெயரான 'மேரி' என்பதைத்தான் எனக்கும் வைக்க இருந் தாங்க. எங்கப்பாதான் பொதுவான ஒரு பெயரை வைக்கணும்னு 'அசின்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தாராம்,'' - எனச் சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்.

''நான் தமிழில் நடிக்க வந்த புதுசுல ஒரு தமிழ் வார்த்தைக் கூடப் பேசத் தெரியாது. இந்த 'ஆமா' மட்டும் ஈஸி என்பதால் தெரியும். அப்புறம் தான் கொஞ்சம்கொஞ்சமா யூனிட்ல மத்தவங்கப் பேசுறதைக் கவனித்துத் திருப்பிப் பேசிப் பார்த்துக்குவேன். தமிழ் டயலாக்கை ஆங்கிலத்தில் எழுதிப் பேசி னேன். என்னோட மேக்கப்மேன், டச்சப், டிரைவர், இவங்ககிட்ட தப்பும் தவறுமா தமிழில பேச ஆரம்பிச்சேன்.

காரில், வீட்டில் போகும்போது வரும் போது கண்ணாடி வழியா ரோட்டோர கடை பேனர், சினிமா, அரசியல், போஸ்டர் எல்லாம் பார்த்து எழுத்துக் கூட்டிப் படிப்பேன். ஒருசமயம் சிக்னலில் கார் நின்றபோது ஒரு ஹோட்டல் வாசலில் போர்டில் பெரிதாக எழுதியிருந்ததை எழுத்துக்கூட்டி, 'பிரியணி'னு படிச்சேன். 'அது பிரியாணி' மேடம்னு டிரைவர் திருத்தினார். நான் படித்த முதல் தமிழ் வார்த்தை இதுதான்'' என்கிற அசின். எதையும் அழகாக நேர்த்தி யாகச் செய்ய வேண்டும் என நினைப்பவர்.



''அசின் என்றால் கலப்பில்லாத தூய்மை என்று பொருள்!''

புகைப்படம் எடுத்துக் கொள்வதையும் ஒரு கலையாக நினைத்து அதற்கென நேரம் ஒதுக்குவார். அதை அவரே வாங்கி, தேர்வு செய்து 'சி.டி'யில் போட்டுப் பத்திரி கைகளுக்குக் கொடுப்பார். அப்ப அசின் என்றால் 'நேர்த்தியான அழகு'ன்னும் சொல்லலாம்தானே!

(அடுத்து இசையமைப்பாளர் தேவா)


பக்தி மணம் கமழும்
மயிலையில்...
சுவை மணம் பரப்பும்
Subham GANESAN
committed services with delightfull memories
MARRIAGE CATERING SERVICES
SUBHAM APPALAMS AND SNACKS
#210, St. Marys Road, Mandaveli,
#14, East Mada Street, Mylapore, Chennai
044-24616007, 24933656
E-mail: subhamganesan24@gmail.com


உங்கள் பழைய
பட்டுப் புடவையை கொடுத்து
ஒரு கிராம் போஃமிங் நகையை
பெற்றுச் செல்லுங்கள்!
எங்களிடம் 1 கிராம் செயின்கள் / வளையல்கள்,
குந்தன், போல்கி, விக்டோரியன், முத்துக்கள், ஜிர்கான் மற்றும்
பேன்சி வகைகள் ஏராளமாய் கிடைக்கின்றன.
Tara's Jewellery
Timings:
10.00 am
to 1.30 p.m.
4.00 pm
to 8.15 p.m.
Sunday Holiday
New. 93, (Old. 47), Kutchery Road, Mylapore, Chennai - 4. Ph: 2464 1799
(Between Mylapore Post Office & Jain Temple) www.tarasjewellery.com

தத்வமஸி

ரவிசுப்ரமணியன்

"ரங்கராஜனுக்கு ஏதாவது குடிக்க கொஞ்சம் குடேன்."

வீட்டின் உள் பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தார் சுந்தரம்.

உள்ளிருந்து ரங்கராஜனுக்குப் பின்பக்கமாக நின்ற சுந்தரி, உதட்டைப் பிதுக்கித் தாடயைத் தோள்பட்டைக்கு இடித்துக் கொண்டு உள்ளே போனாள். 'இதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல. உன்ன தேடிண்டு வரவாளை உபசரிச்சே ஒழியிறேன் நான்' - என்பது போன்ற பல அர்த்தங்கள் அந்த மௌனமான பாஷைக்கு உண்டு.

என் அதிர்ஷ்டம் அந்த மௌன பாஷையை ரங்கராஜன் பார்க்கவில்லை. அவன் சுவராஸ்யமாய் ஆரபியை முணு முணுத்துக் கொண்டிருந்தான். அதற்குப் பிறகு ஒரு நிமிஷம் கூட, வீட்டில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை.

"இதோ வந்துடறேன் ரங்கராஜன்" என்று சொல்லிவிட்டு சட்டையை மாட்டிக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

"இப்ப எதுக்குச் சட்டையெல்லாம் மாட்டிண்டு வரேள்."

"சும்மா வாடா வெளிய போயிட்டு வரலாம்."

"மாமிட்ட ஏதோ சொன்னேளே.."

"ஆமா அவ எதுனா உன் வேலயா இருப்பா நீ வா."

"என்னத்துக்கு வெளில போணும். வெளில வெய்யில் தாளலெண்ணா. சித்த வீட்லேயே பேசிண்டிருப்பமே."

"வீட்டுலமட்டுமென்ன வாழ்றது. இங்கேயும் வெய்யில்தான் வா."

மனமில்லாமல் எழுந்து வந்தான் ரங்கராஜன்.

ரங்கராஜனுக்கு ரெகுலரா ஷேவ் பண்ற வழக்கமே கிடையாது. ரெண்டு மூணு மாசத்துக்கு ஒரு தடவை, போனால் போகிறதென்று மழிப்பான்.

சதா வெத்தலை போட்டுக் குதப்பிண்டிருப்பான். மாநிறம். அயன் பண்ணாத கசுக்கம் நிறைஞ்ச சட்டை, சமயத்துல அதுலயும் பட்டன்கள் ஏறுக்கு மாறாக இருக்கும். கணுக்கால் வரை ஏத்திக் கட்டின பழுப்பேறின வேஷ்டி. குழந்தை போல பேச்சு. சம்பாஷணைக்கு இடையில தளும்புற நெகிழ்வு. ஆயிடுத்து, அவனுக்கும் நாப்பது வயசாயிடுத்து. என் இருபது வருஷப் பழக்கத்தில அவனுக்குக் கோபம் வந்து நானறியேன்.

அவன் அப்பா ஒரு வேதவித்து. அவனுக்கு பின்ன பொறந்தது அஞ்சும் பொண்கள். அஞ்சும் பொண்ணுன்னா அரசனும் ஆண்டிம்பா. அது உண்மையாயிடுத்து. எப்படியோ அஞ்சுக்கும் கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டு, அவன் அப்பா போய் சேந்துட்டார்.

ரங்கராஜன் கல்யாணம் பண்ணிக்கல. ஒண்ணும் விஷேசக் காரணமில்ல. தகையல. அதுனால தள்ளிப் போயிடுத்து. அவனும் இதுவே நன்னாதான இருக்குன்னு அப்படியே இருந்துட்டான். வயசான அம்மா மட்டும் இருக்கா. அவளுக்கும் தன்னாமை பாவம். அப்பா வச்சிட்டுப்





போன பணத்துல மிச்சசொச்சம் டெபாஸிட்டுல இருக்கு. ஒரு பூர்வீகப் பாழடஞ்ச வீடு. ஒரு மொட்டை மாமி, ரெண்டு பேருக்குமா சமச்சுப் போட்டுண்டு கூடவே இருக்கா. அக்காள் களும் அத்திம்பேர்களுமா போஷிக்கிறா. (ரெண்டு பேரைத் தவிர) ஏதோ வண்டி ஓடிண்டு இருக்கு அவனுக்கும்.

சதா படிப்பு, சங்கீதம், மிருக ஸ்நேகி தம். (மனுஷாளுக்கு அது எவ்வளவோ பெட்டர்.) அவன் ரூமுக்குப் போனம் னாக்கா, புஸ்தகங்கள், ரேடியோ, டேப், சி.டி. இதுகளோட நாய் பூனை, எறும்பு, பூச்சின்னு சகல ஜீவராசிகளும் வாசம் பண்ணிண்டிருக்கும். அவன் பெரிய இசை ரசிகன். இசை மட்டுமில்ல தத்துவம், கணக்கு, இன்னும் என்னன்னமோ. திடீர்னுட்டு குவாண்டம் தியரிம்பான். அப்புறம் பெட்டண்ட் ரஸல், சிக்மண்ட் பிராய்ட், ஹெகல் அப்படின்னு என்னென் னவோ பேசுவான். எனக்கு அட்ஷர சுத்தம் புரியாது. ஆனா, அவன் பாஷையை, அவன் வெளிப் படுத்தற த்வனியை, அதுல இருக்கிற வாஞ்சையைக் கேட் டேன்ன்னாக்கா, அவன் எது பேசினாலும் இன்னைக்கெல் லாம் கேட்டுண்டிருப்பேன்.

பேசிண்டேருப்பான் திடீர்னுட்டு காணாத போயிடு வான். என்னடான்னாக்கா,

''விட்ட இடத்துல இருந்து நீங்க போங்கண்ணா. காது பசியாருக்கு நீங்க நிறுத்தாதிங்கோ பாடுங் கோம்பான்.''

நான் ஒரு வித்துவான். கச்சேரிக் கெல்லாம் போயிண்டிருக்கேன். எனக் கும் ரசிகாள்ளாம் இருக்கா... ம்.. அதெல்லாம் அவனண்ட்ட எதும் செல்லாது.

அவனே ஒரு குழந்தையா நடந்துண்டிருக்கும்போது, நமக்கும் எதும் சொல்லத் தோணாது. நான் சில சமயத்துல கோவபட்டுக் கத்திப்புடுவேன். பஞ்சு பொதில கத்தி வீசுன மாதிரி இருப்பான். அது அவனை ஒண்ணும் பண்ணாது. கத்தியெல்லாம் கீழதான் விழும். நானே களைச்சு, நானே சமாதானம் ஆகி, 'அப்புறம்ண்டா ரங்கராஜன்'னு ஆரம்பிப் பேன். அப்ப ஒரு சிரிப்பு சிரிப்பான் பாருங்கோ... ராட்சஷன்.

இந்த பூபாளம், பௌளி, மலைய மாருதம் எல்லாம் காலையில மட்டும்தான் பாடணுமா, அதென்ன கணக்குன்னு கேட்டான் ஒரு நாள். பதில் சொல்ல வாயத் தொறக்கிறேன். போயிட்டான்.

வீட்டுக்குள்ள போய் ஓர் இரும்பு வாளி எடுத்துண்டு வந்தான்.

அவன் தெருவுல உள்ள நாலஞ்சு ஆத்துல போய், பழைய

துக்கடா கார்னர்


கர்நாடக இசைப் பாடகிகள்: ப்ரியா சகோதரிகள்

கஞ்சிய வாங்கிண்டு வந்தான். அதுல தண்ணிய ஊத்தினான். அவன் ரூம்ல நாடார் கடையில வாங்கின புண்ணாக்கு இருந்தது. அதை எடுத்துண்டு வந்து கலக்கினான். வாளியை எடுத்துட்டுப் போய் வாசல்ல வச்சிட்டு அங்கேயே நின்னுண்டிருக்கான். என்னைப் பார்த்து ஒரு சிரிப்பு வேற. அவனை என்ன பண்ண முடியும் நான். அப்புறம் கழனி கலக்குன வாளிய அங்கயே வெச்சுட்டு வந்துட்டான்.

''இப்ப நீங்க சொல்லுங்கோ.''

''என்னடா விளையாடிண்டுருக்கியா நீ.''

''ப்போடா... இப்ப எதுக்கு அங்க போய் வாளியை வச்சிண்டு வந்திருக்க. இப்ப அங்க எதாவது ஒரு ஜீவராசியாவது நடமாடறதா.''

''பத்துநிமிஷம் பொறுத்து பாருங்கோ.''

அவன் சொன்னது போலவே ஒரு மாடு வந்தது. கழனியைக் குடித்தது. குடிக்கிற வரை அது முதுகைத் தடவிக்கொடுத்துண்டிருந்தான். குடிச்சு முடிஞ்சப்புறமா அது கழுத்தைக் கட்டிண்டான்.

கொஞ்ச நேரம் நின்னுண்டிருந்தது. ''அண்ணா வந்திருக்கார்''ன்னு சொன்னான். அவன் அப்படிச் சொன்னதும் அந்த எம்டனும் சட்டுன்னு கிளம்பிப் போயிடுத்து.

நேக்கு ஏதோ சின்னப்பதேவர் படம் பார்த்திண்டுருக்கிற மாதிரியே இருக்கு. ''என்னடா நடக்குது இங்க''-ன்னாக்க...

''விடுங்கண்ணா சொல்லுங்கோ''-ன்னு இதுவரை எதுவுமே நடக்காத மாதிரி முகத்தை வெச்சிண்டு கேப்பான்.

வேற என்ன பண்ணித் தொலைக்க... சொல்லுவேன்.

''அதெல்லாம் காலை பொழுதுக்கு உகந்த ராகங்கள்டா. அதெல்லாம் அப்பதான் பாடணும்.''

''ராத்திரில பாடினா.''

''ராத்திரி பாடினா, நம்ம வெங்கட்ரமணா அய்யர் கடை மிளகு பொங்கலைச் சூடா ராத்திரி பத்து மணிக்குச் சாப்பிட்டின்னாக்கா எப்படி இருக்கும் அது மாதிரிதான் அது. அதுஅதுக்கு ஒரு நேரம் இருக்கு.''

''மாடு சினையா இருக்குன்னு நினைக்கிறேன்.''

''ஏண்டா, நீ என்ன கேட்ட, நா என்ன சொல்லிண்டிருக்கேன்.''

''ண்ணா... விடுங் கண்ணா... அதான் சொல்லிட்டேளே. இந்தத் திருமெய் ஞானம் நட்ராஜ சுந்தரம் புள்ளையைப் பத்தி ஒரு நாள் சொன்னேளே, அவர் மல்லாரி வாசிக்கிறச்சே, அது ஒரு கணக்கு வழக்குபோல இருக்கும்னுட்டு. கணக்குன்னோன நம்ம

டிசம்பர் மியூஸிக் சீஸன் வந்தால் வெளியில் சாப்பிடுவதைக் கட்டாயமாகத் தவிர்த்துவிடுவார்கள் ஹரிப்ரியா, ஷண்முகப்ரியா.

* கம்ப்யூட்டரில் புதுப்புது கேம்ஸ் விளையாடும் ஹரிப்ரியா, மாநில அளவில் கிரிக்கெட் விளையாட தேர்வு செய்யப்பட்டவராம். அக்கா, ஷண்முக ப்ரியா இன்டீரியர் டெகரேஷன் எக்ஸ்பர்ட்.

* இந்தச் சகோதரிகள் தினமும் ஒரு மணி நேரமாவது யோகா பயிற்சி செய்கின்றனர்.

* அன்று முதல் இன்றுவரை இவர்களது கச்சேரி என்றால், முதல் வரிசையில் கட்டாயம் இவர்களது தந்தை அமர்ந்திருப்பார்.

- என்.எஸ்.கே.

கணிதமேதை ராமானுஜம் தான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தார்.

அவர் சொன்ன விடை, சரியா இருக்கான்னு கண்டுபுடிக்கவே வருஷங்கள் ஆயிடுத்தாமே. அதான் தோணித்து னேக்கு.''

சட்டுன்னு பேச்சில் இங்கிலீஷுக்குத் தாவுவான். எனக்கு ஒண்ணும் புரியாது. ''அடடா, உங்களுக்குப் புரியாதே மறந்துட்டேன்''-னு உடனே தமிழ்ல பேச ஆரம்பிப்பான். பேச்சு திடீர்ன்னு தடைபடும். கோவில் யானை வாசல்ல போயிண்டிருக்கும். பாக்கப் போயிடுவான். பாத்துட்டு வந்து, ''இந்த யானைக்கெல்லாம் ஷூ மாட்டணும்ணா. மாடு குதிரைக்கெல்லாம் லாடம் கட்டிடறா. ஆனா யானை பாவம். காட்டுலன்னா பரவாயில்லை. இந்தத் தரைலல்லாம் நடக்கிறச்சே அதுக்கு கால் கூசும். பாவம் அதுகளுக்கு சொல்லவும் முடியாது. அதும் இந்தத் தார் ரோட்டுல நடக்கறச்சே எவ்ளோ அவஸ்தைப்படும் தெரியுமா. இங்க ரோடென்ன ரோடாவா இருக்கு. சண்டாளபாவிகள்....'' கரகர வென்று அழ ஆரம்பிப்பான்.

''என்னடா ரங்கராஜா... டேய்....''

''இல்லண்ணா. நீங்க சொல்லுங்கோ. நான் அழல. நீங்க சொல்லுங்கோ'' என்று தோள்பட்டையை உயர்த்தி கண்ணைத் துடைச்சுக்குவான்.

''மயிலாப்பூர் கௌரியம்மாள், பாலா மணியம்மாள், சந்திரலேகா மாதிரி இப்ப யார் யாரோ புதுசா புதுசா ஆடறாளாமே. எத்தன நாளைக்கு இந்த அலாரிப்பு, ஜதிஸ்வரம், தில்லானா, அலை பாயுதே-ன்னு பார்த்துண்டுருக்கறது. ஹிண்டுல அதைப் பத்தி பக்கம்பக்கமா எழுதுறான்.''

''குவாண்டம் தியரியெல்லாம் பத்திப் பேசுற. மார்டன் கிளாசிக் டான்ஸ பாக்கிலங்கிறயேடா.''

''அண்ணா அந்தமாதிரி எதாவது புரோகிராம் வந்தா, இந்த நாயைக் கூட்டிண்டு போப்படாதா.

அடடா... இன்னொன்னு தெரியுமா உங்களுக்கு?''

''காது ஏன் குத்துறா தெரியுமோ?''

''தெரியலையேடா...''

''மூளை நரம்புகளை அது ஸ்டுமிலேட் பண்ணி விடறது. எதுக்கு புள்ளையாருக்கு மின்ன காதைப் புடிச்சு, கால மடக்கி, மடக்கித் தோப்புகரணம் போடறோம். புத்தி ஷார்ப் ஆகத்தான். அதனாலதான் நம்ம கணக்கு வாத்தியாரெல்லாம் அந்தக் காலத்துல காத புடிச்சிண்டு தோப்புகரணம் போடச் சொல்வா. இப்ப யாராவது சொன்னா பசங்களும் கவர்மெண்டுமா சேர்ந்து வாத்தியாரைப் போட விட்ருவா.''

பேசிக்கொண்டே குடமுருட்டி ஆற்றங் கரைக்கு வந்துவிட்டோம்.

காற்று ஈஷிக்கொண்டு வந்தது. சட்டைக் காலர் படபடவென அடிக்கும் அளவுக்குக் காற்று.

''வாங்கண்ணா அந்த மதகுகிட்ட உட்காரலாம்.''

உட்கார்ந்தோம். திடுக்கென ஆற்றின் கீழ் இறங்கித் தண்ணீரை அள்ளிக் குடித்தான். வாயைக்

துக்கடா கார்னர்



கொப்பளித்தான். தலையில் தெளித்துக் கொண்டான். சூரிய பகவானைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டான்.

''எதுக்கு என்ன திடுதிப்புன்னு வீட்டுக்கு வந்தவனை வெளில கூட்டிண்டு வந்தேள்.''

''அதெல்லாம் உனக்குப் புரியாது. நீ என்ன விஷயமா வந்த அதைச் சொல்லு.''

''தண்ணியெல்லாம் அமிலமாயிடுத்துண்ணா.''

* இயற்கை அன்னை இனிமையாக நடனமாடும், முசௌரி, நைன்னிதால் மற்றும் ராணிகேத்... போன்றவை ஒ.எஸ். அருணுக்கு, இந்தியாவில் மிகவும் பிடித்தமான சுற்றுலா தலங்களாம். ''வெளி நாடுகளில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன்'' என்கிறார்.

* இவரது கச்சேரிகளை ஒன்றுவிடாமல் கேட்டு ரசிக்கும் ஒரு வி.வி.ஐ.பி. P.B. ஸ்ரீனிவாஸ். ''தென்னகத்தின் மொஹமத் ரஃபி'' என்று P.B.ஸ்ரீனிவாஸை அழைக்கிறார் அருண்.

* மிகவும் பிடித்தமான ராகம் என அருண் குறிப்பிடுவது பெஹாக். தவிர தோடியும் பைரவியும் அவரது ஃபேவரிட் லிஸ்டில் அடக்கம்.

* கச்சேரியைத் துவக்குவதற்கு முன் 'ஹனுமான் சாலீஸா' ஸ்தோத்திரப் பாடலைப் படிப்பது வழக்கமாம்.

– என்.எஸ்.கே.

''என்னடா சொல்ற.''

''அதான் கீழ போய் ரெண்டு வாய் ஜலம் குடிச்சனோல்யோ என்னென்ன இழவெல்லாமோ கொண்டாந்து ஆத்துல விட ஆரம்பிச்சுட்டா. நன்னா இருக்க மாட்டா. பயிர் விளையற மண்ணும் மலடா போயிடுத்தே. உரத்த போட விட்டே மண்ணைக் கொன்னுட்டாளே பாவிகள். நன்னா இருக்க மாட்டா. அவாளெல்லாம் நன்னாவே இருக்கமாட்டான்னா.''

''ஆமா இப்ப நீயும் நானும்தான் நன்னா இல்ல. ஐம்பூதங்களையும் அழிச்சிப்புட்டு, நன்னா கிம்பளம் வாங்கிண்டு, உசரமான பதவில உக்காந்திண்டு அவாள்ளாம் அம்பது தலைமுறைக்குச் சேத்து வச்சிண்டு, நன்னா சுபிட்சமா ஷேமமா இருக்கா. நீயும் நானும்தான் இப்படி அமிலத் தண்ணியைக் குடிச்சிபுட்டு ஆத்தங்கரைல உக்காந்து புலம்பிண்டிருக்கோம். அது கிடக்கட்டும் நீ எதுக்கு எங்காத்துக்கு வந்த, எதும் விஷயம் உண்டா.''

''இல்லண்ணா. இது ஒரு நியூட்டன் தியரி மாதிரி. இப்படியே விஷயங்கள் ரொம்ப நாள் நடக்காது; நடக்க முடியாது. எல்லாத்துக்கும் ஒரு ரியாக்ஷன் வரத்தான செய்யும். அய்யோ கடவுளே என்ன இழவுக்கு இந்தச் சனியன் புடிச்சவாள பத்திப் பேசி ஜீவன விடுவானேன். நாராயாணா நீங்க சொல்லுங்கோ''

''என்னடா சொல்லச் சொல்ற என்னை. என்ன காரியமா ஆத்துக்கு வந்தேன்னு உன்ன கேட்டா, என்னை என்னமோ சொல்லு சொல்லுன்னு சொல்லிண்டிருக்க படவா.''

''ஆமா... எதுக்கு வந்ததேன். சும்மா உங்களைப் பாக்கணும்ன்னு தோணித்து. வந்தேன்.''

''பாத்திட்டியோல்யோ நேரம் ஆயிடுத்துப் புறப்படுவோமா''

''சாயரட்ஷை ஆயிடுத்துன்னா. அந்தப் பக்கத்தில நாரைகளெல்லாம் வர நேரம். அதுகளைப் போய் பார்த்துட்டு வர்றேன். நீங்க போங்க.'' என்று சொல்லிவிட்டுக் கிடுகிடுவென நடக்க ஆரம்பித்தான். ●

அமரர் கல்கி

லலிதாவுக்குக் கலியாணம்!

ராஜம்பேட்டை அக்கிரகாரத்து வீடுகளில், சரி பாதி வீடுகளுக்கு மேலே பாழடைந்து கிடந்தன. உருப்படியாக இருந்த வீடுகளில் பட்டாமணியம் கிட்டாவய்யரின் வீடு, இரட்டைக் காமரா அறைகளுடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. வீட்டின் முன் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு சரஸ்வதி அம்மாள், தன் மகள் லலிதாவுக்குச் சடை பின்னிவிட்டுக் கொண்டிருந்தாள். பின்னல் முடியும் சமயத்தில், தபால் ஆபீஸ் பங்காரு நாயுடுவும் பாலகிருஷ்ணனும் கேட்ட 'ஜிங் ஜிங் ஜிங் ஜிங்' என்னும் சத்தம் அந்த வீட்டுக்குள்ளேயும் நுழைந்து லேசாகக் காதில் விழுந்தது.

"எத்தனை நேரம், அம்மா! சீக்கிரம் பின்னிவிடேன்!" என்றாள் லலிதா.

"மெதுவாகத்தான் பின்னுவேன்; என்ன அப்படி அவசரமாம்? பதைபதைக்கிற வெய்யிலே தபாலாபீஸுக்கு ஓட வேண்டுமாக்கும்! தபால் வந்திருந்தால் எங்கே போய் விடும்? தானே பாலகிருஷ்ணன் கொண்டு வந்து தருகிறான்!" இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பின்னல் முடிந்துவிட்டது. அதைத் தூக்கிக் கட்டப் போகும் சமயத்தில் லலிதா சடக்கென்று பிடுங்கிக் கொண்டு எழுந்தாள்.

"நான் கட்டிக் கொள்கிறேன், அம்மா!" என்று சொல்லிக்கொண்டே வாசற்பக்கம் ஓடினாள்.

"லலிதா! லலிதா! இங்கே வா! வா என்றால் வந்துவிடு. வராவிட்டால்... நீ... மாத்திரம் போய்விடுவாயோ? அப்புறம் திரும்பி இந்த வீட்டில் அடி வைத்தால்..."



இவ்விதம் சரஸ்வதி அம்மாள் சத்தம் போட்டுக் கொண்டிருக்கும்போதே பட்டா மணியம் கிட்டாவய்யர் வீட்டுக்குள்ளே நுழைந்தார். அப்பாவைப் பார்த்ததும் குழந்தை லலிதா தயங்கி நின்றாள். அவளுடைய தேகம் பூங்கொடியைப் போலத் துவண்டது. கபடு சூது அறியாத அவளது குழந்தை முகத்தில் வெட்கமும் சலுகையும் போட்டியிட்டன.

லலிதாவின் தாயார் கணவனைக் கண்டதும் எழுந்து நின்றாள். அவளைப் பார்த்துக் கிட்டாவய்யர், "என்ன தடபுடல், சரசு? எதற்காகச் சத்தம் போடுகிறாய்? எப்பொழுது பார்த்தாலும் குழந்தையைக் கோபித்துக் கொள்வதுதானா உனக்கு வேலை?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

வண்ணத் தூரிகை

''ஆமாம்; உங்கள் செல்லக் குழந்தையைக் கோபித்துக் கொள்வதுதான் எனக்கு வேலை. இப்படி நீங்கள் இடம் கொடுத்துக் கொடுத்து...''

''... இடம் கொடுத்துக் கொடுத்துச் சர்வ அசடாக ஆக்கிவிட்டேன். போகட்டும்; உன் வயிற்றிலே பிறந்தபோது அவள் சமத்தாகப் பிறந்தாள் அல்லவா? அதுபோதும். இந்தக் கலாட்டாவெல்லாம் இப்போது எதற்காக என்று கேட்கிறேன். லலிதா என்ன செய்துவிட்டாள்?''

''எத்தனையோ தடவை சொல்லியாச்சு! தபால் ஆபீஸுக்குத் தனியாக ஓடுவேன் என்கிறாள். தை பிறந்துவிட்டது; இந்த வருஷம் எப்படியாவது குழந்தைக்குக் கலியாணம் பண்ணியாக வேணும்...'' ''போதும், நிறுத்து! கலியாணத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''கலியாணம் பண்ணும் வயதான பெண்ணை யாராவது தனியாக அனுப்புவார்களா?''

''அனுப்பினால் என்ன? பூகம்பமா வந்துவிடும்? வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைக்கிற காலமெல்லாம் மலையேறிப் போய்விட்டது... லலிதா! நீ போய் வா! எனக்கு ஏதாவது தபால் வந்திருந்தால் அதையும் வாங்கிக் கொண்டுவா!''

அவ்வளவுதான்; அம்மாவைக் கடைக் கண்ணால் ஒரு தடவை பார்த்துவிட்டு லலிதா மானைப்போல் துள்ளி வாசலில் ஓட்டம் பிடித்தாள்.

- 'அலை ஓசை' புதினத்திலிருந்து...



நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ் 06.12.09முதல் 12.12.09 வரை

மேஷம்: மேன்மையான விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்தும் மேஷ ராசிக்குரிய நண்பர்களே! இது உல்லாசமான வாரம். சுப பேச்சுவார்த்தைப் பலனளிக்கும். ஊதிய உயர்வு சாத்தியமாகும். வியாபாரத்தில் அனுகூல மான போக்கு நிலவும்.

ரிஷபம்: ரிதமாய் வாழ்வை ஒலிக்கச் செய்வதில் வல்லவரரான ரிஷப ராசி அன்பர்களே! பூர்வீகச் சொத்து உங்கள் விருப்பப்படி பாகப் பிரிவினையாகும். உங்கள் வாக்கே உங்களுக்குப் பகையாகக் கூடும். ஏதேனும் பொருள் இழப்பு இருக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும்.

மிதுனம்: மின்னல் போல க்ஷண நேரத்தில் முடிவெடுப் பதில் சூரரான மிதுன ராசிக்காரர்களே! கண்டிப்பாகக் குலதெய்வ வழிபாட்டுக்குப் பிரயாணமும், ஒரு சுப செலவும் சுப செய்தியும் உடன்பிறந்தவர்களால் ஓர் அனுகூலமும் உங்களை வந்தடையும்.

கடகம்: கடமைத் தவறா கடக ராசி நேயர்களே! வெளிநாட்டிலிருந்து அழைப்பு வரும். கடன் சுமை விலகும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் அமையும். பலருக்கு உத்யோகத்தில் இடமாற்றம் உண்டாகும்.

சிம்மம்: சிந்தனையிலேயே மூழ்கியிருக்கும் சிம்மக் காரர்களே! நீங்கள் யோசிக்காமலேயே சத்ரு தொல்லையும், பூர்வீகச் சொத்து வரவும், இல்வாழ்வு சுகமும், தானாகவே வந்து சேரும்.

கன்னி: கலகலப்பான கன்னி ராசிக்காரர்களே! புதுசா தொழில் துவங்க சரியான சந்தர்ப்பம் இந்த வாரம்தான். உறவுகளின் தொல்லை நீங்கும். இடமாற்றம் கைக்கூடும். சுப செலவு நிகழும்.

துலாம்: துஷ்டனைக் கண்டாலே தூர விலகும் துலாம் ராசி அன்பர்களே! இவ்வாரம் மகான் தரிசனமும் புண்ணிய ஸ்தலமும் செல்லவும் பிரகாசமான வாய்ப்புண்டு. கல்வியில் உயர்வு இருக்கும். கடன் தொல்லை தீரும். மனத்தில் நினைத்த காரியம் ஜெயமாகும்.

தனுசு: தளராத உள்ளம் கொண்ட தனுசுக்காரர்களே!

சில வம்புகள் முடிவுக்கு வரும். மனசஞ்சலம் விலகும். குஷியான பிரயாணம் போவீர்கள். பண வருவாய்க்கு வாய்ப்புண்டு. வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும்.

மகரம்: மற்றவர் மனம் கோணாமல் நடக்கும் மகர ராசி அன்பர்களே! நீண்ட காலம் தடைப்பட்டு வந்த காரியம் சட்டென நடத்து முடியும் சுபமாய். பண நெருக்கடி, உறவுகளின் கருத்து வேறுபாடு மறையும். உத்யோக உயர்வு சத்தியமாய் உண்டு.

கும்பம்: சளைக்காத நெஞ்சுரம் கொண்ட விக்கிரமாதித்தனின் சாயல்களே! நீங்கள் கொஞ்சம் பயணப்பட வேண்டி வரும். குடும்ப சண்டைகளைச் சமாளித்து விடுவீர்கள். கூட்டாளி விலகிப் போனாலும் சங்கடப்பட மாட்டீர்கள். வேறு வழியில்லை. பண விரயம் தவிர்க்க முடியாது.

மீனம்: துள்ளிக் குதிக்கும் மனசுக்காரர்களே! வேலையில் இடமாற்றம் புதிய தொழில் துவங்குதலும் சாத்தியமாகும். வாகன யோகம் வாய்க்கும். மனை வாங்க சாதகமான சூழல் வரும். ○



கலக்க வருதுப்பா

கல்கி ரீடர்ஸ் கெட் ரெடி

எதையுமே... பெஸ்ட்டா பார்த்து செலக்ட் பண்ணும் ரசனை உடைய
திருச்சி மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

எதெல்லாம் எழுதுவீங்க..?

* உங்க ஊர் பெருமைகள் * வெற்றிக் கதைகள் * உங்க ஊர் பெஸ்ட்டைப் பாழ்படுத்தற வொர்ஸ்ட் * பின்னோக்கி இழுக்கும் பிரச்னைகள் * புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் * வி.ஐ.பி. இன்டர்வியூ * மிஸ்டர்/மிஸ் மாவட்டம் யாரு? * தொழிற்சாலைகள்

அப்ப ஆன்மிகம்?

மோஸ்ட் இம்பார்ட்டண்ட் ஆச்சே!
* மலைக்கோட்டை * ஸ்ரீரங்கம் * சமயபுரம்...
எல்லாமே உங்க மாவட்டம்தானே...

டூரிஸ்ட் ஸ்பாட்டையும் எழுதுங்க ஸார்...

கண்டிப்பா... கல்லணை, முக்கொம்பு... இன்னும் என்னவெல்லாம் இருக்குன்னு சொல்லுங்க

எழுத்தாளர்களுக்கு...?

* நச்சுன்னு கதை கொடுங்க * ஜில்லுன்னு ஜோக்ஸ் தாங்க * துணுக்கு தட்டிவிடுங்க * ஸ்பெஷலா கவிதை அனுப்புங்க

வாசகர்கள் என்ன பண்ணனும்...?

நீங்கதான் ரொம்ப முக்கியம். உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் திருச்சி ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!



ஆமாம்! உங்கள் திருச்சி மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

வர்றோம்...

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 13.12.2009

கலக்க வருதுப்பா கல்கி
திருச்சிராப்பள்ளி

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

எஸ்.ராஜகுமாரன்

ராகப்

ரீதிகௌளைக்கும்
துயரங்களின் வனப்பிற்கும்
ஏதோ ஒரு
இழைத்தொடர்பிருக்கிறது.

அரவமற்ற வனாந்தரத்தில்
நின்றபடி
எப்போதும் புன்னகைக்கிறாள்
மதுவந்தி.

பறவைக்குரல்களின்
ஸ்வரச் சலங்கைகளைத்
தனது மென்கால்களில்
அணிந்தபடி ஆடுகிறாள்
ஆபோகி.

முல்லை அரும்பின் வாசனையை
சுவாசக் காற்றினூடாக
நுரையீரலுக்க அனுப்பும்
நுட்பத்தில்
கைதேர்ந்தவள் கானடா.

ஆன்மாவின் வர்ணங்களைக் குழைத்து
பெருவெளிகளில் ஓயாமல்
சித்திரம் தீட்டியபடியே அலைகிறது
சிம்மேந்திரமத்யமத்தின் தூரிகை.

நடைவண்டியைப் பிடித்து
நடை பழகும் குழந்தையைப் போல்
ராகங்களின் கைபிடித்தபடி
கடந்துகொண்டிருக்கிறது வாழ்வு.


ஓவியம் : தமிழ்
பெருவெளி

ஆடவர்கள்



* மதுசூதனன்

"அதென்னவோ ஸார்... ஆம்பிளைங்க நடன மாடினால் ரசிக்கல... 'சலங்கை ஒலி'ல கூடப் பாருங்க.. 'நாதவிநோதங்கள்' பாட்டில் கமலஹாசன் ஆடுவதை விட, ஜெயப்ரதா இணையும் போதுதான் அழகு கூடுகிறது. நடனம், ஐ மீன் பரதநாட்டியம் என்பது ஆண்களுக்கல்ல... பெண்களுக்குத்தான்" என்கிறார் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர்.

தவிர, நடனத்தில் பெண்களே பிரபலமடையவும், ஆண்கள் ஆடுவதற்கு அரங்கங்கள் தேடும் நிலையிலும் இருக்கின்றனர். எதைப் பின்புலமாகக் கொண்டு ஆண்கள் நடனத் துறையில் இருக்கின்றனர்? 'நடனக் கலையின் மீதுள்ள அளவற்ற ஈடுபாடு தவிர வேறென்ன?' என்பதே பல ஆண் கலைஞர்களின் 'பளிச்' பதில்.

எனினும் நடனமாடும் ஆண்களுக்கு இன்னொரு பிரச்னை, 'நடை, உடை, பாவனைகளில் பல சமயம் பெண்மை புகுந்துகொண்டு சராசரி ஆண்களிடமிருந்து அவர்களை வேறு படுத்திக் காட்டுகிறது என்பதுதான். இதைச் சமூகம் சில சமயங்களில் ஒரு வகை வித்தியாசமான நடத்தை என்று எடுத்துக்கொண்டாலும் கூடவே நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறது. இதற்குக் காரணம் என்ன? நடனமாடும் எல்லா ஆடவர்க்குள்ளும் ஒரு பெண் ஒளிந்து கொண்டுதானிருக்கிறாளா? அல்லது அவர்களில் சிலர் வேண்டுமென்றே செய்யும் உத்தியா? அதனால் என்ன லாபம்? கேள்வியோடு சில நடன கலைஞர்களிடம் பேசினோம்...

"இது தவறான கருத்து" என்கிறார் கலாக்ஷேத்ராவில்

'ஆடவர்'



* ஸ்ரீஜித் கிருஷ்ணா

ஆசிரியராகப் பணியாற்றும் பிரபல நடனக் கலைஞர் ஸ்ரீஜித் கிருஷ்ணா. ''என்னிடம் நடனம் பயிலும் மாணவர்களில் பத்தில் எட்டு பேர் நீங்கள் தினம் எதிர்கொள்ளும் கல்லூரி மாணவர்கள் போன்றவர்கள்தான். சுபாவத்திலேயே மென்மையான குணமும், நடத்தையும், பழக்க வழக்கங்களும் உள்ள சிலர், தங்கள் குருவாக இருக்கும் பெண் ஆசிரியர்களின் நாட்டியத்தையும், அசைவுகளையும் அப்படியே ஒற்றியெடுப்பதால் வரும் பிரச்னை அது.

தவிர, ஆண் மேடையேறி நிற்கும் போதே அவன்தாம் ஓர் ஆண், தமது நடனம் ஆணுக்குரிய தாண்டவமாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உணரும்போது அத்தகைய பெண்மையின் பாதிப்பு வராது. அதே சமயம், நாயகியின் பாவத்தை மிக அழகாகக் வெளிக் கொண்டுவந்து காட்டுவது அவருக்கு ஏற்படும் சவால், அதையும் சாதுர்யமாகச் செய்து காட்டுபவன்தான் கலைஞன்'' என்கிறார்.

மதுசூதனன் கலாக்ஷேத்ராவில் பயின்று இன்று பல பிரபல நடனக் குழுக்களில் நடனமாடி வரும் இளைஞர். ''கலாக்ஷேத்ராவில் சேரும்வரை நான் பெண் ஆசிரியைகளிடம்தான் நடனம் பயின்றேன். ஆனால், இங்கு சேர்ந்து ஆண் நடனக் கலைஞர்களிடம் பயிற்சி பெற்று, பின்னர் அதே அபிநயம், அசைவுகளை, அழகு குறையாமல், ஓர் ஆணின் கம்பீரத்துடன் எப்படிச் செய்வது என்று உணர்ந்து என்னை அதற்குத் தகுந்தாற் போல் மாற்றிக்கொண்டேன்'' என்கிறார்.

''**ம**னித உடலில் ஒளிந்திருக்கும் பெண்மையின் ஒரு வகையான வெளிப்பாடுதான் நடனத்தின் மேலுள்ள ஆசையும், ஆர்வமும்'' என்கிறார் லக்ஷ்யா என்ற பெண்ணாகத் தன்னை

சொல்லுக்கட்டு:

இந்த ஐ.டி.யுகத்தில் நடனக் கலைஞராக விளங்கி பொருளாதார வல்லமை பெறுவது ரொம்ப கஷ்டம். வாய்ப்புகளே குறைவு; போட்டி அதிகம்; பலர் பணம் கொடுத்து வாய்ப்பு வாங்கவும் துணிகிறார்கள். குடும்பத்தைப் பேணும் பொறுப்பில் உள்ள ஆண், தொழில்முறை நடனக் கலைஞராக இருந்தால், அவருக்குப் பெண் கொடுக்கக் கூடத் தயங்குகிறார்கள்.

ஆண் கலைஞர்கள் நளினத்தையும் கம்பீரத்தையும் சரியான விகிதத்தில் தராவிட்டால் ரசனைக் குறைவாகத் தோன்றிவிடும்! இதுவும் ஒரு பெரிய சவால்...

- கிரீஷ், சாய்நாத் (கலாக்ஷேத்ரா மாணவர்கள்)

மாற்றிக் கொண்டுள்ள நடனக் கலைஞர் ராஜேஷ். ''நடனம் என்பது தெய்வீகக் கலை; அதில் தேர்ச்சிபெற்ற ஒருவரின் நடத்தையையும், அலங்காரத்தையும் வைத்து ஏன் ஆண் - பெண் என்று பாகு படுத்த வேண்டும்? எனக்குள் ஒளிந்திருந்த பெண் ஒரு சமயத்தில் மிகத் தெளிவாக விழித்தெழுந்து கொண்டபோதுதான் மருத்துவ ரீதியாக என்னை முழுவதும் பெண்ணாக மாற்றிக்கொண்டேன்.



* லக்ஷ்யா

ஆனால், பெண்மையின் சாயலோடு ஆணாக இருந்தபோது கிடைக்காத நிறைவு இப்போது எனக்கு மனத்தில் இருக்கிறது. சில ஆண் நடனக் கலைஞர்களிடம், பெண் மையின் ஆதிக்கம் அதிகமாக இருக்கை யில் அது அவர்களின் நடை, உடை, பாவனைகளில் வெளிப்படுவது உண் மையே. நடனக் கலைஞர்களுக்கு மட்டு மல்ல! ஒரு சாதாரண மனிதனுக்குக் கூட இது ஏற்படலாம்'' என்று பேசும் லக்ஷ்யா இன்று 'லக்ஷ்யா ஆர்ட் ஃபௌண்டேஷன்' என்ற நடனப் பள்ளியின் நிறுவனர்.

கலை வேறு; தனிமனிதனின் வாழ்க்கை வேறு; அவன் பழக்க வழக்கங் கள் வேறு. இவற்றுக்குள் ஒன்றுக்கொன்று வெளிப்படையாகவோ, பூடகமாகவோ தொடர்பு இருந்தாலும்கூட அதைப் பொதுவான அபிப்ராயமாகக் கொள்ள முடியாது.

பரதக் கலையின் பெரும்பாலான உருப்படிகள் ஒரு நாயகி தன் நாயகனுக்கு ஏங்குவதாகவே அமைந்திருப்பதால், நாட்டியம் என்பது பெண்களுக்குரிய கலை என்கிற ஆழ் மனோபாவம் விழுந்து போகிறது. இது ஆடுவோரை மட்டுமின்றி, ரசிகர்களையும் ஓரளவு பாதிக்கிறது.

நடராஜரின் சிலையை உற்றுப் பாருங் கள். உடுக்கை போன்ற அந்தச் சிறிய இடையும், விரிந்த பின்னழகும், வளைந்து, நெளிந்த கைகளும், கால்களும், அலைபாயும் விரிசடையும், பெண்மை தவழும் முகமும் பெண்களுக்கே உரி யவையாகத் தோன்றவில்லையா? தன்னில் பாதி பெண்ணை வைத்தவர்தானே அந்த ஆடலரசனான ஈசன்? அவனிடம் பெண் மையின் மென்மையும், ஆண்மையின் கம்பீரமும் சரியான விகிதத்தில் கலந்தே தான் இருக்கும். வித்தியாசமோ, விகற் பமோ பார்ப்பவர் விழிகளில்தான்.

- தேவவிரதன்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகிறனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

நாஞ்சில்நாட்டில்...

'சந்தனக்காடு', 'ஆட்டோ சங்கர்' போன்ற உண்மை சம்பவங்களை மையமாக வைத்து டீ.வி.தொடர்கள் இயக்கிய இயக்குநர் கௌதமன், எழுத்தாளர் நீல.பத்மநாபனின் 'தலைமுறைகள்' நாவலை 'மகிழ்ச்சி' என்ற பெயரில் படமாக இயக்கிக் கொண்டிருக்கிறார். முதல் ஷெட்யூல் முடித்துவிட்டு வந்தவர், நம்மிடம் மகிழ்ச்சியாகப் பேசுகிறார்.

''மத்த டைரக்டர்களைப் பார்த்து நீங்களும் ஹீரோவாகிட்டீங்களான்னு நிறைய

பிரகாஷ்ராஜ் வாத்தியார்...



பேர் கேட்கறாங்க. நான் சென்னைக்கு இருபது வருஷத்துக்கு முன்னாடி வந்ததே, நடிக்கும் ஆசையில்தான். இன்னைக்கு அது நிறைவேறியிருக்கு. 'மகிழ்ச்சி' ரிலீஸ் ஆனதுக்கு அப்புறம் இவ்வளவு திறமைகளை வைச்சுக்கிட்டு ஏன் இத்தனை நாள் நடிக்காம இருந்தீங்கன்னு கேட்பீங்க பாருங்க. சினிமாவுல எங்களை மாதிரி இருக்கறவங்களுக்குப் பெரிய பின்புலம் எதுவும் இல்லை. எங்களின் திறமைகளைத் தவிர.

தொண்ணூறுகளில் சதைகளை மட்டுமே நம்பி தமிழ் சினிமா வந்துகொண்டிருந்த கால கட்டத்தில் சினிமாவைவிட்டே போய்விடலாம் என்றுகூட எண்ணி இருந்தேன்.

இந்தச் சூழலில்தான் நீல.பத்மநாபன் எழுதிய 'தலைமுறைகள்' நாவலைப் படித்தேன். நாவலைப் படித்து முடித்ததும் என் சிந்தனையில் ஒரு ரசவாத மாற்றம். இந்தக் கதையைத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரிக்க ஆரம்பித்தது. என்னுடைய வாழ்வின் போக்கையே மாற்றியதில் இந்நாவலுக்கு முக்கிய பங்கு உண்டு'' என்னும் கௌதமனிடம், அவரது ஆர்வத்தைப் பார்த்து, ''கண்டிப்பா இந்த நாவலை நீதான் படமாக்கப் போகிறாய். வேறு யாருக்கும் நான் இந்தக் கதையைத் தரமாட்டேன்'' என்று உறுதியளித்திருந் திருக்கிறார் நாவலாசிரியர் நீல.பத்மநாபன்.

''அதன் பிறகு எத்தனையோ சினிமா மேதைகள், 'தலைமுறைகள்' நாவலைப் படமாக்க முயற்சி செய்தும் அதற்கெல்லாம் இசையாமல், எனக்காகவே இத்தனை ஆண்டுகள் காத்திருந்து கதையைத் தந்திருக்கிறார்'' என்று

சீமான் முரடன்...

கௌதமன் பெருமிதப்படுகிறார்.

''எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நாஞ்சில் நாட்டுக்குப் புலம்பெயர்ந்த ஒரு சமூகத்தைப் பற்றிய கதை. இந்த நாவலின் கதை நகரும் நாகர்கோயில் இரணியல் பகுதியில் படமாக்கியிருக்கிறோம். நாயகன் திரவியம், அன்பு, தேவைக்கு ஏற்ற கோபம், கட்டெரிக்கும் குணம் என்ற குணாதிசயங்களைக் கொண்டவன். இப்படி ஓர் இளைஞன் நம்வீட்டில் இல்லையே என்று ஒவ்வொரு தாய்மார்களும், சகோதரிகளும் ஏங்கும் அளவுக்கு நடந்துகொள்பவன்.

கதாநாயகி 'குழலி'யாக கற்றது தமிழ் அஞ்சலி வாழ்ந்திருக்கிறார். பக்கத்து வீட்டுப் பொண்ணு மாதிரி இருக்கறதாலேயே அஞ்சலி மனகல நிக்கறாங்க.

பிரகாஷ்ராஜ் எனக்கு வாத்தியாரா வர்றார். மனுஷன் ரொம்ப இயல்பா வாழ்ந்துட்டுப் போயிருக்கார். சீமான் குற்றாலம்ன்ற முரட்டு மனுஷனா பண்ணிருக்கார். உணர்வுகளை அற்புதமா உள்வாங்கி அழகா வெளிப்படுத்துறார். தமிழிலும் மலையாளமும் சந்திக்கும் நாஞ்சில் நாட்டை கதைகளமாக்கி, செல்லுலாய்டில் தருவதே மகிழ்ச்சிதான்'' என்கிற கௌதமன்,


''நாவலைப் படமாக்குவது தமிழ் திரைப்படச் சூழலுக்குப் பொருந்திவராது என்ற எண்ணம் இங்கே இருக்கிறது. பூமியிலிருந்து வெட்டி எடுக்கும் தங்கத்தை அப்படியே ஆபரணமாக அணிந்துகொள்ள முடியாது. அதை உருக்கி, செம்பு சேர்த்தால்தான் பொன்னாக ஜொலிக்கும். சிறந்த நாவலையும் எழுத்தாளரின் ஒப்புதல் பெற்று, சினிமாவுக்கு ஏற்றாற்போல் மாற்றி நாவலின் ஆன்மா கெடாமல் வழங்கினால் நிச்சயம் வெற்றி. இந்தியாவின் மிகச்சிறந்த படங்களில் 'மகிழ்ச்சி' இடம் பெறும்.

ஏற்கெனவே எழுத்தாளர் ஜெயகாந்தனின், 'சினிமாவுக்கு போன சித்தாள்' நாவலை அவரிடம் அனுமதி பெற்று குறும்படமாகத் தயாரித்து அவரின் பாராட்டை பெற்றிருக்கிறேன்'' என்கிறார் கௌதமன் ஏகபோக மகிழ்ச்சியுடன்.

- ராகவ்குமார்



* அஞ்சலி



"தனியைப் பிரமாதமா பிச்சு உதறுராரே... மிருதங்க வித்வான்!"

"வாயிலே பன்னீர்ப் புகையிலையை அடக்கிண்டுட்டாரே... அதான்!"



சிரித்தருள்வாயே...!

"ஃப்ளூட் வித்வான் பின்னாடி, சிஷ்யன் உலக்கையைத் தூக்கிண்டு போகிறானே...?"

"அது உலக்கை இல்லை ...ஃப்ளூட்! வித்வான் ஹிந்துஸ்தானி ராகக் கச்சேரி பண்ணப் போறாறாம்..."





"நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லாம பாடிண்டே இருந்தா என்ன அர்த்தம்?"


"இந்த சீஸனிலே நீ பாடின கச்சேரி சன்மானம் பூரா டிரை கிளீனிங் பில்லுக்கும், மல்லிப்பூவுக்குமே சரியாப்போச்சு!"
ராகம்: ஹாஸ்யப்ரியா
தாளம்: குறும்புசாப்பு
கம்போஸர்: கோபுலு
"இன்னிக்கு வாத்தியத்திலே பிருகா சங்கதி சரியாவே விழமாட்டேங்குதே...!"
"நேற்று நீங்க பண்ணின கச்சேரிலே போட்ட பிருகாவோட மிச்சம், வாத்தியத்துக்குள்ளே சிக்கிண்டு இருக்கும்போல இருக்கு... தட்டிப் பாருங்க!"
"சைல்ட் ப்ராடிஜி சக்கரவாகன்! என்னமா 'கீ-போர்டி'லே பூந்து விளையாடறான் பாருங்க!"

அஜயன் பாலா

சென்னைக்கு வந்து ரெண்டு நாளாகி விட்டது. இன்னும் விசாகப்பட்டினத்திலிருந்து தேன்மொழியால் மீள முடியவில்லை. ரெண்டே நாளில் எத்தனை எத்தனை அனுபவங்கள். அவன் யார் என்றே தெரியவில்லை ஊர் பேர் தெரியாதவன். டிக்கெட் இல்லாமல் ஸ்டேஷனில் தத்தளித்தபோது, சட்டென ரயிலை விட்டிறங்கி வந்து உதவிவிட்டுப் போனான். போகும்போது பேரைகூடச் சொல்லாமல் போயே போனான். இது இப்படி என்றால் இன்னொரு பக்கம் உயிர் தோழி கார்த்திகா. ஐந்து வருடமாய் அத்தனை நெருங்கிப் பழகியவள். கல்யாணத்துக்கு மட்டும் நீ வராவிட்டால் தாலியே கட்டிக்கொள்ள மாட்டேன் என பெரீஸ்லாக வசனம் பேசியவள். விழுந்தடித்துக்கொண்டு கல்யாணத்துக்குப் போனால், அங்கு மூஞ்சியைத் தூக்கி வைத்துக்கொண்டாள்.

தேன்மொழியால் இந்த இரண்டாவது சம்பவத்தைத்தான் மறக்கவே முடியவில்லை. துவக்கத்தில் ஏதோ குடும்ப பிரச்னையாக இருக்கும் எனதான் நினைத்தாள். அதன் பிறகு தான் மெல்ல மெல்ல கோபம் தன் மீதுதான் என்பதை தேன்மொழி தெரிந்துகொண்டாள். கல்யாண வீட்டில் தழையத் தழைய புடைவையும், சுமக்கமுடியாத நகையையும் மாட்டிக்கொண்டிருப்பவளிடம், என் மேல உனக்கு என்னடி அப்படி ஒரு கோபம் என கேக்கவா முடியும். தாலிகட்டி முடித்த அடுத்த நிமிடமே அப்பாவுக்கு ஃபோன் போட்டு ப்ளைட் டிக்கெட் போட்டு அன்று இரவே வந்து சென்னையில் இறங்கிவிட்டாள்.

ஒரு தோழி தன் கலயாணத்துக்கு வந்திருக்கிறாளே என்ற இதுகூட இல்லாமல்

பகல் மீன்கள்

9

அப்படி என்ன கோபம் அவளுக்கிருக்கும்... ப்ளைட்டில் வரும் போதுதான் சட்டென காரணம் அவளுக்கு மின்னல் அடித்தது. ஒருவேளை அதுவாகத்தான் இருக்கும். மகேஷுக்கு ஃபோனை போட்டு ஊர்ஜிதம் செய்துகொண்ட பின்தான் இவளுக்கு ஓரளவு மனம் சமாதனம் ஆகியது. உடனே கையோடு கார்த்திகாவை அழைத்துக் கண்ணபின்னாவென திட்ட முடிவு செய்தவள், பின் ரெண்டுநாள் மகிழ்ச்சியில் திளைக்கட்டும் பிறகு வைத்துக்கொள்ளலாம் என முடிவு செய்துகொண்டாள்.

கார்த்திகாவின் இன்றைய காதல் கணவன் மகேஷ், முதலாம் ஆண்டில் மிகபெரிய ஜொள்ஸ். கார்த்திகா மெடிக்கல் அது இதுன்னு அலைந்துவிட்டு கல்லூரிக்குள் சற்று தாமதமாக கால் வைத்தவள். அதனால அவளுக்கு முதல் மூன்று மாதங்களில் நடந்த இந்த விவரம் தெரியாது. தேன்மொழிக்காகக் காதல் கடிதம் கொடுக்கப் பின்னாலேயே கொஞ்ச நாள் அலைந்தான். ஒருநாள் தேன்மொழியேகூட அழைத்து டோஸ் விட்டிருக்கிறாள். அந்தன்னைக்கி முகத்தைத் துடைத்துக்கொண்டு அப்பால் சென்றவன், பிறகு தோழிவிடு தூதுக்காக கார்த்திகாவைப் பார்க்கபோய் தயங்கி, இது தெரியாமல் கார்த்திகா தனக்காகத்தான் என மயங்கி, பிறகு இவனும் அப்படியே ட்ராக்கை மாற்றி கார்த்திகாவைக் காதலிக்கத் தொடங்க அதுதான் ஐந்து வருட வளர்ச்சிக்குப்பின் இப்போது கல்யாணம் வரை நீண்டிருக்கிறது. கார்த்திகாவும் மகேஷும் சின்சியர் சிகாமணிகள் என தெரிந்து

கொண்ட தேன்மொழி, அவளிடம் மகேஷ் தொடக்கத்தில் தன் பின்னால் அலைந்த விவரங்களை நாகரீகம் கருதி சொல்லவில்லை. திருமணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன், மகேஷ் தன் நண்பர்களுக்கு அளித்த பேச்சிலர் பார்டியில் முதன்முதலாக நான் தேன்மொழியைத்தான் லவ்விளேன் என சொல்லப்போக கார்த்திகாவுக்குள் பட்டாக வெடித்திருக்கிறது. ஏதோ திட்டமிட்டு தேன்மொழியே இதனை மறைத்துவிட்டதாகக் காரணமில்லாமல் கோபம் அவளுக்கு தேன்மொழியின் மேல். ச்சே இத்தனை நாள் பழகியும் எனது சுபாவத்தையும் நாகரீகத்தையும் புரிந்துகொள்ளவில்லையே. தேன் மொழிக்கு வீடுவந்து சேருவதுவரை இதுதான் குடைச்சல் ...

மாறாக இன்னொரு பக்கம் அவன். பெயர் சொல்லாமல் போன பெருந்தகையாளன்.

'நாயகனாய் நின்ற நந்தகோபன்'... ஆண்டாளின் பாசுரம் ஒன்று மனதில் உருத் திரண் டது. சட்டென கோதை யாக மாறி அவனுக்காகச்



சரம்சரமாய்க் கவிதைகள் தொடுக்கவேண்டும் போல நெஞ்சு நெக்குருகியது. படுத்துக்கொண்டிருந்தவளைக் கீழே டாடியின் குரல் எழுப்பியது.. ஸ்கிரீனைத் தள்ளிவிட்டுக் கீழே எட்டி பார்த்தாள். அருணாச்சலம் தோட்டவேலையில் மும்மரமாக இருந்தார்.

''டாடி கூப்பிடிங்களா?''

''என்னம்மா ஃபோனை சுவிட்ச் ஆஃப் பண்ணிருக்கியா?''

இப்போதுதான் ஃபோனைப் பார்த்தாள். ஆமாம் எங்கே கார்த்திகாவுக்கு ஃபோனைப் போட்டுத் திட்டி விடுவோமோ என்ற பயம் காரணமாக இரவு ஆஃப் பண்ணி வைத்தது ஞாபகத்துக்கு வந்தது.

''ஆமாம் சொல்லுங்க டாடி ''

'அதான்... காலையிலேர்ந்து இதுவரைக்கும் மூணு மெசேஜ் அனுப்பிட்டேன்... கீழ எட்டிப் பாக்க சொல்லி...''

''எனிதிங் ஸ்பெஷல் ...''

''நத்திங்...வைஸாக் போனதலேர்ந்து ஆள் ரொம்ப டல்லாயிட்டியே என்ன சமாச்சாரம்னுதான்.''

''நான் உங்ககிட்ட அதை பேசறதுக்காகத்தான் பலதடவை கூப்பிட்டேன். நீங்க ரெண்டு நாளா ஒரே பிஸி...''

அப்பாவிடமிருந்து பூவாளியை வாங்கிக்கொண்டு தானே தண்ணீரை நிரப்பித் தூக்கிக் கொண்டு வந்தாள்.

''என்னம்மா செய்யறது... எப்பவும் வாழ்க்கையில பிஸி பிஸின்னு சொல்லிகிட்டே இருக்கறதுக்காகத்தான் பிஸினஸே பண்றோம்... சரி இன்னிக்கு ஸண்டேவாச்சே. உங்கூட கொஞ்சம் பேசலாம்னு நெனச்சேன். அப்புறம் கார்த்திகா பேசினாளா. சமாதானமாயிட்டீங்களா...''

''அதில்லப்பா. நான் உங்கக்கிட்ட சொல்ல நெனைச்சது ரயில்லை ஒரு வித்தியாசமான ஆளை மீட் பண்ணினேம்ப்பா...''

''ஈஸிட்''.

''சச் எ ஃபெண்டாஸ்டிக் கை.''

தேன்மொழி இப்படி யாரையுமே கூறியதில்லை. அருணாச்சலம் மகளையே பார்த்தார். மனசுக்குள் பயம். அந்த பயத்துக்குப் பலகாரணங்கள்.

துக்கடா கார்னர்

* சேலையின் நிறத்துக்கேற்ப விதவிதமான ஃபேஷன் நகைகளை வளையல்களைத் தாமே வடிவமைத்து அணிகிறார் மாலா சந்திரசேகர்.

நன்றாக பூ தொடுப்பது, வரைவது, பலவிதமான ஊறுகாய்கள், பொடி வகைகள் செய்வது சமைத்து அசத்துவது... என கிச்சனில் சகலகலா வல்லியாகத் திகழ்கிறார் இவர்.

இவரது இல்லத்தின் அழைப்பு மணியை அழுத்தினால், 'கௌசல்யா சுப்ரஜா' என தொடங்கி பல விதமான தெய்வீகப் பாடல்கள் ஒலிக்கிறதாம்.



சிக்கில் மாலா சந்திரசேகர் -புல்லாங்குழல் கலைஞர்

- என்.எஸ்.கே

இவள் காதலிக்க ஆரம்பித்தாள் அவ்வளவுதான்... ஒன்று அவள், இல்லை தான்... இருவரில் ஒருவர் பைத்தியமாகவிட வேண்டும். அப்படியே முடங்கி போய் அறைக்குள் சுருண்டு விடுவாள். இந்த உற்சாகம் இருக்காது. அப்புறம் ஒரு நாள் ஃபோனைப் போட்டு ''டாடி ஹி வில் நாட் பிட்பார் அஸ் டாடி... நவ் ஐயாம் ஆல்ரைட் டாடி'' என்பாள்.

''பேர் என்னம்மா?''

''அதான் டாடி இண்ட்ரஸ்டிங். அவன் பேரையே சொல்லலை.''

''அப்படின்னா...''

தேன்மொழி தான் அப்பாவிடம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதையே மறந்து, அந்த நாளில் அந்த ரயில் நின்ற காலை பொழுதில் கரைந்தாள்.

அருணாச்சலத்துக்கு மகளின் ஈடுபாடும் ஆர்வமும் தான் பயமுறுத்தியது.

அவளிடம் சில திறமைகள் இருக்கிறது அதை வைத்து சுயமாக அவள் வாழ்க்கையில் பிரகாசிக்க முடியும். உதவியாளன் வினோத்திடம் இம்மீடியட்டாக டிஸ்கஸ் பண்ணவேண்டும். நல்ல ஒரு யோசனையைப் பட்டெனச் சொல்வான். தந்தையின் மனம் படும்பாட்டை அறியாமல் தேன்மொழி கண்களில் ஆயிரம் நட்சத்திரங்கள் பிரகாசிக்க நடந்த சம்பவத்தைச் சொல்லி முடித்தாள்

''டாடி... இந்த உலகத்தில் அவன் இப்ப எந்த மூலைல இருக்கானோ....?!''

சூர்யாவுக்குச் சட்டென விழிப்பு தட்டியது. கூடவே பசிக்கவும் செய்தது. மணி பார்த்தான். பதினொன்று . ரயில் சீறிப்பாய்ந்துகொண்டிருந்தது. பாத்ரூமுக்குப் போய் விட்டு மீண்டும் கம்பியில் கால் வைத்து மேல் பெர்த்தில் ஏறினான். மனசு காரணமே இல்லாமல் குரங்கைப் பற்றி யோசித்தது. குனிந்து பார்த்தான் கூபே முழுக்க குரங்குகள். உட்கார்ந்தும் கால்நீட்டி படுத்தபடியும். சிரிப்பாக இருந்தது. மனிதனுக்குள்ளிருந்து குரங்குகள் இன்னமும் முழுதாய் வெளியேறவில்லை. நகர பேருந்துகளில் காலையில் கூட்டமாகத் தொங்குவதுகூட அதன் மிச்ச உணர்வுதான். அவனது இந்தத் தொடர் யோசனையை வயிறு பாதியில் நிறுத்தியது. சாதாரண பசிதான். ஆனால், அடுத்த சில நொடிகளில் அது அகோரப் பசியாக மாறியது.

ஹவுரா ஸ்டேஷனில் ஏ.டி.எம். மிஷின்கள் தன்னை இப்படி ஏமாற்றும் என அவன் கனவிலும் நினைக்கவில்லை. இதை வைத்து நவீன உலகில் மனிதன் எதிர்கொள்ளும் எதிர்பாராப் பிரச்னையின் வடிவங்கள் என ஒரு கட்டுரையே எழுதலாம். ஏ.டி.எம். கார்டு இருக்கும் தைரியத்தில் வெளியூரில் அலைபவர்களுக்கு இந்த அனுபவம் எச்சரிக்கையாக இருக்கும்.

அது சரி அறிவு ஜீவியே இப்போது உன் வயிறுக்கு நீ என்ன பரிகாரம் செய்ய போகிறாய்... மனசு கேள்வி கேட்டது. பாக்கெட்டில் இருந்த இன்னொரு பர்ஸை வெளியில் எடுத்துப் பிரித்தான். தேன்மொழியினுடையது. மூன்று நாட்களுக்கு முன் காலையில் தேன்மொழி இந்தப் பர்ஸைக் காணோம் என்று வைசாக் ரயில் நிலையத்தில் சொன்ன சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அந்த நிமிடம்கூட அவனுக்குத் தான் கடந்த ஒரு வருடமாகத் தேடியபெண் இவள்தான் என்ற ஞாபகம் வரவில்லை. காலையில் நன்றாகப் பாடிய பெண் என்ற ஈர்ப்பில்தான் அவளுக்காகப் பர்ஸைத் தேடி பஜனை கோஷ்டியிடம் கேட்க ஓடி

தேன்மொழிக்குக் கண்களில் ஆயிரம் நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கின!



னான். அங்கு ஒரு தம்பதி தங்களின் காலில் தட்டுப்பட்டதாகவும், அவசரத்தில் எடுத்து வந்துவிட்டதாகவும் வாய்க் குழறி படபடத்துடன் இந்தப் பர்ஸை அப்போதே கொடுத்துவிட்டனர். கேஷுவலாகப் பர்ஸை திறந்தபோதுதான் சூர்யாவுக்கு அதிலிருந்த தேன்மொழியின் புகைப்படம் அதிர்ச்சியளித்தது. நேரில்பார்த்தபோதுகூட தெரியவில்லையே...இவளோடா நாம் சேர்ந்து பாடலைப் பாடினோம் ஒரு பக்கம் சூர்யாவுக்கு ஆச்சரியம்... இன்னொருபக்கம் அதிர்ச்சி.

இவனுக்கும் தேன்மொழிக்கும் இதற்கு முன் எந்தப் பரிச்சயமும் கிடையாது. ஆனாலும் இந்தப் புகைப்படம் அவன் வாழ்க்கையோடு இரண்டற கலந்துவிட்டிருந்தது. கடந்த ஆறுமாதங்களாக அவனை மிகவும் அலைக்கழித்த விஷயத்துக்கு மூலகாரணமான தேன்மொழி, தன் கல்லூரிக் காலத்தில் எடுத்த புகைப்படம் இது. இப்போது அவள் தோற்றம் சற்று மாறியிருப்பதால்தான் சட்டென அடையாளம் தெரியவில்லை.

அதன்பிறகுதான் சூர்யா அந்தப் பர்ஸைப் பத்திரமாகப் பாக்கெட்டில் திணித்துக்கொண்டு பயணத்தைப் பாதியில் அறுத்துக்கொண்டு இறங்கி, தேன்மொழி முன் ஆபத்பாந்தவனாக ஸ்டேஷன் மாஸ்டருடன் வந்து நின்றான். அவனுக்கு நன்கு தெரியும் அவளைக் காதலில் விழவைப்பது அத்தனை சுலபமான காரியமல்ல. அதனால், சூத்திரம் போல அளவாகப் பேசினான். நினைத்தது போலவே அனைத்தும் நடந்தது. இறுதியில் அவன் பேரைக் கேட்டபோதுதான், தன் வெற்றியடைந்த விவரம் தனக்குத் தெரியவந்தது. ஆனால், வேண்டுமென்றேதான் தன் பேரைச் சொல்லாமல் விடுத்தான்.

இந்நேரம் தன்னைப் பற்றித்தான் அவள் நிச்சயம் நினைத்துக்கொண்டிருப்பாள். பர்ஸை மீண்டும் மடக்கி பாக்கெட்டில் வைத்தவன் பசியுடன் புரண்டு படுத்தான். எப்போது சென்னைக்கு போய் வயிற்றில் நாலு இட்லியைப் போடுவோம் என்றிருந்தது.



"என்னடா! 5 மார்க் வாங்கிட்டு இப்படிச் சிரிக்கிறே! வெட்கமா இல்லை?"

"நான் ஒண்ணுமே எழுதலை. அதுக்குப் போய் 5 மார்க் போட்டிருக்கீங்களே? உங்களுக்கு வெட்கமா இல்லை?"

சி.பி. செந்தில்குமார், சென்னிமலை

இப்போது கூட ஒன்றுமில்லை. தேன்மொழியின் பர்ஸிலிருந்து செலவுக்கு ஐந்நூறு எடுத்துவிட்டு சென்னையில் சேர்ந்ததும் அப்படியே மீண்டும் வைத்து விடலாம். ஆனால், அச்செயல் தன்னை சராசரி மனிதனாக்கிவிடும். வாழ்க்கையின் தரத்தைத் தாழ்த்திவிடும். தனக்குள் ஒரு பிடிவாதத்தை வரவழைத்துக்கொண்டவன் கண்களை இறுக்கிக் கவிழ்ந்து படுத்தான்.

வினோதமான மனிதர்களைச் சுமந்தபடி அந்த ரயில் பெரும் ஹாரன் சத்தத்துடன் சென்னை நோக்கிச் சீறிப் பாய்ந்துகொண்டிருந்தது.

(மீன்கள் துள்ளும்)

"கஷ்டம் வரும்போது நிஜமாவே சிரிக்க முடியுமா?"

"முடியுமே, என் மாமியார் கீழே விழுந்து கஷ்டப்பட்டப்ப, நான் சிரிச்சேனே!"

- வெ.சீதாராமன்





"அரிச்சந்திரன் பொய்யே பேசமாட்டான்."

"ஏன் அவனுக்குப் பொண்டாட்டி இல்லையா?"

-டி.சேகர்

பொண்டாட்டி இல்லையா?



"என் மாமியார் பயங்கர சண்டைக்காரி!"

"நிஜமாவா?"

"ஆமாம். நான் ஊர்ல இல்லைன்னா பக்கத்து வீட்டு மருமகளோட சண்டைக்குப் போயிடுவார்னா பாரேன்!"

-ஜி.வி. சுபாஷ்

சச்சிதானந்த ரூபிணி - இது அடுத்து வரும் திருநாமம். சத்-சித்-ஆனந்த ரூபிணி! சத்தையும் சித்தையும் சேர்த்து வைக்கக் கூடியவள் அம்பாள்தானே? அவ்விரண்டுக்கும் இணைப்புப் பாலமாக இருப்பவள். இங்கே இருக்கிற 'சத்'தை, அங்கே இருக்கிற 'சித்'துடன் கொண்டுபோய்ச் சேர்க்கிறபோது கிடைக்கக்கூடியது சச்சிதானந்தம். அம்பாள்தான் அதைத் தருகிறாள்; அம்பாள்தான் அந்த ஆனந்தத்தின் வடிவமாகவும் (ரூபிணியாக) இருக்கிறாள். அந்த ஆனந்தத்தை அனுபவிக்கும்போதே, அதுவும் அம்பாளின் வடிவம்தான் என்று தோன்றி விடும்.

எந்தப் பொருளைச் சொன்னாலும் இந்த ஐந்து பாவங்களுக்குள் அடங்கும்படிச் சொல்லிவிட முடியும். ஆனால், இந்த ஐந்துமே அம்பாளுக்குப் பொருந்தி வராது. 'இந்த இடத்தில் இல்லை' என்றோ, 'இந்தக் காலத்தில் இல்லை' என்றோ 'நேற்றைக்கு இல்லை அல்லது நாளைக்கு இருக்க மாட்டாள்' என்றோ அம்பாளைக் குறித்துச் சொல்லிவிட முடியுமா!

ஆக, தேசம், காலம் போன்ற சின்னச் சின்ன வரம்புகளுக்கு அப்பாற்பட்டு இருப்பவள் அம்பிகை. நமக்காக, நம் சௌகரியத்துக்காக அவள் அந்த வரம்புகளுக்குள் கட்டுப்பட்டு அமர்கிறாள்.

வேதாந்த நாயகி

தேசகாலபரிச்சின்னா - தேச - கால அபரிச்சின்னா என்று இதைப் பிரிக்க வேண்டும். தேசம் - காலம் போன்ற வரம்புகளுக்குள் கட்டுப்படாதவள் அம்பிகை. தேச பாவம் என்று ஒன்று உண்டு; கால பாவம் என்று ஒன்று உண்டு. அன்னியோன்னிய பாவம் என்றும் ஒன்று உண்டு.

''இந்தப் பொருள் இந்த இடத்தில் இல்லை'' - இப்படிச் சொல்வது தேச பாவம். ''இந்தப் பொருள் அந்தக் கால கட்டத்தில் இல்லை'' என்று கூறுவது காலபாவம். ''அந்தப் பொருள் இல்லவே இல்லை'' என்று கூறுவது அன்னியோன்னிய பாவம். இவை தவிரவும் வேறு சில பாவங்கள் உண்டு:

''இந்தப் பொருள் நேற்று இங்கு இல்லை; முந்தாநாள் இல்லை'' என்று சொல்வது பிராக பாவம். ''நாளைக்கு அது இங்கே இருக்கப் போவதில்லை'' என்று சொல்வது த்வம்ஸா பாவம்.

'அம்பாள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவள் என்பது தெரியாதா? ஏன் இப்படி ஒரு நாமம் வருகிறது...?' என்றால், நான் வணங்கும்போது - உட்கார்ந்து பூஜை செய்கிறபோது - எனக்காக இறங்கிவரக் கூடியவள்; ஆனால் அவள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவள். பக்தர்களுக்கு ப்ரீதி ஏற்படுவதற்காக, அவர்கள் எப்படியெல்லாம் கூப்பிடுகிறார்களோ அப்படியெல்லாம் வரக்கூடியவள் என்று உணர்த்தவே இந்தத் திருநாமம்.

ஆகர்ஷிக்கும் அம்பிகை

ஸர்வகா - ஸர்வமாகவும் (எல்லாமாகவும்) இருக்கக்கூடியவள். எத்தனைப் பொருள்களை, எத்தனை

9

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

சுதா சேஷய்யன்


ஸ்ரீ மார்க்க சம்ரக்ஷிணி
விக்ரமசிங்கபுரம்
திருநெல்வேலி மாவட்டம்

விதமாகப் பட்டியலிட்டாலும் அவை அனைத்திலும் இருப்பவள்.

ஸர்வமோஹினி - எல்லோருக்கும் மோஹத்தைத் தரக்கூடியவள். பின்னால் இன்னொரு திருநாமம் வரும்... எல்லோருக்கும் மாயையைத் தரக்கூடியவள் என்று. இதை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். அம்பாள், எல்லோருக்கும் அவள் மீதான விருப்பத்தை அதிகப்படுத்தக் கூடியவள். பக்தி இருப்பவர்களும் சரி; 'பக்தி இல்லை' என்று சொல்வோரும் சரி... கடைசியில் அம்பாளிடத்தில் வசப்படுகிறார்கள். அந்த அளவுக்கு எல்லோரையும் தன்னிடத்தில் ஆகர்ஷித்து அருள்புரிந்து விடுவாள்.



மோகத்தைத் தரக்கூடியவள் என்கிறபோது, இந்த உலகம் நடப்பதற்காக, ஒரு மோகத்தை-மாயையை உண்டாக்கித் தரக்கூடியவள். இந்த உலகம் உண்மை; அதில் நடக்கக்கூடியவை உண்மை; சிருஷ்டி உண்மை; லயம் உண்மை; ஸ்திதி உண்மை என்று எல்லோரையும் நம்ப வைக்கக் கூடியவள் அம்பிகை பரமேசுவரி. அதனாலும் அவள் ஸர்வ மோஹினி

ஞானமும் அவளே!

ஸரஸ்வதி - கல்வியின் ரூபமாக இருப்பவள். சாரஸ்வத்தை - ஞானத்தின் சாரத்தைத் தரக்கூடியவள்.

சாஸ்திரமயீ - எல்லா சாஸ்திரங்களுக்கும் தலைவியாக, அவை எங்கே இருக்கின்றனவோ அங்கே இருக்கக்கூடியவள். சாஸ்திரங்களின் இருப்பிடமே அம்பிகைதான்.

குஹாம்பா - குஹனுடைய - குமாரக் கடவுளுடைய தாயாக இருக்கக்கூடியவள். குகைக்குள் இருக்கிறவள் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம்.

அனைத்து ரூபங்களிலும் அம்பாள்

குஹ்யரூபிணி - குஹ்யர்களின் வடிவமாகவும் அவளே இருக்கிறாள். குஹ்யர்கள் என்றால் சராசரி ஜீவன்கள். இந்த ஜீவன்களின் வடிவமாகவும் ரூபமாகவும் அவளே இருக்கிறாள். அதனால்தான் நம் சம்பிரதாயத்தில் அம்பாளுக்குச் செய்யக் கூடிய பூஜை முறைகளிலேயே, மானுடப் பெண்களை அமர வைத்து, அவர்களுக்கே பூஜை செய்கிற முறையைக் கொண்டு வந்தார்கள்.

நவராத்திரி காலமாக இருந்தாலும் சரி, மற்ற காலங்களிலும் சரி, வீடுகளில் நடக்கக்கூடிய பூஜைகளிலும் பொது இடங்களில் செய்யும் பூஜைகளிலும் பெண்களையே அமரவைத்து, அவர்களையே அம்பாளாகப் பார்த்து வணங்கி, வழிபடும் வழக்கம் இருக்கிறது. இந்த வழக்கம் எப்படி வந்தது என்றால், அவளே குஹ்யர்களின் ரூபமாக இருக்கிறாள் என்பதால் தான் வந்தது.

அம்பாளையே எல்லா ரூபங்களிலும்

சொல்கிறார்கள்

கலை உலகத்தில் புதுமைக்கு மதிப்பில்லை. பழைமைக்குத்தான் மதிப்பு. சங்கீதத் துறையில் எவ்வளவுக்கெவ்வளவு ஒரு ராகம் பழைமையானதோ, அவ்வளவுக்கு அதில் ஜீவசக்தி அதிகமாயிருக்கும். எத்தனையோ சங்கீத வித்வான்களின் கலைப் பண்பு

தரிசிக்க முடியும் என்பதால்தான் இந்த வழக்கத்தைக் கொண்டு வந்தார்கள். நடைமுறைக்கு ரொம்பவும் ஏற்ற, உகந்த விஷயம் இத்தகைய வழிபாடு.

நடைமுறை வேதாந்தம்

சுவாமி விவேகானந்தர், சநாதன தர்மத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 'practical vedanta' என்று சொல்லுவார்! வெறுமே படித்துத் தெரிந்துகொள்வதற்கானது மட்டுமல்ல நமது வேதாந்தம். நடைமுறையில் இலகுவாகக் கடைப்பிடிக்கச் சௌகரியமானது; நடைமுறை வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஏற்பட்டது.

அதில் ஏறிப் பிரகாசிக்கும்.
சாகித்தியங்களும் அப்படித்தான்.
பன்னெடுங்காலமாக
மகாவித்வான்கள் கையாண்டு
மனோதர்மத்துடன் பாடி
மெருகேறிய சாகித்தியங்களுக்கு உள்ள மதிப்பு அபாரமானது. விலை மதிப்பே இல்லாதது.

- அமரர் கல்கி

நவராத்திரி காலத்தில் சிறு குழந்தைகளைக்கூட (பெண் குழந்தைகள்) அமர வைத்து, கன்யா பூஜை என்று செய்வார்கள். வயதில் முதிர்ந்தவர்கள்கூட அக்குழந்தைகளைப் பார்த்து ''அம்பாள் வந்திருக்கிறாள்'' என்று சொல்லி பூஜை செய்வார்கள்.

வாழ்க்கையில் எந்தச் சிக்கலும் மோதலும் வராமல் இருக்க வேண்டுமானால், சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக்கொண்டால் போதும்... எந்தச் சிக்கலும் வராது. வரக்கூடியதும் விரைவில் தீர்ந்துவிடும். 'சிறு குழந்தைதானே' என்று நினைத்து பேதப்படுத்தாமல், அதனுள் அம்பாள் இருக்கிறாள் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டால், வயதினால் ஏற்படக்கூடிய பேதங்களும் சரி, அந்தஸ்தினால் ஏற்படக்கூடிய பேதங்களும் சரி, வராமலே போய் விடும். இத்தகைய பேதங்களே இல்லாத சமுதாயம் அற்புதமாகத்தானே இருக்கும்!

ஒரு சமுதாயத்தில் பரஸ்பர சார்பு நிலை என்பது பல தளங்களில் கட்டாயம் இருக்கும். எந்தச் சமுதாயத்திலும் முக்கியமான அம்சம் இதுதான் - யாரும் 'தனியே இருக்கிறேன்; எனக்கு ஒருத்தரும் வேண்டாம்' என்று இருந்துவிட முடியாது! அப்படிப் போய்த் தனியாக இருந்தால் உணவு கூட கிடைக்காது. யாரோ ஒரு விவசாயி எங்கோ உழைத்தால்தான் இங்கிருக்கிறவருக்குச் சாப்பாடு கிடைக்கும். யாரோ ஒரு நெசவாளி எங்கேயோ கஷ்டப்பட்டால்தான் இங்கே இருப்பவர்களுக்குத் துணி கிடைக்கும். ஏதோ ஒருவிதத்தில் எல்லோருமே யார் யாரையோ சார்ந்துதான் இருக்கிறோம். இதுபோன்ற சமுதாயம் எப்போது சந்தோஷமாக இருக்கும்? ஒருவருக்கொருவர் பேதம், சிக்கல், பிரச்னை வராமலிருக்கும்போது தானே? ஒருவரையொருவர் பார்க்கிற போது, அம்பாளின் ஸ்வரூபமாக, பரமாத்ம ஸ்வரூபமாகப் பார்க்கிறபோது சிக்கல்கள் இருக்க நிச்சயம் வாய்ப்பே இல்லை. கருத்து வேறுபாடுகள் இருக்கும்; ஆனால் அவை பேதங்களாக மாறாது. அப்படி மாறாமல் இருப்பதற்கான வழிமுறையைத்தான் சனாதன தர்மம் சொல்லிக் கொடுக்கிறது. அதைத்தான் practical vedanta என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த வேதாந்த ஸ்வரூபிணியாக, குஹாம்பாவாக, குஹ்யரூபிணியாக ஸ்ரீலலிதாம்பிகை இருக்கிறாள்.

(வளரும்)

குப்பத்து மக்களின் வாழ்வின் குறுக்குவெட்டுத் தோற்றம்தான்

❒ குப்பத்து மக்களின் வாழ்வின் குறுக்குவெட்டுத் தோற்றம்தான் தந்திருக்கிறார் இயக்குநர் சுப்ரமணிய
யோகி. வெக்கையும் புழுக்கமுமாகப் படத்தைத் தந்திருக்கிறார் இயக்குநர் சுப்ரமணிய
யோகி. வெக்கையும் புழுக்கமுமாகப் படத்தைத் தந்திருக்கிறார் காதலின் குறுக்கீட்
சிவா.

❒ காடு முரடான பால்யம் வாய்க்கப் பெற்ற ஹீரோ, ரௌடியாகி, காதலின் குறுக்கீட்
டால் திருந்துவதுதான் தமிழ் சினிமா இலக்கணம் (அய்யோ அய்யோ). ஆனால், இங்கே
குழந்தைப் பாசம் என்று சொல்லி நிமிர வைக்கிறார்.

❒ இயக்குநர் அமீர் தயாரித்து நடித்திருக்கும் படம் என்பதால், எதிர்பார்ப்பு எகத்துக்கும்
கூடியிருந்தது போலவே, அவருக்கு நடிப்பும், ஃபைட்டும் கைகூடி வந்திருக்கின்றன.

❒ அமீரின் நண்பர்களாக வருபவர்களில் பாடலாசிரியர் சிநேகன் பளிச்சென்று தெரிகிறார்.

❒ காதல்...காதல்...என்று போய்க் கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில் காதலைத்
தவிர்த்திருப்பது தனித்த கவனம் பெறும் முயற்சி.

❒ மதுமிதாவின் அரைகுறை தமிழை ஆராதிக்கலாம். தாய்ப் பால் தந்ததற்காகக் கொடுத்த
காசைத் திருப்பித் தருகையில் 'நடிக்கிறார்'.

❒ குட்டிக் குழந்தையும் சமர்த்து.

❒ குப்பத்தின் குறுக்கு நெடுக்கு சந்துகளில் குழந்தையைப் பையில் போட்டுக்கொண்டு
அலைவது நம்பும்படி இல்லை.

❒ யுவனின் இசையில் உக்கிரம் அதிகம்.

❒ குருதேவ் - தேவராஜ் ஒளிப்பதிவு சூப்பர் டூப்பர்.

யோகி - கல்லுக்குள் ஈரம்.

திரைவிமர்சனம்

திரைவிமர்சனம்





திரைவிமர்சனம்

● மத்தியச் சென்னையின் ஒரு குப்பத்தைத் தன் மதியூகத்தால் மாற்ற முனையும் ஓர் இளைஞன், சினிமா எடுக்கத் துணிகிறான். குப்பத்தை அபகரிக்க நினைக்கும் வில்லன் அதனைத் தடுக்கிறான். பிறகு என்னவாகுமோ... அதுதான் கதை.

● ஹீரோவாக புதுமுகம் 'ஜெய்வந்த்'. இவருக்கும் நடிப்புக்கும் வெகுதூரம். இவர் ஒரு பக்கம் நடித்தால், நடிப்பு ஒரு பக்கம் இழுக்கிறது. இரண்டையும் ஒரு புள்ளியில் கொண்டுவர இயக்குநர் நினைக்கையில் படமே முடிந்து போகிறது.

● ஹீரோயினும் (ரம்யா பர்ணா) புதுமுகம்தான். ஹீரோவுக்கு உதவவும், டான்ஸுக்காகவும் அப்பப்ப வந்து போகிறார்.

● நடிப்புக்கு ஸ்கோப் இல்லாத பாத்திரத்தில் பிரகாஷ்ராஜ். திமிங்கலத்துக்குக் கடலைப்பொறி போட்டதுபோல இருக்கிறது!

● கஞ்சா கருப்பு சிரிப்பால் நம்மைப் பஞ்சராக்குகிறார்.

● ஹீரோ மேல், ஹீரோயினுக்குக் காதல் வந்தே தீர வேண்டும் என்று வரவைத்திருக்கிறார்கள்.

● திரைக்கதை ஓட்டையில் உலக உருண்டையே தெரிகிறது!

● இளையராஜா இசையில் ராஜநடை இல்லை!

\- மகிமைராஜன்

நன்'மை'க்கா...? தீ'மை'க்கா...?

கச்சேரிகளுக்குச் செல்லும் ரசிகர்களுக்குப் பலவித நோக்கங்கள் உண்டு. இசை ரசனையில் திளைக்க, ஆத்மானுபவம் பெற, தனக்குப் பிடித்த கலைஞரின் மேதைமையில் மூழ்க... இப்படி... ஆனால், பாடகர் அற்புதமாகப் பாடிக்கொண்டிருக்கும்போது கடபுடாவென்றோ 'ஞொய்' யென்றோ ஒரு ஒலி ஸ்பீக்கரில் கூடவே எழுந்தால்? அது நரக வேதனை!

இது குறித்து பிரபல கர்நாடக இசைப்பாடகி காயத்ரி கிரீஷ் பேசுகையில், ''ஒரு கர்நாடக இசை நிகழ்ச்சியை மேலும் மிளிர வைப்பதிலும் சரி, குட்டிச் சுவராக்குவதிலும் சரி, ஒலி அமைப்புக்கு முக்கிய பங்கு உண்டு. அதேசமயம் இசை நிகழ்ச்சிகளுக்குத் தோதாகக் கட்டப்படாத அரங்குகளில்கூட சிறந்த ஒலி அமைப்புக் கருவிகள் மூலமாக வெகு நிறைவான நிகழ்ச்சிகளை நடத்த முடிந்திருக்கிறது.

பாடகர்கள் தங்கள் குரலுக்கான ஸ்பீக்கர் வால்யூம் கொஞ்சம் அதிகமாக இருக்க வேண்டும் என்றும், ரசிகர்கள் அது கொஞ்சம் குறைவாக இருக்கவேண்டும் என்றும் எண்ணுவது சகஜமாகவே இருக்கிறது'' என்கிறார்.

சில நிகழ்ச்சிகளில் பாடகர்களின் ஒலி அமைப்புக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் பக்கவாத்தியக் கலைஞர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. என்ற குற்றச்சாட்டும் உண்டு.

இது குறித்து பிரபல கடம் வித்வான் கார்த்திக்கின் கருத்து இது...

''ஒரு குரல் அல்



ஒலியும்* வலியும்*

டிசம்பர் சீசனில் திரும்பிய பக்கமெல்லாம் கச்சேரி; நல்ல மைக்குகள் கிடைப்பதே அரிதாகிவிடுகிறது! அப்படியே கிடைத்தாலும் கலைஞர், ரசிகர், தொழில்நுட்ப வல்லுனர் என்ற மூன்று தரப்பினரும் திருப்தி அடையக்கூடிய ஒலியமைப்புப் புள்ளியை எளிதில் தொட்டுவிட முடியாது! அதிர்ஷ்டமும் முயற்சியும் கைகூட ஒலியமைப்பு சரியாக அமைகிற தினத்தில், அரங்குக்குப் பக்கத்தில் உள்ள கோயிலில் அதிர்வேட்டுடன் சுவாமி புறப்பாடு நடக்கும்; அல்லது அருகே கல்யாண ரிசப்ஷனில் லைட் மியூசிக் அதிரும்! கலைஞர்கள், இவற்றுக்கிடையே தங்களையும் தங்கள் இசையையும் பொருத்திக் கொள்ள பழகிக்க வேண்டியிருக்கு.

இவற்றுக்கு மத்தியிலும் அருமையான கச்சேரிகள் அமையத்தான் செய்கின்றன.

அந்தக் காலத்து மைக் இல்லாத கச்சேரிகள் பற்றி தாத்தா - பாட்டிகள் ஏன் இவ்வளவு சிலாகிக்கிறார்கள் என்பது புரியாமல் இல்லை. ஆனால், ஒலிபெருக்கி என்கிற தொழில்



லது இசைக் கருவியின் இயல்பான ஒலியைக் (டிம்பர்) கெடுக்காமல் அதைப் பெரிதுபடுத்தி, கேட்பவர்களின் காது களில் சுகமாகச் சேர்ப்பது தான் சிறந்த ஒலி அமைப்பு.

வெளிநாடுகளில் ஒவ்வோர் இசை நிகழ்ச்சிக்கு முன்பாகவும் ஒலியை மிகவும் கவனமும் நேரமும் எடுத்துக்கொண்டு சரி பார்ப்பார்கள். ஆனால், சங்கீத சீஸனில் இங்கு நடைபெறும் கச்சேரிகளில் இது சாத்தியம் இல்லை.

ஒலிக் கருவிகள் மட்டுமல்ல, அதைக் கையாள்பவரையும் பொறுத்துதான் கச்சேரி முழுமை அடைகிறது.

இசை நிகழ்ச்சிகளுக்கு ஒலி அமைப்பு செய்பவரும் அந்தக் கலையைக் கற்றுத் தேர்ந்த ஒரு சவுண்டு என்ஜினியராக இருப்பதுதானே நியாயம்? சும்மா இணைப்பு



நுட்பம் முன்னைக் காட்டிலும் பெரிய ரசிகர் கூட்டங்களுக்கு இசையை வழங்கவும் துல்லியமாக இசைப் பதிவு செய்யவும் வழி செய்கிறது.

இதையெல்லாம்விட முக்கியமாக - ஒலி பெருக்கி இடையூறுகளையும் தாண்டி, கலைஞரும் ரசிகரும் ஒரு நிகழ்ச்சி மூலம் பரஸ்பரம் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறபோது, அங்கே சங்கீதத்தின் சக்தி, நிலைநாட்டப் படுகிறது. இது எவ்வளவு அழகான விஷயம்!

- பாரதி ராமசுப்பன்

கொடுத்துவிட்டு ஆன் - ஆஃப் செய்யத் தெரிந்த ஒருவர் இதற்குப் போதாது. தவிலும் கடமும் ஒரே நிகழ்ச்சியில் இடம் பெறும்போது அவற்றின் ஒலிகளை பேலன்ஸ் செய்யும் திறமை ஒலி அமைப்பாளருக்கு இருக்க வேண்டும். இல்லையென்றால் தவிலுக்கு முன்பு கடம் காணாமல் போய்விடும்.''

ஒலி அமைப்பில் சபாக்களின் கடமை என்ன? 'ஹம்ஸத்வனி'யின் செயலாளர் ஆர்.சுந்தரிடம் கேட்டோம்.

''சமீபத்தில் கட்டப்பட்டுள்ள பெரும்பாலான அரங்குகளில் அகூஸ்டிக்ஸ் எனப்படும் ஒலியைத் துல்லியமாகக் கேட்க வைக்கும் பொறியியல் திறன் சிறப்பாகவே உள்ளது. ஆனால், பழங்கால அரங்குகள் இதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதனால்தான் அங்கு இசை சரியான பேலன்ஸில் கேட்பதில்லை.

ஆலயங்களில் நம்மால் துல்லியமாக நாதஸ்வர இசையைக் கேட்டு மகிழ முடிகிறது. ஆனால் எல்லா இசைக் கருவிகளின் ஒலியுமே துல்லியமாக ரசிகர்கள் காதுகளை அடைவதில்லை. எனவே இது தொடர்பான விவாதம் அவசியமான ஒன்றுதான். எங்கள் சபா நிகழ்ச்சிகள் திறந்த வெளியில் நடப்பதால் ஒலியமைப்பில் ரொம்ப கவனம் தேவை. இப்போது ஓரளவு கவனித்துச் செய்கிறோம். என்றாலும் மேலும் கவனம் தேவை'' என்கிறார்.



* கடம் கார்த்திக்

* காயத்ரி கிரிஷ்

* எம்.கே.ரமேஷ்

ஒலி அமைப்பை ஏற்பாடு செய்பவர்களின் தரப்பிலிருந்து கண்ணா சவுண்ட் சிஸ்டம் எம்.கே.ரமேஷ், ''கச்சேரி தொடங்கி சுமார் பதினைந்து நிமிடங்கள் கழித்துதான் ஒலிஅமைப்பு எப்படி இருக்கிறது, மாற்றங்கள் தேவையா, அவை என்ன என்பது பற்றியெல்லாம் சரியான ஐடியா கிடைக்கும். எந்த மூடில் பாடுகிறார், எப்படிப் பாடினால் எடுப்பாகக் கேட்கிறது, பக்கவாத்தியங்கள் தெளிவாக ரசிகர்களை அடைகிறதா என்பதெல்லாம் அப்போதுதான் சிறப்பாகப் புலப்படும். இது அனுபவ உண்மை. ஒரு கச்சேரிக்கு ஏழு மைக்குகள் வைப்போம். பாடகர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி, வயலினுக்கு ஒன்று, மிருதங்கத்துக்கு இரண்டு, கடம் அல்லது கஞ்சிராவுக்கு ஒன்று. நிறைய எக்கோ உள்ள அரங்கம் என்றால் தம்புராவுக்குக்கூட மைக் வைப்போம். இல்லையென்றால் 'ஸ்ருதி சரியாகக் கேட்கவில்லை' என்பார்கள்.

சில சபாக்களில் 'சீலிங்'கில் ஸ்பீக்கர்கள் இருக்கும். என்னதான் ஒலி அமைப்பை அட்ஜஸ்ட் செய்தாலும் ரிசல்ட் சுமாராகத்தான் இருக்கும். நாங்களாகவே ஸ்பீக்கர்களை வைக்கும்போது அரங்கின் முன்பக்கம் அரை ஸ்பீக்கர், பின்பக்கம் அரை ஸ்பீக்கர் என்று பிரித்து, எல்லா ரசிகர்களுக்கும் இசை தன்மையாக அழகாகச் சென்றடைய வழி செய்வோம்'' என்கிறார்.

- ஜி.எஸ்.எஸ்.



ஸ்ரீ சுவாமி நாத சுவாமி சஹாயம்

ௐ

இந்தியாவின் சிறப்புமிக்க முன்னணி ஸ்தாபனம்

SGS

Sri Gomathi Sankar Catering Service

ஸ்ரீ கோமதி சங்கர் கேட்டரிங் சர்வீஸ்

Master Cook Catering Contractors



சமையல் சக்கரவர்த்தி

மாம்பலம் **G. சங்கர் ஐயர்**

பாரதம் முழுவதும்

15/6, Nayakkamar Street, Near Postal Colony, West Mambalam, Chennai - 600 033.


Ph: 2371 2318 Cell: 98411 13559, 93810 53924, 2483 2334 (R)



உ

ஸ்ரீ ஐயனார் துணை

ஸ்ரீமதி ஸரோஜா வைத்யநாத ஐயர்



"பரம்பரை ஜோதிடர்"

(50 வருட பாரம்பரியம்)

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, ஸாமுத்ரிகா லக்ஷணம், வாஸ்து,

(ஐயனார் உபாஸகர், ஸங்கீத உபன்யாஸகர், ஹரிகதா,

ரங்கோலிக் கலைஞர், தொலைக்காட்சி புகழ் ஜோதிடர், எழுத்தாளர்)

38/28, உமாபதித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33

(அயோத்யா மண்டபம் அருகில், ஷோபனா கல்யாண மண்டபம் எதிர் தெரு)

போன் : 044-2483 0687, 2372 3256, 94446 84006

"தவில் அடிக்கறாரு"ன்னு போகற போக்குல சொல்லிடறாங்க...





சும்மா வாத்தியத்தை அடிச்சா நாதம் வராது...





ஒவ்வொரு விரலுக்கும் ஒரு வேலை இருக்கு.






ஒவ்வொரு கணத்துக்கும் கணக்கு இருக்கு...

மனசுல முதல்ல கற்பனை எழணும்

அது விரல் வழியே வாத்தியத்துக்கும் பாயறதும்



கோல் பிடிக்கிற கையாலே கோலமும் போடறதும்.



நாதஸ்வர பொழிவுக்கு நகாசும் சேர்க்கறதும்



லயச் சக்கரவர்த்தி

"திருவையாற்றில்... ஸ்ரீ தியாகப்பிரம்ம உற்சவத்தில், ஒரு தடவை தனி ஆவர்த்தனம் வாசித்துக் கொண்டிருந்தேன். சிக்கலான பல சொற்கட்டுகளை வாசித்துச் சபையை மகிழ்வித்துக்கொண்டிருந்தேன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த வீணை பாலசந்தர் அவர்கள், கச்சேரி முடிவில், வியர்வையில் குளித்திருந்த என்னை அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டு, 'நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தவில் வாசித்தபோது பல ஆண்டுகளுக்கு முன் என்னையறியாது தாளம் போட்ட என் கை, இப்போது நீங்கள் வாசிக்கும்போது தான் இரண்டாம் முறையாக என்னையறியாது தாளம் போட்டது' என்று மேடையிலே பாராட்டினார்."

பேட்டி:
சாருகேசி
கல்கி (7.10.84)

கோப்புப் படங்கள் :
யோகா



இப்போ புரிஞ்சுதா? இது அடி இல்லே... ஆத்மாவின் கொண்டாட்டம்!



சங்கீத கலாநிதி 2009



ஸ்கைப், சர்டிஃபிகேட்,

எலக்ட்ரானிக் மாயாஜாலம் இசைத்துறையையும் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது! சென்னை வேளச்சேரி அல்லது பெசன்ட் நகரில் இருந்துகொண்டு ஒரு வித்வான், சிகாகோ அல்லது ஃபிலடல்ஃபியாவிலுள்ள ராம கிருஷ்ணனுக்கோ சௌம்யா ஸ்ரீக்கோ வகுப்பெடுக்க முடிகிறது. வெப்.காம் என்கிற ஒளி-ஒலி அமைப்பு மூலம் வகுப்புகள் நிகழ்ந் தால் முகம் பார்த்துப் பாடவும்

* காயத்ரி வேங்கடராகவன்



திருத்தவும் முடிகிறது! ஸ்கைப் என்ற சகாயமான இன்டர்நெட் இணைப்பு மூலம் போனிலேயே வகுப்புகள் சாத்தியம்!

பயிற்சி முறையில் நிகழ்ந்துள்ள இந்தப் புரட்சி நல்லதுக்குத்தானா...? நேரில் கற்பது போல் வருமா...?


''இந்த முறையில் சௌகரியம் இருக்கு. கடல் கடந்து வாழ்வோருக்கு அனுகூலம். ஆனால் குருவிடம் நேரில் கற்கிறபோதுதான் ஆழம் உணர்ந்து பாட முடியும்'' என்கிறார் இளம் பாடக ரான ரித்விக் ராஜா. ''இன்டர்நெட் மூலம் பல மூத்த வித்வான்களின் இசையைக் கேட்க முடி கிறது. டவுன்லோட் செய்து வைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் ரசிப்பது சாத்தியமாகிறது. ஒரு பாடலின் வார்த்தைகள் சரியாகத் தெரியவேண்டு மானால், சரியான வெப் ஸைட்டில் கிளிக் செய்து உடனே தெரிந்து கொள்ளலாம். நம் முன் னோர்களுக்கு இல்லாத பல வசதிகள் நமக்கு அனுபவிக்கக் கிடைத்துள்ளன'' என்கிறார் டி.எம். கிருஷ்ணாவின் சிஷ்யரான ரித்விக்.

''கேட்கிறதுக்கும் கற்றுக் கொள்கிறதுக்கும் இருக்கற வித்தியாசத்தைப் புரிந்து கொண்டால்,

குரு நேரே இல்லாமல் கற்றுக் கொள்ளவே முடியாது என்பதும் புரியும்'' - என்று நாதஸ்வர வித்வான் இஞ்சிக்குடி சுப்பிரமணியன் தீர்மானமாகச் சொல்கிறார். தமது மாணவர்களை 'டேப்' செய்து பாடம் பண்ணக்கூட இவர் அனுமதிப்பதில்லை!

''எந்த சிஷ்யனுக்கு என்ன வரும், எப்படி வரும் என்று பார்த்துப் பார்த்துத்தான் எங்களுக்கெல்லாம் கற்றுக் கொடுத்தார்கள். 'சிஷ்யப் புள்ளை' என்றுதான் எங்களைச் சொல்வார்கள் (ஸ்டூடன்ட் அல்ல!). தங்கள் குழந்தையாக கண்ணும் கருத்துமாய் கவனித்து நம்மை நடத்துவார்கள். சின்ன விஷயம்தான்... விசிறியைக் கொடுத்து நம்மை விசிறச் சொல்லுவார்கள். நாம் தாறுமாறாக விசிறினால் 'ஞானம் கெடாதபடி விசுறுடா!' என்பார்கள். தக் - க தக் - க என்று விசுறுகிற போதுகூட லயம் இருக்கணும்! அவங்களுக்குக் காத்து கிடைச்சது; நமக்கு லயம் கிடைச்சது!'' என்கிறார் இஞ்சிக்குடி.


சங்கீதம்!



● இஞ்சிக்குடி சுப்பிரமணியன்

''ஓரளவு அனுபவம் வந்த பிறகு வேண்டுமானால் இன்டர்நெட் பதிவிலிருந்தோ டேப்பிலிருந்தோ நாமே கற்றுக் கொள்ளலாம். அது வரை நேரில் பாடம் பண்ணி விட்டு, அதை மெருகேற்ற ரெக்கார்டிங் உதவியை நாடலாம்...'' என்கிறார் ரித்விக் ராஜா.

''குருவிடம் நேரில் பாடம் பண்ணுவது என்பதன் பரிமாணமே வேறு. ஒலிப்பதிவுகளிலிருந்து கற்றுக் கொள்கிறபோது சின்ன நுணுக்கங்கள் (அனுஸ்வரங்கள்) மிஸ் ஆகிவிடுகின்றன... நேரில் கற்றுக் கொள்கிறபோது இதையெல்லாம் குருவின் தலை அசைவிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்; கை அசைவு, முகத்தை எந்த அளவுக்கு நிமிர்த்திப் பாடுகிறார்... இதையெல்லாம் கூட சிஷ்யர்கள் ஒற்றியெடுத்துக் கொண்டுதான் வளர்வார்கள்... எலக்ட்ரானிக் சாதனங்களால் இது சாத்தியமாவதில்லையே!'' என்கிறார் காயத்ரி வேங்கடராகவன்.



ஒரு பாடலை பகுதி

பகுதியாகப் பிரித்து டேப் செய்து பாடம் பண்ண வைப்பதிலும் இவருக்கு உடன்பாடு இல்லை. ''இரண்டு மணி நேரம் அதிலேயே ஊறி, அதே நினைவாக இருந்து கற்றுக் கொள்கிறபோதுதான் முழுமை கிடைக்கிறது... இசை யோட பாவம் புரிகிறது, அதை உள்வாங்கிக்க முடிகிறது... அது தானே கர்நாடக சங்கீதத்தில் ரொம்ப முக்கி யம்'' என்றும் சொல்கிறார்.


* ரித்விக் ராஜா

இன்டர்நெட்டில் வேறொரு வசதி இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் ரித்விக் ராஜா. ''இசை ரசிகர்களின் இணைய குழுக் களில் நிறைய கருத்து பரிமாற்றம், அலசல், பகிர்தல் நடைபெறுகின்றன. இவற்றி லிருந்தும் நிறைய தெரிந்துகொள்ள முடி கிறது. வீட்டுக்குள்ளிருந்தபடியே புதுப் புதுப் பரிமாணங்கள் அறிமுகமாகின்றன... ஆனால் ஒன்று, தவறான சில தகவல்கள், அறியாமையால் பதிவு செய்யப்படும் அபிப்ராயங்கள் அல்லது அரை வேக்காட்டு ஞானத்தின் வெளிப்பாடு போன்றவற்றில் நாம் சிக்கிக்கொண்டால் ஆபத்து!'' - யதார்த்தத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.



வசதி கருதியும் அயல் நாட்டில் வசிப்போரின் ஆர் வத்தை மதித்தும் இன்டர் நெட் வகுப்புகள் நடத்துவ தாகக் கூறும் காயத்ரி வேங் கடராகவன், அம்முறை யில் கற்கும் மாணவர்கள், வாய்ப்பு கிடைக்கிற போது நேர்முக வகுப்பு களுக்கு வருவதன் முக்கியத்து வத்தை உணர்த்துகிறார். ''அயல்நாடு மட்டு மல்ல, பெங்களூரிலேயேகூட நகரின் இரு முனைகளில் உள்ள குருவும் சிஷ்யரும், டெலிபோன் இணைப்பு மூலம்தான் பல சமயம் 'வகுப்புகளில்' சந்திக்கிறார்கள். இந்த முறையில் கூடுதல் கவனம் தேவை... தவறுகள் உடனே திருத்தப்படா விட்டால், அவை அப்படியே நின்று போகும்!'' என்கிறார்.

இஞ்சிக்குடி சுப்பிரமணியன், ''எலக்ட்ரானிக்கெல்லாம் இருக்கட்டும்! இசைப் பள்ளி என்று ஒன்று நடத்தி வகுப்புக்கு மணி அடிச்சு ஆரம்பிச்சும் முடிச்சும் வைக்கிறதையே ஏற்க முடிய வில்லை'' என்கிறார். ''குருவிடம் நான் கற்றுக்கொண்ட காலத்தில், சாப்பாட்டு நேரமெல்லாம் தாண்டிப் போகும்... அதி லேயே லயித்திருப்போம். இப்போ அரசு இசைப் பள்ளியில் 220 நாள்தான் வகுப்பு. மீதி நாட்கள் விடுமுறை! சராசரியா ஒரு மணி நேரம்தான் மாணவனுக்கு நேர்முக வகுப்பு - இந்த முறையில் சர்டிஃபிகேட் வரலாம்; சங்கீதம் வராது!'' என்று வருத் தப்படுகிறார்.

சர்டிஃபிகேட்டுக்கும் ஸ்கைப்புக்கும் இடையே எப்படியோ இடம்பிடித்து சங் கீதம் புதிய தலைமுறைகளின் ஆர்வத் துக்கு ஈடுகொடுத்துப் பயணத்தைத் தொடர் கிறது. அதன் கனமும் ஆழமும் அவ்வளவு இலேசில் அசைக்கக் கூடியவையா!

- சாருகேசி, சாயா

நூற்றாண்டு விழா

கிறிஸ்துவ ஹரிகதை!

ஹரிகதைக் கலைஞர், 'சங்கீத கலாநிதி' எம்பார் விஜய ராகவாச்சாரியாரின் நூற்றாண்டு விழாவை, சிரேயஸ் அமைப்பும் நாரத கான சபாவும் இணைந்து ஐந்து நாட்களுக்குக் கொண் டாடின. எம்பாரின் சிஷ்யரான கல்யாணபுரம் ஆராவமுதாச்சார்யார் தொடங்கியுள்ள அமைப்பு சிரேயஸ். அதன் ஒரு பகுதியாக ஒரு முற்பகல் கருத்தரங்கம் நடைபெற்றது:

ஆறு வருடங்கள் தமது பி.எச்டி பட்டத்துக்காக ஹரிகதை குறித்து ஆய்வு மேற்கொண்ட டாக்டர் பிரமிளா குருமூர்த்தி அறிமுக உரையில், ''மகாராஷ்ட்ராவில் இரவு ஒரு மணிக்குக்கூட ஹரிகீர்த்தன் கேட்க 5000 பேராவது கூடியிருப்பார்கள்'' என்றார்.

'தமிழ்நாட்டு ஹரிகதை விற்பன்னர்கள்' என்ற தலைப்பு, வி.ஸ்ரீராமுக்கு. சரபோஜி மன்னர் காலத்தில்தான் இந்தக் கலை ஒரு வடிவம் பெற் றது என்று தொடங்கி, இந்தத் துறையில் கொடி கட்டிப் பறந்தவர்களைக் குறிப்பிட்டார். வேத நாயகம் சாஸ்திரியார், ஹரிகதை மக்களைப் பெரு மளவு ஈர்ப்பதைப் பார்த்து, கிறிஸ்துவக் கதை களை அதே பாணியில் செய்யத் தொடங்கினாராம். ''அவருடைய ஏழாவது தலைமுறை, இன்றும் அதைத் தொடர்கிறது'' என்றார் ஸ்ரீராம்.



* கருத்தரங்க மேடையில்...

பெரிய புராணக் கதைகள் சொன்ன தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதருக்கு செட்டிநாட்டில் பெரும் புகழ். தியாகராஜ ஆரா தனைக்காக இவர் கொட்டும் மழையிலும் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டியதில், ஜுரம் கண்டு இறந்து போனார் என்றார்.

''சுலோகங்களை ஜோன்புரி, பெஹாக் போன்ற ராகங்களில் மின்னல் வேகத்தில் மாறி மாறிப் பாடி ரசிகர்களுக்கு எட்டச் செய்வார்கள் ஹரிகதைக் கலைஞர்கள். பாட்டோடு உரையை யும் இணைத்துச் சொல்லும்போது உரைநடைகூட பாட்டின் தொடர்ச் சியாகத் தோன்றும்படி செய்துவிடு வார்கள்'' என்று எடுத்துக் காட்டி னார் வித்வான் ஆர்.வேதவல்லி.

நந்தினி ரமணி, பிரேமா நந்த குமார் போன்ற அறிஞர்களும் அரிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள, பாலமீரா சந்திரா என்ற ஹரிகதை விற்பன்னர் ஹரிகதை யில் ஆன்மிகம் குறித்துப் பேசி னார். எம்பார் சில பாடல்களை அபி நயத்துடன் பாடியதை நினைவு கூர்ந்து வியந்தார்! - சாருகேசி



* எம்பார் விஜயராகவாச்சாரியார்

கார்ப்பரேட் ஆகும் கர்நாடக சங்கீதம்?

★ இசை விழா 'இனாகுரேஷன்' நட்சத்திர ஹோட்டலில் நடக்கிறது.

★ இசைக் கலைஞர்கள் கூடி நிறுவனம் ஆரம்பித்து, தங்கள் கலைத்திறனை மார்க்கெட்டிங் செய்கிறார்கள்.

★ புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் டிசம்பர் சீஸனின் கச்சேரி 'கேட்லாக்'ஆக மாறி, வாழ்த்து அனுப்புபவரின் சாதனையையும் சேர்த்துப் பேசுகின்றன...!

★ வலைத்தளம், ப்ளாக் முதலானவற்றை உருவாக்கிக் கொண்டு, தனிப்பட்ட கலைஞர்கள்கூட வர்த்தக நிறுவன யுக்திகளைக் கையாள்கின்றார்கள்! உலகெங்கும் உள்ள ரசிகர்களும், விமர்சகர்களும், முக்கியமாக நிகழ்ச்சி அமைப்பாளர்களும் கவனித்துத் தங்களை அணுகும் வகையில் வலைத்தள செய்திகளை வெளியிடுகிறார்கள்.

இதெல்லாம் சரியா, தவறா என்று இன்றைய சூழலில் நியாயம் சொல்வதற்கில்லை. கலைஞர்களை வெளிநாட்டுக்கு அறிமுகம் செய்யவும், கச்சேரிகள் ஏற்பாடு செய்யவும் அந்தந்த நாடுகளில் சில செல்வாக்குள்ள பிரமுகர்கள் உள்ளனர். அந்தச் செல்வாக்குள்ள பிரமுகர்களை அறிமுகம் செய்ய இங்கு சில செல்வாக்குள்ள சிறிய பிரமுகர்கள் உள்ளனர்!

ஆகவே, கர்நாடக இசையும் இன்று ஒரு கார்ப்பரேட் நிறுவனம் போல் ஆகிவிட்டது. இதற்கும் சில வணிகச் சின்னங்கள், மக்கள் தொடர்பு அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். வலைப்பூக்கள், வலைத்தளங்கள் மூலம் கலைஞர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்வதுடன், பல ரசிகர்களின் வாயிலாக 'ஆகா ஓகோ' என்று பாராட்டுக் குவியல் களையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

இசைத் துறையை ஒரு புயல் போல் புரட்டிப் போட்டுக்கொண்டிருக்கும் இந்தப் போக்கில் தங்களை உட்படுத்திக் கொள்ளாமல், 'பழைய வழி'யில் நிலைக்க விரும்புவோரும் உண்டு. பழைய பாரம்பரியத்தில் நின்று ஜெயித்த பின்னரும், இந்தப் புதிய புயலின் 'கண்'ணுக்குள் பிரவேசித்து நீடிக்கத் துடிக்கும் சீனியர்களும் உண்டு!



தேவவிரதன்



செல்வாக்கு குக்கரில் ஒரு ஸேஃப்டி வால்வ்!

சென்ற தலைமுறையைச் சேர்ந்த ஒரு சிறந்த சங்கீத வித்வான், 'உங்கள் திறமைக்கும், அனுபவத்துக்கும் உங்களுக்குக் கிடைத்த பிராபல்யமும், புகழும் குறைவு என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?' என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள் பத்திரிகையாளர்கள். அதற்கு அவர், 'எனக்கு அதற்குண்டான திறமை போதாதென்று நினைக்கிறேன்' என்றாராம் சிரித்துக் கொண்டே. ஆனால், இன்றும் அவருக்குண்டான தனி மதிப்பு சங்கீத உலகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.



ஆனால், ஒன்று மட்டும் உண்மை. முந்தைய தலைமுறை இசைக் கலைஞர்களிடம் இருந்த பொறுமை இன்றைய தலைமுறையிடம் இல்லை. தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பட்டங்கள், பாராட்டுக்கள், வாய்ப்புக்கள் எல்லாமே சீக்கிரத்தில் நடந்து விடவேண்டும் என்பது அவர்களின் ஆசையாக இருக்கிறது. இது ஐ.டி. யுகம் இல்லையா!?

ஆனால், கலை என்பது வேறு. அதிலும் குறிப்பாக இசை, தீட்டத்தீட்ட ஒளி வீசும் வைரம் போல். பாடப் பாடத்தான் குரலும் ஞானமும் மேன்மை பெறுகின்றன. இன்றைய இளம் சங்கீத வித்வான்களிடம் திறமை இருக்கிறது. ஏதோ ஒரு கட்டத்தில் மேற்கொண்டு இனிமேல் போகவோ, விருத்தி செய்து கொள்ளவோ ஒன்றுமில்லை என்று அவர்கள் கருதும் நிலை வந்துவிடக் கூடாது அல்லவா?

ஒரு கலைஞருக்குக் கிடைக்கும் ஏராளமான விளம்பரங்களே ஒரு கட்டத்தில் முன்னேற்றத்துக்கு எதிரியாகும் சாத்தியங்கள் உண்டு. 'வாய்ப்புகளுக்காகப் பலவாறாக நமது சுயகௌரவத்தை விட்டு சபாக்காரர்களையும், இதர பி.ஆர்.ஓ.க்களையும் அணுக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சில இடங்களில் பாடுவதற்கோ, ஆடு



வதற்கோ நாமே ஸ்பான்சர்களைத் தேடிப் பிடித்து வரவேண்டியிருக்கிறது. அல்லது நாமே பணம் கொடுத்து கச்சேரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கப் படுகிறோம்' என்கின்றனர் சில வளர்ந்து வரும் இசைக் கலைஞர்கள்!

ஒரு சபாவுக்கு ஸ்பான்ஸர்ஷிப் அளிக்கும் பிரமுகர் அல்லது நிறுவனம், யார் யாருக்கு வாய்ப்புகள் தரப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தையும் பெற முடிகிறது. ஆக, யாரிடம் சென்றால் வாய்ப்பு பெறலாம் என்பது வெட்ட வெளிச்சமாக, 'லாபியிங்' நடக்க ஆரம்பிக்கிறது. கலையின் ஆழத்தைக் காட்டிலும் செல்வாக்கின் பலம் கையோங்குகிறது.

இது அபாயகரமான போக்குதான். ஆனால் இந்த பிரஷர் குக்கரின் 'ஸேஃப்டி வால்வ்' இசையிடமே இருக்கிறது! என்னதான் விளம்பரம் செய்தாலும், ஸ்பான்ஸர்கள் வந்தாலும், செல்வாக்கு கோலோச்சினாலும், வந்த ரசிகர்களைத் திருப்தியுடன் அனுப்பவேண்டிய பொறுப்பு மேடையில் அமரும் கலைஞரிடம்தானே உள்ளது. அதைச் செய்யாத வரையில் வாய்ப்புகளைத் தக்க வைத்துக் கொள்வது கடினம். விளம்பரத்தினால் கவனம் ஈர்க்கப்படும். ஆனால், அதையே நம்பி ஒரு கலைஞனால் வெகு காலம் தாக்குப்பிடிக்க முடியாது. இந்த உண்மை எந்த யுகத்துக்கும் பொருந்தும். ●

''நம் மன்னருக்குப் பெருத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதாம்.''

''என்ன சந்தேகம்?''

''அவருடைய உடம்பு இந்த அளவுக்குப் பெருத்தது எப்படி என்றுதான்.''

- வீட்டுக்கட்டி மு.பெரியசாமி




கல்கி அடுத்த இதழ்

எழுத்தாளர் **ஆர். வெங்கடேஷ்** வழங்கும்

இண்டர்நெட் ஸ்பெஷல்!

A to Z தகவல்கள்



இதயம் தொட்ட இசை!

கர்நாடக இசையா? கிராமிய இசையா? திரை இசையா? தெருவில் யதார்த்தமாய்க் கேட்ட இசையா? எதுவாயிருந்தா என்ன...?

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஏதோ ஒரு காரணத்துக்காக உங்கள் காதுகளை வந்தடைந்த இசை, உங்கள் இதயத்தைத் தொட்டு இருந்தால்... இருக்குமில்ல!? அப்ப ரத்தினச் சுருக்கமா அஞ்சலட்டையில் ஏன், எதற்கு, எப்போ, எந்த இசை உங்க இதயத்தைத் தொட்டதுன்னு எழுதி அனுப்புங்க... கூப்பனை ஒட்டி. மிகச் சிறந்த பத்து அனுபவங்களுக்கு ஒய்.ஏ.சி.எம். வழங்கும் சி.டி.க்கள் பரிசு! ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இதயம் தொட்ட இசை

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

கடைசி தேதி 18.12.09

வாசகர் போட்டி

YACM வழங்கும் பரிசுகள்!



* பன்னீர்

எனக்கு ஒரு உண்மை

கொலை, ஆள் கடத்தல், வன்முறை என்ற ரீதியில் போய்க்கொண்டிருக்கும் இன்றைய தொலைக்காட்சி நெடுந்தொடர்களின் மத்தியில் மண்ணின் பெருமையைச் சொல்லும் 'தாயம்' தொடர் கலைஞர் டி.வி.யில் வந்து கொண்டிருக்கிறது. இதன் இயக்குநர் ஜே.பன்னீரைச் சந்தித்தோம்.

நகர்ப்புறக் குடும்பங்களை மையப்படுத்தும் சீரியல்களுக்கு மத்தியில் கிராமியக் களத்தில் கதை சொல்ல அவசியம் என்ன வந்தது?

''இந்தியாவின் இதயம் கிராமங்களில் வாழ்கிறது என்றார் மகாத்மா. அந்த இதயத்தைப் பார்க்க நாம் தவறிவிட்டோம். தமிழக கிராமங்களில் பங்காளிச் சண்டை, அதன் தொடர்ச்சியாக நிகழும் கொலை, சிறைவாசம் இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அன்பு என்றாலும், கோபம் என்றாலும், அதிகமாகவே வெளிப்படுத்தி விடுவார்கள் நமது கிராம மக்கள். இதைச் சரியான களத்தில் பிரதிபலிப்பதே என் நோக்கம்.''

இன்றைய சீரியல்கள் யதார்த்தத்தை மீறியதாகத் தெரிகின்றனவே?

''சினிமாவில் என்னென்ன அபத்தங்கள் இருக்கின்றனவோ அதைவிட அதிகமான அபத்தங்கள் சின்னத்திரையில் அரங்கேறுகின்றன. சினிமாவைவிட ரிஸ்க் குறைவு என்பதால் நல்ல புதிய முயற்சிகளைத் தொலைக்காட்சியில் செய்து பார்க்கலாம். ஒருமுறை நடிகர் சிவகுமார் சொன்னார், 'சீரியல்களில் தொலைக்காட்சியில் காம்ப்ரமைஸ் செய்யாமல் படைப்புகளைத் தர முடியும்' என்று. என்னுடைய எண்ணமும் அதுதான். பெருந்தொடர், நெடுந்தொடர், மெகா தொடர் என்றெல்லாம் தொடர்



தெரிஞ்சாகணும்!

களின் குவான்டிட்டியை வைத்துத்தான் பேசுகிறார்கள். குவாலிட்டியை வைத்துத் தான் சீரியல்கள் கணிக்கப்பட வேண்டும்.''

தாயம் சீரியல் வசனங்கள் பற்றி...?

''அன்னக்கிளி முதல் பல்வேறு படங்களுக்கு வசனம் எழுதிய ஆர்.செல்வராஜ் தயாரித்து வசனம் எழுதுகிறார். 'எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும் சாமி' என்று முதல் மரியாதையில் சாதாரண நடிகர் பேசிய டயலாக்கை இன்றளவும் நாம் மறக்க முடியாது. மனிதர்களைச் சரியாகப் புரிந்து கொண்டு வசனம் எழுதினால், உணர்வு பூர்வமாக இருக்கும் என்பதற்கு செல்வராஜின் வசனங்கள் சிறந்த உதாரணம்.''

உங்களைப் போன்ற திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு சமீபத்தில் பெரிய வரவேற்பில்லையே?

''திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு எப்போதும் சரியான இடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. சினிமாவைப் பாடத்திட்டங்களில் சேர்க்க வேண்டும் என்ற விவாதங்கள் நடைபெறும் காலம் இது. திரைப்படம் தொடர்பான கல்வி, சினிமாவைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.''

இன்றைய குடும்ப உறவுகள் பற்றி...

''குடும்ப உறவுகள்தான் இந்தியாவின் ஆணிவேர். இது கூட்டுக் குடும்பங்கள் மறைந்து தனிக் குடும்பங்கள் அதிகரித்து வரும் காலம். ஒரு சுழற்சி போல மீண்டும் மாற்றம் ஏற்பட்டு கூட்டுக் குடும்பங்கள் வலுப்பெறும் காலம் வரத்தான் போகிறது.''

- ராகவ்குமார்



நீங்கள் கேட்டவை

● ஜி.ரெஜினா பாலு, பழனி

? லிபரான் கமிஷன் அறிக்கை கசிந்து வெளியானதற்குப் பொறுப்பேற்று ப.சிதம்பரம் பதவி விலக வேண்டும் என ஜெயலலிதா வலியுறுத்தி வருகிறாரே?

! ஜெ. அறிக்கைக்கு எதிராக ப.சிதம்பரத்தைத் தாங்கு தாங்கு என்று தாங்கி கருணாநிதி பதிலறிக்கைவிட, அந்த பதிலறிக்கைக்கு விஜயகாந்த் எதிர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அதைப் படித்தால், இந்த வாதத்தில், கருணாநிதி குப்புற விழுந்துள்ளார் என்பதுடன் அவர் மூக்கும் உடைபட்டுள்ளது என்பது தெளிவாகும்.

● எஸ்.ராமசாமி, வடக்குதயிர்பாளையம்

? மத்திய அமைச்சர்கள் அனைவரும் தங்கள் துறையில் செய்த சாதனைகளை அறிக்கையாகத் தமக்கு அனுப்பும்படி பிரதமர் உத்தரவிட்டுள்ளதால் இனி அமைச்சர்களின் செயல்பாடுகள் மேம்படுமா?

! கூட்டணி அரசு நிலைக்க வேண்டுமே என்ற நிர்ப்பந்தத்தால் பலவீனப்பட்டுப் போயின பிரதமரின் உரிமைகள். கிழட்டுச் சிங்கத்தின் அருகே சுண்டெலிகள்கூட விளையாடும்! அப்படித்தான் அமைச்சர்களும் அஞ்ச மாட்டார்கள். அதனால், அறிக்கை அளவுக்கு நிச்சயம் சாதனைகள் இராது!

● மஞ்சுதேவன், நவிமும்பை

? ராகுல் டிராவிட் 11,000 ரன்கள்...?

! டெஸ்ட் பந்தயங்களில் 11,000 ரன்கள் கொண்டு எழுப்பப்பட்ட இந்திய நெடுஞ்சுவர். அதிகம் பேசாத, படபடப்பு இல்லாத, 'நீட்'டான ஆட்டம். அவர் விஷயத்தில் பி.ஸி.ஸி.ஐ. தவறியபோதும் மனிதர் வாய் திறக்கவில்லை. மிகப் பெரிய விஷயம் இது!

● எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

? பெட்ரோலியம், மொபைல் இணைப்புகளைத் தொடர்ந்து பால் விற்பனையிலும் இறங்கிவிட்டதே ரிலையன்ஸ்?

! விற்பனையில் மட்டும் ஈடுபட்டால் விலை உயர்வுக்கே வழி வகுக்கும். உற்பத்திப் பெருக்கத்தில் இறங்க வேண்டும். அப்போதுதான் ரிலையன்ஸ் (நம்பிக்கை) என்ற பெயருக்கு ஏற்ப நடந்து கொண்டதாகும்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? புகையைக் கக்கியபடி சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பழைய வாகனங்களுக்குக் கூடுதல் வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதே - இது வரவேற்கத்தக்கது தானே?

! லஞ்ச ஊழல் பெருகும். பழைய வாகனங்கள் மேலும் அதிகப் புகை கக்கும். மருந்து, உணவுப் பொருட்கள் போல, வாகனங்களுக்கும் expiry date நிர்ணயிப்பதே புத்திசாலித்தனம்.

● என்.சண்முகம், திருவண்ணாமலை

? வேலை வாய்ப்புக்காகவும், சில சலுகைகள் பெறுவதற்காகவும் மதம் மாறுவது பற்றி..?

! கண்ணை விற்றுச் சித்திரம் வாங்காமல் வேண்டுமானால் இருக்க முடியும். ஆனால், பசி வந்திட பத்தும் பறந்துதானே போகும்! அந்தப் பத்தில் மதப் பற்றும் ஒன்று போலும்!

★

● ச.ராஜசேகர், செய்யாறு

? மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ்மல்

சினிமா, முதல்வரின் சொந்த வீடாமே?

தராசு

கசாபை உயிருடன் பாதுகாக்க, கடந்த ஓர் ஆண்டில் ரூ. 31 கோடி செல வழித்திருப்பது வீண்தானே?

! சர்வதேச அளவில் ஆதாரங்களைத் தேட வேண்டியிருந்ததால், இந்த ஓராண்டு செலவை மக்கள் வருத்த மின்றி ஏற்பார்கள். ஆனால், இனி யேனும் வழக்கு துரிதப்படுத்தப் பட்டு தண்டனை நிறைவேற



✱ சர்ச்சைகள் கடந்து...



✱ வீழ்த்திய...



✱... வாதங்கள்



✱... எதிர் அறிக்கை...

வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். நடக் காமல் போனால் வீண் செலவுதான்.

● **கே. கணபதி, சென்னை - 11**

? சீனா - பாக் இடையேயான இராணுவ உறவு இந்தியாவுக்குக் கவலை அளிப்ப தாக உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி கூறுகிறாரே?

! கவலைப்பட்டுப் பிரயோ ஜனமில்லை அந்தோணி யாரே! அமைச்சரவைக் கூட் டத்தில் அயலுறவுக் காயை புத்திசாலித்தனமாக நகர்த்த யோசனை சொல்லுங்க. உங்க பொறுப்பில் உள்ள இரா ணுவத் துறையை, எப்போதும் வியூகங்கள் வகுக்கும் தயார் நிலையில் வைச்சுக் கோங்க.

● **சுப்பு வேதையா சித்திரவேலு,**
கருப்பம்புலம்

? ''இளைஞர்களுக்கு வழி விடும் காலம் வந்துவிட்டது. ஆனால் அவர் களைச் செம்மைப்படுத்த நாங்கள்

இன்னும் சிறிது காலத்துக்குப் பதவியில் இருக்க வேண்டும்,'' என்கிறாரே ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்?

! இத்தனை காலமாக இளைஞர்களைச் செம்மைப்படுத்தாமல் இருந்தது ஏன்; இப்போது 'ராகுல் யுகம்' தொடங்கிய பிறகு செம்மைப் படுத்த அவகாசம் கோருவது ஏன்... என்ற செம்மையான கேள்விகள் எழும். எனவே சப்பைக்கட்டு தான்.



✱ இழந்த உரிமைகள்



✱ செம்மையான சப்பைக்கட்டு!



✱ விரட்டியா கனடா!

● சி.கார்த்திகேயன், சாத்தூர்

? இப்போதும் ஆர்.எஸ்.எஸ். பிடியில்தான் பி.ஜே.பி. இருக்கிறது போல் தெரிகிறதே...?

! ஆமாமாம்; இப்போதும், எப்போதும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கிடுக்கிப் பிடியில்தான்! பி.ஜே.பி. தலைவர் நியமனத்தைக்கூட ஆர்.எஸ்.எஸ். தீர்மானிக்கும் அளவுக்கு!

● மல்லிகா அன்பழகன், சென்னை - 78

? புலி ஆதரவுப் பேச்சாளர் சீமானுக்குத் தடை விதித்து, கனடா நாடு விரட்டி விட்டதே?

! கனடாவுக்கு இருந்த துணிவு நமது மத்திய அரசுக்கோ தமிழக அரசுக்கோ இல்லையே! கனடா ரிடர்ன் சீமான் இங்கே மேலும் பெரிய ஹீரோ ஆவதற்கு அனுமதிக்கப் படுவாரே!

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? ''சினிமா சம்பந்தப்பட்ட விழாவில் கலந்துகொள்ளும் போது, ஏனோ என் சொந்த வீட்டில் இருப்பதைப் போல உணர்கிறேன்'' என்று கருணாநிதி பெருமைப் படுகிறாரே?

! இந்தியா என்கிற சொந்தப் பூந்தோட்டமும் தமிழகம் என்கிற சொந்த மாளிகையும் இருக்கிறபோது, முதல்வர் இப்படித் தம்மைக் குறுக்கிக் கொள்வது துரதிர்ஷ்டமே!


❒. ரூ 150/- பரிசு பெறுபவர்:
எல். மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

★ ரூ.75 பரிசு பெறுபவர்:
ச.ராஜசேகர், செய்யாறு

● கு.குழந்தைவேல், மேட்டுத் திருக்காம்புலியூர்

? சிறந்த சினிமா எப்படி இருக்க வேண்டும்?

! 'அந்தப் படத்தைப் போய்ப் பாரு!' என்று பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லும்படியான படம் சிறந்த படமாக இருக்கும். ○





உ

ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர் துணை

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்

(குருபரிகாரஸ்தலம்)

ஆலங்குடி-612 801, வலங்கைமான் (வட்டம்), திருவாரூர் மாவட்டம்

போன்: 04374-269407, Email:algguru@sancharnet.in

குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா

திருவள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை மாதம் 29ம் தேதி **15-12-2009** செவ்வாய்க்கிழமை இரவு 11.59க்கு அருள்மிகு குருபகவான் மகர ராசியிலிருந்து **கும்ப** ராசிக்கு பிரவேசிக்கிறார்

பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள்:

ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம், மீனம்

அதனை முன்னிட்டு: 04.12.2009 முதல் 11.12.2009 முடிய
24.12.2009 முதல் 3.01.2010 முடிய } இலட்சார்ச்சனை நடைபெறும்.

இலட்சார்ச்சனையில் பங்கேற்று நேரில் பிரசாதம் பெற கட்டணம் ரூ. **125/-**

இலட்சார்ச்சனை பிரசாதம் தபாலில் பெற கட்டணம் ரூ.**150/-**

அனுப்ப வேண்டிய முகவரி: செயல் அலுவலர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி - 612 801. வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்

இங்ஙனம்

பொன்.நந்தகோபால்
செயல் அலுவலர்

வீ.அன்பரசன்
அறங்காவலர் குழு தலைவர்

முனைவர் எஸ்.எம்.பி. துரைவேலன், சித்ரா ரவிச்சந்திரன், அ. தியாகராஜன், கோ.விஜயபாஸ்கரன்
அறங்காவலர்கள்



பாடாய்ப் படுத்தும் பத்து பாய்ன்ட்ஸ்!

A ஆண்கள் பேசும் பத்து பாயிண்ட்கள்:

1. நீ சொல்றது மூளைகெட்டதனமா இருக்கு.
2. உப்புச் சப்பில்லாத விஷயத்துக்குப் போய் கவலைப்படற.
3. ஒண்ணுமில்லாததை ஊதிப் பெரிசாக்கற.
4. நீ சொல்றது ரொம்ப வேடிக்கையா இருக்கு.
5. நான் அதைச் சொல்லவே இல்ல.
6. ஆனா அந்த அர்த்தத்துல சொல்லல.
7. இது இவ்வளவு பிரச்னையா ஆகியிருக்க வேண்டாம்.
8. இது நியாயமே இல்ல.
9. ஏன் நாம இதெல்லாம் அனுபவிக்கணும்?
10. பேசாம விவாகரத்துப் பண்ணிக்கலாம்.

C ...இப்படித்தான் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் விவாதங்களைத் தொடங்கி விவாகரத்தில் முடித்துக்கொள்கிறார்கள்.

உணர்வுகளுக்கு அதிகம் இடம் கொடுக்காத ஆண் மூளைக்கு, பெண்ணின் ஒவ்வொரு செயலும் கேலிக்குரியதாகி விடுகிறது.

உணர்வுரீதியாக எதையும் எதிர்கொள்ளும் பெண்ணின் மூளைக்கு ஆணும் தன்னைப் போலவே சிந்திப்பான் என்ற எதிர்பார்ப்பும், அதனால் ஏமாற்றமும் மிஞ்சி விவாகரத்து வரை வந்துவிடுகிறது.

இதனை எப்படி எதிர்கொள்ளலாம்?

தன் உணர்வுகளை எல்லாம் கொட்டித் தீர்த்து விட்டால், ஒரு பெண்ணுக்கு மனம் அமைதி அடைந்துவிடும். (முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுது கொண்டே அத்தனையும் கொட்டித் தீர்த்து விடுவாள்.) ஆனால், இதனைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஆணுக்கோ மன அழுத்தம் அதிகமாகிவிடும்.

உணர்வுகளுக்கு அதிக இடம் கொடுக்காமல் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது ஆணுக்குப் பிடிக்கும். (மொதல்ல அழுகையை நிறுத்து!) ஆனால், பெண்ணை இது களைப்படையச் செய்யும்.

டாக்டர் **ஏ.வி.ஸ்ரீனிவாசன்**

B **பெண்களின் பத்து பாயிண்ட்கள்:**

1. நான் சொல்றதைக் காதுல போட்டுக்கவே மாட்டேங்கறீங்க.
2. என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறீங்க.
3. நீங்க எப்படி... அப்படிச் சொல்லலாம்?
4. நீங்க நெனைச்ச மாதிரி நான் நெனைக்கல.
5. ஒரு பொண்ணோட இடத்துல இருந்தா தான் என் பிரச்னையைப் புரிஞ்சுக்க முடியும்.
6. ஒங்க கூட பேசவே பயமா இருக்கு.
7. ..... வீட்டுக்காரரெல்லாம் எத்தனை வேலைய இழுத்துப் போட்டுட்டுப் பண்றார்.
8. நீங்க ஏன் பண்ணலை?
9. நீங்க அதை என்கிட்ட சொல்லவே இல்ல.
10. உங்ககூட இனிமே என்னால குப்பை கொட்ட முடியாது.



''கவலைப்படவும் ஆதங்கப்படவும் உனக்கு உரிமை இருக்கு. மொதல்ல நீ சொன்னதை யோசிச்சுப் பார்க்கறேன். அப்புறம் இதைப் பத்தி ரெண்டு பேரும் பேசுவோம்.''

''எனக்குக் கொஞ்சம் டைம் குடு.''

இதுபோன்ற வார்த்தைகள் பிரச்னையை எளிதாக்கும்.

சிறு வயதிலிருந்தே ஸாரி, தேங்க்யூ போன்ற வார்த்தைகளைக் குழந்தைகளுக்குப் பழக்கப்படுத்திவிட்டால், எந்தப் பிரச்னையும் பூதாகரமாய் ஆகாமல் இருக்கும்.

இப்படி வெவ்வேறாகச் சிந்திக்கும் ஆணின் மூளையும் பெண்ணின் மூளையும் ஒரே மாதிரிதான் இருக்குமா என்றால் இல்லை என்பதே பதில்.

இரண்டுக்கும் முக்கியமாகப் பத்து வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(அலசுவோம்)

எழுத்தாக்கம்: லக்ஷ்மி மோகன்

9

இடப்பக்க அறைக்கோளத்தின் மேலும் சில ஆற்றல்கள்:

சிந்தனை ஆற்றல், ஊகம், அறிவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் ஆர்வம், வேகத்திறன் போன்ற திறமைகள் வளர்ச்சி அடைவதுடன் உடலின் வலப்பக்க இயக்கமும் கட்டுப்படுத்தப்படுகிறது.

மிஸ்டர் & மிஸஸ் மேல்மாடி

சீக்ரெட் அஃப் ப்ரெய்ன்



* அசோகவர்ஷினி

சீஸன் மேஜிக்!

''இந்த வருஷம் யாரு சங்கீத கலாநிதி?''- மார்கழிக்குச் சில மாதங்கள் முன்பாகவே ஆர்வக் குறுகுறுப்பு ஆரம்பித்துவிடும். அறிவிப்பு வந்ததும் ரசிக விவாதங்கள் தொடங்கிவிடும். அதோடு லேடீஸ் செக்ஷனில் 'சீசன்'கண் கொண்டு ஷாப்பிங்கும் தொடங்கிவிடும்... அப்படியே மெள்ள மெள்ள சூடு பிடித்து டிசம்பர் சீசன் ஆரம்பிக்க வேண்டியதுதான்... குபீர் என்று இரவோடு இரவாக ஒரு மரம் பூத்து நிற்பது போல, சென்னை சபாக்களில் பட்டின் சரசரப்பும் பூவின் மணமும் ஃபில்டர் காஃபியின் கள்ளிச் சொட்டுச் சுவையும் கலந்த ஒரு பிரத்யேக உலகம் உருவாகிவிடும்! தாம்பரம் முதல் மாம்பலம் வரை, முகப்பேர் முதல் சௌகார்பேட்டை வரை சிதறிப் பரந்துள்ள ரசிகர் கூட்டம் கச்சேரி களங்களை நோக்கிப் படை எடுக்கும். சொகுசு சபா பார்க்கிங் இடத்தில் லேட்டஸ்ட் மாடல் கார்களையும் சேர்த்து ரசிக்கலாம். கேன்டீன் போகும்போது, கேஷ் கவுன்டரிலிருந்து சந்தோஷமாக வங்கிக்குப் பணம் கட்டத் தாவியோடும் சபா செயலாளர்களையும் 'தரிசிக்கலாம்'!

இப்படிப்பட்ட பல் சுவை சைட் டிராக்குகளுக்கு நடுவே மெயின் டிராக்கில் மியூசிக் 'ஜம்'மென்று ஓடிக்கொண்டிருக்கும். அப்பா! அதன் மாய சக்திதான் எத்தனை வலிமையானது. கேட்கக் கேட்க அலுக்காத கேதார கௌளை. நேற்று கேட்ட பைரவியின் பிருகா தெறிப்புகள்; இன்று அதே பைரவியின் குழைவான கமகங்கள்... ''ஓ.எஸ்.டி. கேட்கலை நீ...? ஐயோ! நேத்து மிஸ் பண்ணிட்டே...!'' ''போன வருஷம் அகாடமியில பாடினாரே அதைவிடவா!'' போன்ற ரசிகத் தீர்ப்புகள்...

இலேசான குளிரில் இதமான சங்கீத அனுபவத்தைப் போர்த்திக்கொண்டு வெளியே வந்தால், கசகசவென்று வீதியை அடைத்துக்கொண்டு டூ வீலர் ரசிகர்கள். கச்சேரிக்கென்றே குர்தா - ஜீன்ஸில் வரும் இளைஞர்கள். அலங்காரத்தில் சுதா ரகுநாதனுடன் போட்டி போடத் தயாராய் பெண் ரசிகைகள்... (லாஸ்ட் இயர் சுதா கட்டின மாதிரியே பிங்க்ல பெரிய புட்டா வேணும்... என்று தீபாவளிக்குப் பிடித்த பிடிவாதம்!)



''பார்த்து! கீழே பள்ளம். கை பிடிச்சுக்கோ கிராஸ் பண்ணனும்'' என்று தாத்தா பாட்டிகளைத் தள்ளாத வயதிலும் பொறுப்போடு அழைத்து வரும் இளசுகள்.

கலைஞர்களின் மகிழ்ச்சிக்கும் சபா கேஷ் பாக்ஸின் கனத்துக்கும் நிறையவே 'கான்ட்ரிப்யூட்' செய்யும் என்.ஆர்.ஐ சங்கீதப் பிரியர்கள். (அது எப்படித்தான் அவர்களுடைய என்.ஆர்.ஐ அந்தஸ்து முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதோ?) பே ஏரியா, சிகாகோ, ஸியாட்டில்... ஆஸ்டிரேலியா, கானடா... ஐ.டி. துறையின் வளர்ச்சி மறைமுகமாக இசை விழாவுக்குப் போஷாக்கு சேர்த்துக் கொண்டிருக்கிறது!

இந்தக் கதம்ப குதூகலத்தில் முங்கி எழுந்து இசையுடன் மட்டுமே என் சீசன் சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டுவிட்டேன். பின்னே, அப்பாவிடம் என் உணர்ச்சிகளைச் சொன்னால், ''ஆமாம்! அந்தக் காலத்துல மைக்கே இல்லாம மதுரை சோமு பாடுவார்... அந்தக் கச்சேரி மாதிரி வருமா!'' என்பார். ''சுத்த ஸாவேரியைச் சுத்தமா பாட வரலை... அதுக்குள்ள மத்தியான கச்சேரிக்கு மேடை ஏறியாச்சு...'' - அம்மா அலுத்துக் கொள்கிறார்!

''சுப்புடு இல்லாம என்ன சீஸன் வேண்டிக்கிடக்கு? சும்மா சாமரம் வீசற மாதிரி ரெவ்யூ எழுதிக்கிட்டிருக்காங்க...'' தாத்தா தாட்பூட் என்கிறார்!

கேட்டும் கேளாமல், நான் டீ.வி.யை ஆன் செய்கிறேன்... அதிலும் மார்கழி மஹோத்ஸவம்... குளோஸ் அப்பில் கலைஞர்கள்... கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார்கள்... பார்த்துவிட்டு, சின்ன சீஸன் டைரியில் நாளை போவதற்கான கச்சேரியை அலசித் தேர்வு செய்கிறேன்.

''அப்போல்லாம் எம்.எஸ். கச்சேரிக்கு நாங்க மூணு மணிக்கே கியூவுல போய் நின்னுடுவோம்...'' பாட்டியின் மலரும் நினைவுகள் துரத்துகின்றன.

நாளை நம் குழந்தைகள் கம்ப்யூட்டரில் வீட்டிலிருந்தபடி வர்சுவல் கச்சேரிகள் கேட்பார்களோ என்னவோ...? அப்போது அவர்களிடம் சொல்லுவேனாயிருக்கும்... ''அருணா சாயிராமை அந்தக் காலத்துல 'லைவ்'வா கேட்டிருக்கேன் தெரியுமோ...!''

அசோகவர்ஷினி

> ✱ பாரதியார் மற்றும் புரந்தரதாஸர் கவிதை வரிகளுக்கு மெட்டமைப்பதில் நித்யஸ்ரீக்கு அதிக ஈடுபாடு. ✱ அவரது இரு மகள்கள் தேஜஸ்ரீ, தனுஜஸ்ரீ அடிக்கடி அவரைப் பாடச் சொல்லிக் கேட்கும் பாடல்கள் **'மாதவ மாமவ தேவா', 'ராமா ராமா எனராதா'**. ✱ பாட்டி டி.கே.பட்டம்மாள் பயன்படுத்திய தம்பூராதான் இவருக்கு மிகப் பெரிய பொக்கிஷமாம். ✱ வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சுத்தமான சைவ உணவு கிடைக்காமல் போனால், பல விதமான பழங்களை மட்டுமே உண்டு சமாளித்து விடுவார் நித்யஸ்ரீ. **- என்.எஸ்.கே.**
>
> அட்டைப் படம்: **ஸ்ரீஹரி**

வட்டமேஜை

✉ நீண்ட இடைவெளிக்குப் பிறகு வாஸந்தியின் அற்புதமான நடையில் மிகச் சிறந்த சிறு (நெடுங்)கதை! - **கே.வி.நரசிம்மன், ஈரோடு** ✉ 'லிபரான்' அறிக்கை பற்றிய தலையங்கம் மிக அருமை! ஜாதி - மத - இன உணர்வுகளைப் பயன்படுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றும் வழிவகைகள் சட்ட விரோதமானவை என்பதை ஆட்சியாளர்கள் நன்கு உணர வேண்டும். - **டி.வி.ராமமூர்த்தி, சென்னை-119** ✉ தஞ்சாவூர்க்கவிராயரின் 'வாழ்த்து ஒன்று போதும்' சிறுகதை, நண்பர் ஸ்பெஷலுக்குப் பெருமை சேர்த்தது. - **ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்** ✉ உடலால் 'நீ பாதி நான் பாதி'யாக இருந்தாலும் இருவரும் ஒருங்கிணைந்து எழுதக் காரணம் அவர்களுடைய சுத்தமான பாசம்தாங்க! - **ஆர்.ரங்கநாதன், சென்னை - 17** ✉ ரஜினி + ராஜ்பகதூர், சுரேஷ் + பாலா (சுபா) மற்றும் பஞ்சாட்சரம் செல்வராஜன் + மா.அரங்கநாதன் நட்பு... மூன்றும் இதழில் முத்தாய்ப்பாய் இருந்தன. - **எஸ்.ராமசாமி, ஈரோடு** ✉ எழுத்தாளர் பிரபஞ்சன் மற்றும் கவிஞர் தமிழ்மணவாளன் உரையாடலில் நூற்றுக்குநூறு உண்மையான விஷயங்கள் யதார்த்தமாக விளக்கப்பட்டுள்ளன.- **ஆ.லெட்சுமி, சென்னை - 101** ✉ 'கை கொடுத்த தெய்வம்' - படக் காட்சியைத் தலைப்பாக்கி, ஒரு சிறிய வழக்காடு மன்றம் போல, நட்பைப் பற்றிய கருத்துகளை வழங்க வைத்தது தனிச் சிறப்பு! - **ரேவதிப்ரியன், ஈரோடு-1** ✉ நாங்களும் ஃப்ரெண்ட்ஸ்தான்னு இவ்வளவு அருமையாக மிருகங்களின் நட்பைக் காட்சிகளாக அளித்த உங்களுக்குக் கை குலுக்குகிறோம்.- **ஆர்.ஏ.அமுதன், சென்னை - 10.**



சுத்தமான பாசம்!

'நடக்குமென்பார் நடக்கும்' பகுதியில் விருச்சிக ராசியைத் தேடிக் களைச் சிருப்பீங்க. இதோ உங்கள் பலன்கள். (சும்மா ஒரு சேஞ்சுக்குத்தான்...)

வித்தியாசமாகத் தனித்துத் தெரியும் விருச்சிக ராசி நேயர்களே! பலரின் கவனம் உங்கள் மீது குவியும் தருணமிது. விலகியவர் தேடி வருவதும், திணறிக் கொண்டிருந்த தொழில் கிளை விட்டு வளர்வதும், சட்டென மகிழ்ச்சி மழை மேகமாய்க் குவிவதும் நடக்கும் வாரம். மொத்தத்துல உங்க காட்டுல மழைங்க!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

